# உதயன்

31 °C|°F தெளிவான வானம்

சுடர் 30 | கதிர் 292 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆவணி 28, திங்கட்கிழமை 14.09.2015


# கட்டளை பிறப்பித்தோரை போர்க்குற்றவாளியாக அடையாளம் காண்பது கடினமான விடயமல்ல

## ஐ.நா. விசாரணை அறிக்கையில் சூசகம்: கடும் குற்றச்சாட்டுக்களுடன் வருகிறது என தகவல்

கொழும்பு, செப்.14

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கையில், இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும், எவரது பெயரும் அதில் குறிப்பிடப்படவில்லை என்று இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் எங்கு மீறல்கள் இடம்பெற்றது என்ற பரப்பை வைத்து, கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் கட்டளைச் சங்கிலியை அடையாளம் கண்டு, அதில் தொடர்புடையவர்களை அடையாளம் காண்பது கடினமல்ல என்றும் அறிக்கையில் சுட்டிக்காட் டப் பட்டுள்ளது.

ஐ.நா விசாரணை அறிக்கையின் முற்பிரதி கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை அரசிடம் வழங்கப்பட்டது. இந்த அறிக்கை ஐ.நா. இணையத் தளத்தில் இந்த வாரம் எந்த நேரத்திலும் வெளியிடப்படலாம். அது வரை இது மிகவும்

பக்கம் 24.....

## பிரதமர் ரணில் டில்லி பயணம்

### மோடியுடன் பேச்சு; மதிய விருந்துக்கும் ஏற்பாடு

புதுடில்லி, செப்.14

மூன்று நாள் அதிகாரபூர்வ பயணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று பிற்பகல் புது டில்லி செல்லவுள்ளார். இந்தப் பயணத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் பல உடன்பாடுகள் கையெழுத்திடப்படும் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமரின் இந்தப் பயணத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் இணைந்துள்ளனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி

பக்கம் 24.....

## இந்திய மீனவர்கள் 16 பேர் விடுதலை

கொழும்பு, செப்.14

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தை முன்னிட்டு, இலங்கை சிறையிலுள்ள இந்திய மீனவர்கள் 16 பேர் விடுவிக்கப்படவுள்ளனர். இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்பட்ட இவர்கள் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

பக்கம் 24.....


வன்முறைக்கு இடமில்லை - பாதுகாப்புச் செயலர் பக்கம் 02

மீள்குடியமர்வை முன்னெடுக்க அவகாசம் தேவை - மீள்குடியேற்ற அமைச்சர் பக்கம் 03

தத்தளிக்கிறது ஜப்பான் பெரும் வெள்ளப்பெருக்கு பக்கம் 03


## மஹிந்த கொடுத்த 1000 துப்பாக்கி: வெடிக்கிறது சர்ச்சை!

கொழும்பு, செப்.14

மஹிந்த அரசின் காலத்தில் துணை ஆயுதக் குழுவொன்றுக்கு ஆயிரம் ரி-56 ரகத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசாரணையின்போதே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது என்று ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. தற்போது இது குறித்த விசாரணைகளை புலனாய்வுப் பிரிவினர் முடுக்கி விட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

விரிவு 25 ஆம் பக்கத்தில்

## ஜெனிவாவில் மங்கள இன்று விசேட உரை

### நேற்று ஹுசைனையும் சந்தித்துப் பேச்சு



ஜெனிவா, செப்.14

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இன்று ஜெனிவா அமர்வில் உரையாற்றுவார் என இலங்கை அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

உள்ளக விசாரணைப் பொறிமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கை அரசு மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பான விடயங்களே அவரது உரையின் முக்கிய பகுதியாகவிருக்கும் என்றும்

பக்கம் 24.....

## ஜெனிவாவில் இலங்கைக்கு பெரும் சர்வதேசச் சவால்

### தப்பிக்க இருமுனைகளில் கடும் பிரயத்தனம்

ஜெனிவா, செப்.14

ஜெனிவா மனித உரிமை சபை அமர்வில் முன் வைக்கப்படும் போர்க் குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணை அறிக்கைக்கு முகம் கொடுப்பதற்கு எதிர்வரும் நாள்களில் இலங்கை அரசு மிகப்பெரும் சர்வதேச சவாலை எதிர்நோக்கும் என்று இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த சவாலை எதிர்கொள்வதற்காக இலங்கை அரசு இரு முனைகளில் முயற்சிகளை எடுத்துள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ளர் அலுவலகத்தால்

பக்கம் 24.....

## சர்வதேசப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும்

### மனித உரிமை ஆணையாளரிடம் நேரில் சென்று வலியுறுத்த சம்பந்தன் திட்டம்

கொழும்பு, செப்.14

போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்பதை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைனிடம் நேரில் வலியுறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் திட்டமிட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



பக்கம் 24.....

## மஹிந்த வழியிலேயே செல்கின்றது கூட்டாட்சி

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, செப்.14

மஹிந்த காலத்தைப்போன்று தற்போதும் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகின்றது என்றும் அன்றைய குடும்ப ஆட்சி இன்று கூட்டாட்சியாகியுள்ளது என்றும் ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

பக்கம் 24.....

## ஐ.நா. அறிக்கையை கவனமாக ஆராய்கிறார் மைத்திரி

கொழும்பு, செப்.14

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் கையளிக்கப்பட்டுள்ள போர்க்குற்ற விசாரணை அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கவனமாக ஆராய்ந்து வருகின்றார் என்று கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

பக்கம் 24.....

## ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது அமர்வு இன்று ஆரம்பம்

### ஆர்வம்மிக்கதாக அமையும் என்கிறார் சபைத் தலைவர்

ஜெனிவா, செப்.14

ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமைகள் சபையின் 30ஆவது அமர்வு இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகின்றது. 47 நாடுகளை பிரதிநிதித் துவப்படுத்தும் இந்தக் கூட்டத் தொடர் ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி வரையில் இடம் பெறவுள்ளது.

இந்த அமர்வு ஆர்வம்மிக்க தொன்றாக அமையும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைவர் ஜோகிம் ரூக்கர் தெரிவித்துள்ளார். இன்று மனித உரிமைகள் அமர்வின் ஆரம்ப உரையின்

பக்கம் 24.....


After A/L
FOUNDATION COURSES
ACCESS Programme
CAD & BS
Diploma in ENGLISH
BCAS CAMPUS
0777 102 131
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைக்கு இடமில்லை

## பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவிப்பு



கொழும்பு, செப்.14
மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு முழுமையான ஆதரவை வழங்குவேன் என பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

புதிய பாதுகாப்பு செயலாளர் நேற்றுக் காலை மல்வத்து பீடாதிபதியைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டினுள் வன்முறை நிலைமைகளை ஏற்படுத்த முயற்சிக்கும் குழுக்களை எதிர்த்துப் போராடுவதே தனது பிரதான நோக்கம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கடல்வழியாக இடம்பெறுகின்ற சட்ட விரோத செயல்களை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# ரணிலின் வருகையை எதிர்த்து பெங்களூரில் நேற்று ஆர்ப்பாட்டம்

பெங்களூர், செப்.14
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெங்களூரில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று கர்நாடகா தமிழ் மக்கள் இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், நல்லாட்சி, ஜனநாயகம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கும், இலங்கை மக்களின் பாதுகாப்புக்காகவும் அமெரிக்க அரசு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன், உதவிகளை வழங்கும் என இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த மத்திய மற்றும் தெற்காசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஷ்வால் தெரிவித்திருந்தார்.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசால் முன்னெடுக் கப்படவுள்ள உள்ளக விசாரணைக்கு ஆதரவு வழங்கவுள்ள தாக வும் அவர் இதன்போது தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இந்தியா செல்லவுள்ளார்.

இந்நிலையிலேயே அவரது இந்திய வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைக்கு இந்திய மத்திய அரசு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக் காரர்கள் இதன் போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச விசாரணை தவிர்ந்த உள்ளக விசாரணைக்கு இந்திய மத்திய அரசு ஆதரவு வழங்கக் கூடாது எனவும் அவர்கள் இதன் போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இன்று ஆரம்ப மாகவுள்ள நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணமானது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. (ற)

# சர்வதேச விசாரணை கோரிய நடைபயணம் இன்று நிறைவு

## கிட்டுபூங்காவை வந்தடையும்

கிளிநொச்சி, செப்.14
இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரைணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட நடை பயணம் ஐந்தாவது நாளான இன்று கிட்டுப் பூங்காவில் நிறைவடையவுள்ளது.

ஜெனிவாவில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், உள்நாட்டு பொறிமுறை விசாரணையை ஏற்க மாட்டோம் எனும் கோரிக்கைகளை குறித்த நடைபயணம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் ஆரம்பமாகியிருந்தது.

கிளிநொச்சி நகரிலிருந்து ஆரம்பமான நடைபயணம் முதலாம் நாள் நிறைவில் ஆனையிறவை வந்தடைந்தது. அங்கிருந்து இரண்டாம் நாள் பயணம் ஆரம்பிக்கப்பட்டு பளையை வந்தடைந்தது. மூன்றாம் நாள் நடைபயணம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பளையிலிருந்து ஆரம்பித்து கொடிகாமத்தை வந்தடைந்தது. நேற்று கொடிகாமத்திலிருந்து ஆரம்பித்த நடை பயணம் கைதடியை வந்தடைந்தது. இறுதி நாளான இன்று திங்கட்கிழமை கைதடியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ள நடை பயணம் யாழ். நகரைச் சென்றடைந்து அங்கிருந்து கிட்டுப் பூங்கா சென்று நிறைவடையவுள்ளது.

இதேவேளை, குறித்த நடைபயணத்தில் வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோருடன் காணாமல் போனவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்களும் பங்கெடுத்திருந்தனர். (ற-21)

# வேரில் காய்த்த கொய்யாக்காய்



கொழும்பு, செப்.14
பன்னல பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கொறலம் பொத்த, வெல்பல்ல என்ற முகவரியில் வசிக்கும் டபிள்யூ. ஏ. ஆரியதாஸ என்பவரின் வீட்டுத்தோட்டத்தில் கொய்யா மரமொன்றின் வேரில் இருந்து அபூர்வமாக கொய்யாக்காய் ஒன்று காய்த்துள்ளது.

அவரது மனைவியார் வீட்டுத் தோட்டத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கையில் இந்தக் கொய்யாக்காய் அந்த மரத்தின் வேரிலிருந்து உருவாகியிருந்ததை அவதானித்துள்ளார்.

அவர்கள் வீட்டுத் தோட்டத்திலுள்ள இந்த கொய்யா மரத்தின் வயது 15 ஆண்டுகள் என்றும், இவ்விதம் வேரில் இருந்து கொய்யாக் காய்கள் முன்னெப்போதும் காய்த்திருக்கவில்லை எனவும் ஆரியதாஸ தெரிவித்துள்ளார். (ற-22)

# சம்பூர் மக்களுக்கு வீடுகளமைக்க கனடாவில் நேற்று நடை பயணம்

சம்பூரில் மீளக்குடியமர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் நோக்குடன், கனடாவில் ஏற்பாடு செய்யப்பட்ட நடை பயணம் நேற்று இடம்பெற்றது. கனேடிய நேரம் நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி, இரண்டு மணி நேரம் இடம்பெற்ற, இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் கலந்துகொண்டுள்ளார்.

கனேடியத் தமிழர் பேரவையோடு திருகோணமலை நலன்புரிச் சங்கம் – கனடா, இணைந்து இந்த நிதி சேர் நடை பயணத்தை முன்னெடுத்திருந்தன.

10 ஆண்டு காலத் துயர்மிக்க ஏதிலி வாழ்வின் பின் 253 குடும்பங்கள் சம்பூரில் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 41 குடும்பங்களுக்கு வீடு, கழிவறை மற்றும் கிணறுகளை அமைத்து உதவ நூறாயிரம் டொலர்களைச் சேகரிப்பதே நிதி சேர் நடை பயணத்தின் இலக்காகும். இந்த 41 குடும்பங்களும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்பதும் அதிகமான குடும்பங்கள் போரால் குடும்பத் தலைவர்களை இழந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நடை பயணம் இசுகாபரோ, தொம்சன் நினைவுப் பூங்காவிலிருந்து கனேடிய நேரம் காலை 8.30 மணிக்கு நேற்று ஆரம்பமாகியது. சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்ற இந்த நடை பயணத்தில், கனேடிய வாழ் தமிழர்கள் பலரும் பங்கெடுத்திருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கனேடியக் கிளையின் செயலாளரது அழைப்பின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த நடைபயணத்தில் கலந்து கொண்டிருந்தார். (ற-5)

# சர்வதேச பொறுப்புக் கூறலை கோரி கையெழுத்து வேட்டை

## நேற்று வவுனியாவில் நடைபெற்றது



வவுனியா, செப்.14
சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறையை வலியுறுத்தி நடத்தப்படும் கையெழுத்து வேட்டை நேற்று வவுனியாவில் நடத்தப்பட்டுள்ளது. சர்வதேச பொறுப்புக்கூறல் தமிழர் செயற்பாடுக் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

வவுனியா கோயில்குளம் மகா விஸ்ணு தேவஸ்தானத்தில் நடைபெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பமானது.

அதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான தியாகராஜா, இந்திரராஜா, நடராஜா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் ரஜீவன், ஜி. கே. நாதன், சிவரதி மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (ற)

# வங்கி பாதுகாப்பு பெட்டகத்தை உடைக்க முயன்றவர் சிக்கினார்

## பொலிஸ் நிலையத்தில் அலாரம் அடித்ததால்

கொழும்பு, செப்.14
வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தை உடைத்து பணத்தைத் திருட முற்பட்ட நபரொருவரை வங்கிக்குள் வைத்தே பொலிஸார் அதிரடியாக மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் நடந்துள்ளது.

வங்கியின் உள்ளே புகுந்த திருடன் பாதுகாப்புப் பெட்டகம் இருந்த அறையின் கதவில் ஓட்டை போட்டு உள்ளே நுழையும்போது பாதுகாப்பு அலாரம் செயற்பட்டு, இங்கிரிய பொலிஸில் அபாய எச்சரிக்கை மணி ஒலித்துள்ளது.

இதனையடுத்து அதிரடியாக செயற்பட்ட பொலிஸார் வங்கியை விட்டு திருடன் வெளியேற முன்பதாகவே திருடனை மடக்கிப் பிடித்துள்ளனர்.

பொலிஸாரின் விசாரணையில் இருந்து அதே பிரதேசத்தை சேர்ந்த மலர்ச்சாலை நடத்தும் ஒருவரின் மகனே கடன் தொல்லை காரணமாக வங்கிக் கொள்ளையில் ஈடுபட முயன்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதேவேளை குறித்த சந்தேக நபர் கொண்டு வந்திருந்த இயந்திர உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற-ரி)

# தொழு நோயாளர் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிக்கின்றது

## உலக சுகாதார அமைப்பு கூறுகின்றது

கொழும்பு, செப்.14
தொழு நோயாளர்கள் அதிகமாகவுள்ள முதல் ஆறு நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும் என உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை, நேபாளம், பங்களாதேஷ், இந்தோனேசியா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகள் தொழு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நாடுகள் என சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவில் மட்டும் ஒரு லட்சத்து 26 ஆயிரம் தொழு நோயாளிகள் இருக்கின்றனர் என்று குறிப்பிடப்படுகின்றது.

ஏனைய ஆறு நாடுகளில் ஆண்டு தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழு நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர் என்று உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பாதுகாப்பு செயலாளர் பஸ்நாயக்க காத்திருப்பு நிலையில்

கொழும்பு, செப்.14
அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பி.எம்.யூ.டி.பஸ்நாயக்க எந்தப் பதவியும் வழங்கப்படாமல், காத்திருப்பு நிலைக்கு (pool) அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.
அண்மையில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற பின்னர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மாற்றப்பட்டனர்.
கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த, பி.எம்.யூ.டி.பஸ்நாயக்கவும் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, புதிய செயலராக, கருணாசேன ஹெற்றியாராச்சி நியமிக்கப்பட்டார்.
இதேவேளை, பாதுகாப்புச் செயலர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட, பி.எம்.யூ.டி.பஸ்நாயக்கவுக்கு வேறு பதவிகள் ஏதும் வழங்கப்படவில்லை.அவர் காத்திருப்பு நிலையில் உள்ள இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுடன் இணைந்து கொண்டுள்ளார்.
அண்மைய மாற்றங்களின் பின்னர், கடற்றொழில் அமைச்சின் செயலர் என்.டி.ஹெற்றியாராச்சி உள்ளிட்ட 7 நிர்வாக சேவை அதிகாரிகள் காத்திருப்பு நிலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.
இதேவேளை, முன்னர் இராஜாங்க அமைச்சுக்களின் செயலர்களாக இருந்த அதிகாரிகள் பலருக்கு அமைச்சுக்களின் செயலர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# பிரதி அமைச்சரின் மைத்துனர் மன்றில் மன்னிப்பு கோரினார்

## பொலிஸை கடமை செய்ய விடாது தடுத்த குற்றத்துக்காக

யாழ்ப்பாணம், செப்.14
பொலிஸ் உத்தியோகத்தரைக் கடமை செய்ய விடாமல் அவருக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்த பிரதி அமைச்சர் ஒருவரின் மைத்துனரை குறித்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் மன்னிப்பு கேட்குமாறு பணித்த நீதிமன்றம் அவரை கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்தது.
யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
போக்குவரத்து பொலிஸார் ஒருவருக்கே குறித்த நபர் தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ளார். அதனால் பொலிஸார் அது குறித்து நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.
வழக்கு முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த சந்தேகநபர் நீதிமன்றில் தான் சுற்றவாளி என்று கூறியிருந்தார். அதனால் அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
கடந்த 8.ஆம் திகதி குறித்த வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது. அதன்போது சகோதரரான குறித்த எதிரி சார்பாக தோன்றிய சட்டத்தரணி எதிரி குற்றத்தை ஏற்றுக் கொள்கின்றார் என்று தெரிவித்தார்.அதையடுத்து எதிரியை குறித்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் நீதிமன்றில் வைத்து மன்னிப்புக் கேட்குமாறு நீதிமன்று பணித்தது. அதனையடுத்து அவர் பொலிஸ் உத்தியோகத்தரிடம் மன்னிப்புக் கேட்டார்.
அதனையடுத்து அவரை எச்சரித்த நீதிமன்று, 'பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவிப்பதோ அல்லது அச்சுறுத்துவதோ பாரதூரமான குற்றம். பொலிஸார் கடமையிலிருந்து . தவறும்போது அது தொடர்பாக உயரதிகாரிகளுக்கோ பொலிஸ் ஆணைக் குழுவுக்கோ முறைப்பாடு செய்யமுடியும். - எனத் தெரிவித்து எதிரியை கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்தார். (ற-4,103)

# தலைமைத்துவப் பயிற்சி விரைவில் நிறுத்தப்படும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப் .14
கடந்த அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நிறுத்தப்படும் என்று பல்கலைக்கழக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
குறித்த காலப்பகுதியில் அந்த மாணவர்களுக்கு சர்வதேச மொழிப் பயிற்சி வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.
மகாநாயக்க மற்றும் அஸ்கிரிய பீட தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டபின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைச் சுதந்திரமாக மேற்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதே புதிய அரசின் நோக்கம். அத்துடன் மாணவர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிப்போம்.
குறித்த பயிற்சி நெறியை நிறுத்துமாறு ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்கள் முன்னர் கோரிக்கை விடுத்து வந்ததோடு, அவ்வாறு பயிற்சி வழங்குவதற்கு எதிராகக் கடும் கண்டனமும் தெரிவித்து வருகின்றன. அவ்வாறு வழங்கப்பட்ட பயிற்சியில் ஒரு சில மாணவர்கள் உயிரிழந்தமையும் அந்தளவுக்கு பயிற்நி நெறி மோசமானதாக அமைந்துள்ளதாகவும் சங்கங்கள் குற்றம் சுமத்தியிருந்தன. ஆனால் அவற்றை கடந்த அரசு கவனத்தில் எடுத்திருக்கவில்லை. இந்நிலையில் ஆட்சி மாறி புதிய அரசு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை நிறுத்தவுள்ளோம்.- என்றார். (ற-4)

# மீள்குடியமர்வை முன்னெடுக்க இரண்டு மாத அவகாசம் தேவை

## நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு



வலி.வடக்கு, செப்.14
மீள்குடியமர்வு விடயத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இரு மாத கால அவகாசம் கோரிய மீள்குடியேற்ற புனரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் படிப்படியாக மீள்குடியமர்வு நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.
புதிதாக அமைச்சுப் பதவிப் பொறுப்பேற்ற பின்னர் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார்.
அங்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத் தலைவர் எஸ்.குணபாலசிங்கம் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் ஆகியோரிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இரு மாத கால அவகாசத்தை வழங்குமாறும் படிப்படியாக மீள்குடியமர்வு நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதாகவும் அதன்போது அமைச்சர் தெரிவித்துள்ளார்.
வழிபாட்டுக்காக ஆலயம் சென்ற அமைச்சரை ஆலயப் பிரதம குரு சிவசிறி இரத்தினசாபாபதிக் குருக்கள், ஆலய புனரமைப்பு சபையின் தலைவர் எஸ்.பேரின்பநாதன், வலி.வடக்கு பிரதேச செயலர் எஸ்.சிறிமோனன், வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் வரவேற்றனர். (ற-86)

# காணாமற்போன சிறுமி சடலமாக நேற்று மீட்பு

கொழும்பு,செப்.14
திவுலுபிட்டிய-கொட்ட தெனிய பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை காணமற்போயிருந்த சிறுமி நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
குறித்த சிறுமி தனவு பாட்டியுடன் கடந்த சனிக்கிழமை இரவு நித்திரைக்கு சென்ற நிலையில் அதிகாலை காணாமற்போயுள்ளார். இது தொடர்பில் சிறுமியின் உறவினர்களினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
நேற்று குறித்த சிறுமி அவரது வீட்டிற்கு பின்னால் உள்ள விகாரை போதி மரம் ஒன்றின் கீழ் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.
சிறுமி தொடர்பில் கிடைக்கபெற்ற முறைப்பாட்டை அடுத்து மூன்று பொலிஸ் குழுவினர் சிறுமியை தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.
இந்நிலையிலேயே வீட்டில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ள அரவிந்தவத்த எனும் இடத்தில் இருந்து சிறுமி உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.
சிறுமி மீட்கப்படும் போது உடை கலைக்கப்பட்டிருந்தது என்றும் இது அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார். (ற-ரி)

# போதையில் தனக்குதானே தீ மூட்டிய குடும்பஸ்தர் சாவு

## கண்ணகிபுரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப் 14
மது போதையில் தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்ட இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.
கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் விக்னேஸ்வரன் சசிகரன் (வயது 29) என்பவரே உயிரிழந்தார்.
அவர் திருமணம் செய்து குறித்த வீட்டில் மனைவியுடன் வாழ்ந்து வருகிறார். அந்த வீடு அவருக்குச் சீதனமாக வழங்கப்பட்ட வீடு. இந்த நிலையில் திருமணமாகி சுமார் ஒரு வருடம் ஆகும் நிலையில் அந்த வீட்டைச் சீதனமாகத் தந்த மனைவியின் பெற்றோரை வீட்டைவிட்டு வெளியேறுமாறு அவர் கட்டாயப்படுத்தி வந்ததோடு மனைவியைத் துன்புறுத்தி வந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முன்னர் வீட்டை விட்டுப் போகச் சம்மதித்த மனைவியின் பெற்றோர் குறித்த குடும்பஸ்தர் மனைவியைத் தொடர்ந்து [illegible] வரும் நிலையில் தமது மகளைத் தனியே மருமகனுடன் விட்டுச் செல்ல அவர்கள் சம்மதிக்கவில்லை. அதனால் தினமும் போதையில் வரும் குறித்த குடும்பஸ்தர் மனைவியைத் துன்புறுத்துவதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையில் சம்பவதினமன்று இரவு போதையில் வந்த குறித்த குடும்பஸ்தர் கையில் தடியுடன் நெருங்கும் போது மனைவி அங்கிருந்து ஓடி மறைந்து கொண்டார் என்றும், அதனால் அயல்வீடான மனைவியின் சகோதரனின் வீட்டுக் குச் சென்று அங்கு கேட்டுவிட்டுப் பின்னர் தனக்குத் தானே மண்ணெணெய் ஊற்றி தீ மூட்டிக் கொண்டுள்ளார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதனால் அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அது பயனளிக்காது நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (ற-4)

# மனைவிக்காக கணவன் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில்

கொழும்பு, செப்.14
வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் சென்ற தனது மனைவியை டுபாயில் உள்ள வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்று துன்புறுத்துவதாகக் கூறி நபர் ஒருவர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
தனது இரு பிள்ளைகள் சகிதம் அவர் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். தேவகுவ, ஹினுக்கல பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவரின் வீட்டிற்கு முன்னால் அவர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
25 வயதுடைய அந்தப் பெண் 3 மாதங்களுக்கு முன்னர் வேலை நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளார். கலேவல பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றினால் சுற்றுலா விசாவில் அந்தப் பெண் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டதாக பெண்ணின் கணவர் தெரிவித்துள்ளார்.
தனது மனைவியை மீண்டும் நாட்டுக்கு வரவழைத்துத் தருமாறு வேண்டியே அவர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (வ)

# கஞ்சா விற்றவர் கைது

கொழும்பு, செப்.14
மொனராகல மாவட்டத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட கஞ்சாவை விற்பனை செய்வதற்காக சிறிய பொதிகளில் அடைத்துக் கொண்டிருந்த ஒருவரை புத்தளம் மாவட்டத்தின் நாத்தாண்டி பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளதாக மாரவில் பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர் 62 வயதுடைய ஓய்வுபெற்ற அரச ஊழியர் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
இவ்வாறான குற்றச்சாட்டுகளின் கீழ் இவருக்கு எதிராக ஏற்கனவே பல வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் கடும் வறட்சி: வரண்டு போயுள்ள குளங்கள்

## 15 ஆயிரம் குடும்பங்கள் தண்ணீருக்கு திண்டாட்டம்

மட்டக்களப்பு, செப்.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியின் காரணமாக பெருமளவிலான சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் வற்றிப்போயுள்ளன என்று மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் எம்.வடிவேல் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன. அவற்றுள் செங்கலடிப் பிரதேச செயலர் பிரிவில் ஐந்து குளங்களும் ஏனைய இடங்களில் ஒன்பது குளங்களும் உள்ளன. இவற்றுள் மதுரங்கேணி பெரியகுளம், மயிலடித்தீவு குளம், பழுகாமம் குளம், செவகப்பத்து குளம், பேராத்தீவு பத்து மற்றும் மஹிலூர் குளம் என்பன முழுமையாக வற்றிப்போய் உள்ளன.

கடுக்காய்முனை குளத்தில் ஐந்து அடிக்கு நீர் உள்ளது. புலுகுணாவெய், அடைச்சகல் போன்ற குளங்களும்கூட பெருமளவில் வற்றிப் போயுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குளங்களை அண்டியுள்ள பிரதேசங்களில் காணப்படும் கடும் வறட்சியின் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள வயற் செய்கைகளும் கூட அழிவடைந்துள்ளன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கடும் வறட்சி காரணமாக 15 ஆயிரம் குடும்பங்கள் தண்ணீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்திருப்பதாகவும் அவர்களுக்கு பவுஸர்கள் மூலம் தண்ணீர் வழங்கப்படுவதாகவும் மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற-22)

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப். 14

வடக்கு மாகாண சபையில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றி முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III இற்கு தரமுயர்த்தப்பட்டு அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட முகாமைத்துவ உதவியாளர்களுக்கான அறிமுகப் பயிற்சி நெறி ஒன்று இன்று 14 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி வரையான ஐந்து நாள்கள் யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகில் நடைபெற உள்ளது என்று வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகின் பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார்.

மேற்படி முகாமைத்துவ உதவியாளர்களாக நியமனம் பெற்ற அனைவரையும் இந்தப் பயிற்சி நெறியில் தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ற-288)

## முன்பள்ளி மாணவரின் தேர்ச்சி கண்காட்சி

அச்சுவேலி, செப்.14

அச்சுவேலிகுழந்தையேசுபாலர் முன்பள்ளி மாணவர்களின் கற்றல் தேர்ச்சிக் கண் காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறும்.

அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி றெசற் தவநாயகம் பிரதமவிருந்தினராகவும், சிறப்புவிருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் எம்.ஞானலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-11)

## பரீட்சை முடிவுகள் அனுப்பி வைப்பு

வரணி, செப். 14

வடமாகாண சபையின் கீழ் வெற்றிடமாக உள்ள வருமான வரி பரிசோத கர் பதவி தரம் 111 இற்காக இடம்பெற்ற பரீட்சையின் முடிவுகள் தற்சமயம் குறித்த மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. குறித்த பரீட்சை 2015 மே மாதம் 11 ஆம் திகதி இடம் பெற்றது. (ற-122)

## சூதாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது

மது விற்பனை நிலையத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐந்து பேர் வட்டுக்கோட்டைப் பொலிஸா ரால் நேற்று இரவு சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மூளாய் பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தின் பின்னால் உள்ள மறைவிடம் ஒன்றில் இருந்து இந்த ஐந்து பேரும் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இதுகுறித்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படி திடீரென சுற்றி வளைப்பு மேற்கொண்ட போதே குறித்த ஐந்து பேரும் சிக்கியுள்ளனர்.

அவர்களிடம் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (ற-86)

## விபத்தில் முதியவர் சாவு மோதியவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், செப்.14

வீதியைக் கடந்த வயோதிபரை மோட்டார் சைக்கிளில் சென்றவர் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். வயோதிபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

சங்கானையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காரைநகரைச் சேர்ந்த ரி.நவரத்தினம் (வயது 76) என்பவரே உயிரிழந்தவராவார்.

வழமைபோன்று சங்கானைச் சந்தைக்குச் சென்றுவரும் அவர் அன்றையதினமும் பஸ்ஸில் சென்று சங்கானைச் சந்தியில் இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டபோதே அவ்வழியே மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் அவரை மோதியுள்ளார். மோதியவர் நிற்காது தப்பிச் சென்றுள்ளார்.

அங்கு கூடியவர்கள் அந்த வயோதிபரைச் சங்கானையில் சேர்த்தனர். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (ற-4)

## ஆசிரியர் வெற்றிடங்கள் டிசம்பருக்குள் நிரப்பப்படும்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.14

நாடளாவிய ரீதியிலுள்ள அரச பாடசாலைகளில் நிலவும் சகல பாடங்களுக்குமான ஆசிரியர் வெற்றிடங்களையும் இவ்வருட இறுதிக்குள் நிரப்புவதற்கான வேலைத் திட்டத்துக்கான அறிவிப்பை விடுத்துள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

கிராமப்புற கஷ்டப் பிரதேச பாடசாலைகளிலேயே அதிகளவான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், கணிதம், விஞ்ஞானம், பௌதீகவியல், தொழில்நுட்பவியல், பாடங்களுக்கு கூடுதலான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் போது வெற்றிடங்கள் உள்ள பாடசாலையை குறிப்பிட்டு விண்ணப்பம் கோரப்படுமெனவும், தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் குறித்த பாடசாலையில் 5 வருடம் கடமையாற்றும் வகையில் கல்வியமைச்சுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள வேண்டுமெனவும் அந்த ஒப்பந்தத்தில் கோரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த 5 வருட காலப்பகுதிக்குள் இடமாற்றம் பெறவோ, வெளிநாடு செல்லவோ முடியாதெனவும் அவ்வாறு செல்ல முயற்சித்தால் நியமனங்கள் இரத்துச் செய்யப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கிலும் கிராமப்புறப் பாடசாலைகள் பலவற்றில் சில பாடங்களுக்கான ஆசிரிய வெற்றிடங்கள் இன்றுவரை நிரப்பப்படாமல் உள்ளன. இதனால் மாணவர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் கிளிநொச்சியிலும் பாடசாலையில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் மேலும் விரிவடையும் அளவுக்கு நிலைமை உள்ளது. புத்தூரிலுள்ள பாடசாலையிலும் மாணவர்களின் பெற்றோர் அதே கோரிக்கையை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அவ்வாறு வடக்கில் இந்த நிலைமை இன்னும் சீர்செய்யப்படாமல் உள்ளது.

குறிப்பாக ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றன. அவை இன்னும் சீர்செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற-4)

## தனிப் பெற்றோரைக் கொண்ட குடும்பங்களுக்கு நிதி உதவி

அச்சுவேலி, செப். 14

வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் தனிப் பெற்றோரைக் கொண்ட 45 குடும்பங்களுக்கு தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கு 8 லட்சத்து 6 ஆயிரம் ரூபாவை மத்திய அரசின் சமூக சேவைகள் நலன்புரி கால்நடை அபிவிருத்தி அமைச்சு வழங்கியுள்ளது.

தாய் அல்லது தந்தையை இழந்த தனிப் பெற்றோரைக் கொண்ட தொழில் முயற்சி இல்லாத குடும்பங்கள் தொழில் முயற்சியை மேற்கொள்ளுவதற்கு வசதியாக இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை முதலீடாக கொண்டு குறித்த குடும்பத்தினர் கோழி வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு, தையல் முயற்சி, அலங்காரப் பொருள் உற்பத்தி போன்ற தொழில் முயற்சி ஒன்றில் ஈடுபடவுள்ளனர். இந்த வகையில் 14 குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா விகிதமும் 22 குடும்பங்களுக்கு 18 ஆயிரம் ரூபா விகிதமும் 8 குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா விகிதமும் ஒரு குடும்பத்துக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகிறது.

பயனாளிகள் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவை பெற்றுக் கொள்ளலாம் என வலி. கிழக்கு பிரதேசசெயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (ற-11)

## விவசாயிகளுக்கு நட்டஈடு

வவுனியா, செப்.14

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையால் விவசாயிகளுக்கு உரமானிய காப்புறுதி திட்டத்தினூடான நட்ட ஈடு வழங்கும் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் பந்துல ஹரிச்சந் திராவால் பயனாளிகளுக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர், கமநல உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வவுனியா கமநலக்காப்புறுதிச்சபை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபையின் பதில் உதவிப் பணிப்பாளர் திரு. பு. பூரணச்சந்திரன் தெரி வித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தில் 420 விவ சாயிகளுக்கு 16 லட்சத்து 36 ஆயிரத்து 624 ரூபா இழப்பீடு வழங் கப்படவுள்ளது. முதற்கட்டமாக 90 விவசாயிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோ ருக்கு அவர்களது பிரதேசத்திலி ருக்கும் கமநல நிலையம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன் கமத்தொழில் காப்புறுதிச்சபையால் நடைமுறைப்படுத்தப்படும் காப்புறுதி நட்டஈடுகள் 49 கமக்காரர்களுக்கு ரூபா 20 லட்சத்து 78 ஆயிரத்து 211 ரூபா அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. - என்றார். (ற)

## பலவந்தமாகப் பனைகளை தறித்து சென்றது கடற்படை

### மன்னார், பூலான் குடியிருப்பு கிராம மக்கள் குற்றச்சாட்டு

மன்னார், செப்.14

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கட்டுக்காரன் குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பூலான் குடியிருப்பு கிராமத்தில் உள்ள மன்னார் ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான காணியில் காணப்பட்ட பெண் பனை மரங்களை அப்பகுதியில் உள்ள கடற்படையினர் பலவந்தமாக தறித்துச் சென்றுள்ளனர் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான குறித்த கிராமத்தில் உள்ள காணியில் அதிகளவான பனை மரங்கள் உள்ளது. குறித்த பனை மரங்களால் அந்தக் கிராம மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு பலனை அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பனை மரங்கள் உள்ள குறித்த பகுதிக்கு அத்துமீறி உழவு இயந்திரத்தில் சீருடையுடன் சென்ற கடற்படையினர் அங்கிருந்த 5 பெண் பனைகளைத் தறித்துச் சென்றுள்ளனர் என்று அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிராம மக்கள் மன்னார் ஆயர் இல்லத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதோடு தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமான முறையில் மரங்களை வெட்டி கொண்டு செல்பவர்களுக்கு எதிராக மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைத்து தண்டப்பணத்தையும் அறவீடு செய்கின்றனர்.

எனவே தலைமன்னார் பொலிஸார் பயன் தரக்கூடிய குறித்த 5 பனை மரங்களையும் சட்ட விரோதமான முறையில் வெட்டிய கடற்படையினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் சட்டம் விரைவில் நடைமுறை

## ஊடக அமைச்சர் கயந்த தெரிவிப்பு



கொழும்பு, செப்.14
தகவல் அறியும் உரிமைச் சட்டம் நாடாளுமன்ற ஒப்புதலுடன் விரைவில் நடைமுறைப் படுத்தப்படும் என்று ஊடக அமைச்சர் கயந்த கருணா திலக தெரிவித்துள்ளார்.

கண்டிக்குச் சென்று அஸ் கிரிய மற்றும் மல்வத்து பீட மகா நாயக்கர் களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட அமைச் சர், அதன் பின்னர் ஊடகங் களுக்குக் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:–

கடந்த 100 நாள் அரசில் தகவல் அறியும் உரி மைச் சட்டத்தை நிறை வேற்றிக் கொள்ள முயற்சித்தும், பல்வேறு காரணிகளால் அந்த விடயம் தடைப்பட்டுப்போனது.

தற்போது தேசிய அரசு அமைக் கப்பட்டுள்ள நிலையில் அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன. மிக விரைவில் நாடாளுமன் றத்தின் ஒப்புதல் பெற்று தகவல் அறி யும் உரிமைச் சட்டம் நடை முறைப் படுத்தப்படும். – என்றார். (ற)

# தேசியத் திட்டங்களுக்காகவே தேசிய அரசு அமைக்கப்பட்டது

## பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, செப்.14
113 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது சிரமமான காரியமல்ல என்று பிரதி அமைச் சர் அஜித் பெரேரா தெரிவித்துள் ளார்.

தனியாக ஆட்சி அமைக்க முடியாத காரணத்தால் தேசிய அரசு அமைக் கப்படவில்லை. தேசிய திட்டங் களுக்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மைப் பலம் அவசியம் என்ப தாலேயெ தேசிய அரசு அமைக் கப்பட்டது என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

எங்களது கட்சியில் பதவிகளுக் கான போட்டிகள் எதுவும் கிடை யாது. வேறு ஒரு தரப்பே இவ்வாறு போட்டியிடுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# உரிய நேரத்தில் சரியான தீர்மானம் எடுக்கவில்லை

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



எதிர்க்கட்சித் தலைவரை நியமிப் பது தொடர்பில் சரியான நேரத்தில் சரியான முறையில் தீர்மானங் களை எடுத்திருந்தால் தற்போதைய நிலைமையை விட சிறப்பான நிலை மையை ஏற்படுத்தியிருக்கலாம் என்று தெரிவித்துள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தேசிய அரசு என்பதை விட இணக்கப்பாட்டு அரசு என்பதே பொருத்தமான தாகும் என்றும் தெரிவித் துள்ளார்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் அமைச்சராகப் பதவியேற் றுள்ள அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கடமைகளைப் பொறுப் பேற்று பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:–

இரண்டு கட்சிகளுக்கும் மக்கள் பெரும்பான்மையை வழங்க வில்லை. தேசிய அரசொன்று அமைக் கப்பட வேண்டுமென்பதற்காகவே மக்கள் இவ்வாறான தீர்ப்பை தேர் தலில் வழங்கினார்கள். எனவே கொள்கையொன்றின் வரையறைக் குள்ஆட்சியொன்றை ஏற்படுத்தியிருந் தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

தற்போதைய ஆட்சிக்கு தேசிய அரசு எனக் கூறுவதை விட இணக்கப் பாட்டுஆட்சி எனக்கூறுவதே பொருத் தமானதாக அமையும். எதிர்க்கட் சித் தலைவரை நியமிக்கும் விடயத் தில் சரியான நேரத்தில் சரியனமுறை யில் சரியான முடிவு எடுக்கப்பட்டிருந் தால் இதனை விடச் சிறப்பான நிலைமை ஏற்பட்டிருக்கும்.

2004 மற்றும் 2010 ஆம் ஆண்டு தேர்தல்களின் போது தேசியப் பட்டியல் தொடர்பாக எவ்விதமான குறைபாடுகளும் இருக்கவில்லை. குற்றச்சாட்டுகளும் இருக்கவில்லை. ஆனால் இம்முறை தேசியப் பட்டியல் தொடர்பில் எனது பங்களிப்பு கிடை யாது. எனவே என்மீது எந்தக் குற் றச் சாட்டையும் முன்வைக்க முடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் செயலாளர் என்ற ரீதியில் நான் ஒரு தீர்மானத்தை எடுத்தேன். தேர்தலின் பின்னர் கட்சியுடன் பேச்சு நடத்தி எதிர்க்கட்சித் தலைவராக நிமால் சிறிபால சில்வாவை நியமிப்பது தொடர்பில் சபாநாயகருக்கு கடித மொன்றை கையளித்தோம்.

அப்போது நாம் அரசின் பங்காளி களாக இருக்கவில்லை. பின்னர் நான் ஐ.ம.சு.முன்னணியின் செயலா ளர் பதவியிலிருந்து வெளியேறி னேன். வெளிநாடு சென்றேன். பின் னர் திரும்பி வந்த போது அனைத் தும் மாற்றமடைந்திருந்தது.

எனக்கெதிராக தடையுத்தரவு நடை முறையில் இருக்கையில் சிலர் ஊடகவியலாளர்கள் மாநாடுகளை நடத்தினார்கள். தேங்காய் உடைத் தார்கள். நான் மேற்கொண்ட முயற் சிகளைக் கண்டுகொள்ள வில்லை. புரிந்து கொள்ளவும் இல்லை. – என்றார். (ற)

# மகிந்தவும், அவரது கூட்டணியுமே சு.கட்சியின் தோல்விக்குக் காரணம்

## சாடுகின்றார் அர்ஜுன ரணதுங்க

கொழும்பு, செப்.14
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்சவும், அவருடன் இருந்த கூட்ட ணியுமே கடந்த பொதுத் தேர்தலில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி தோல் வியடையக் காரணம் என்று துறை முகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க குற் றம் சுமத்தியுள்ளார்.

வெற்றிபெற்ற தலைவர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் இணைந்து செயற்படாது தோல்வி கண்டவர்கள் பின்னால் செல்லும் அரசியல் கலாசாரத்தை மகிந்த ராஜபக்ச உருவாக்கியுள்ளார் என் றும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் தலதா மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மாகா நாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச் சர் அர்ஜுன ரணதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:–

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யில் அங்கம் வகிக்கும் விமல் வீர வன்ச, உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் சிறி லங்கா சுதந்திரக் கட்சியை அழித்து விட் டனர்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியில் அரசியல் செய்த பெரும்பாலான அரசியல்வாதிகளை மகிந்த ராஜ பக்சவே தோல்வியடையச் செய் தார். அவர் சொல்வதைச் செய்யாத, அவரது பின்னால் செல்லாததன் காரணமாகவே திறமையான அமைச் சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கள் பலர் வெளியேற நேர்ந்தது. ஏனென்றால் அவர்கள் அனை வரும் கட்சியின் தலைவருடனேயே இருந்தார்கள்.

மகிந்த ராஜபக்ச கட்சியின் தலை வராக இருந்தபோது இவர்கள் அவருடன் இருந்தனர். கட்சியின் தலைமைப் பதவியை மைத்திரி பாலசிறிசேன பெற்ற பின்னர் அவரு டன் இணைந்திருக்க வேண்டும். இதனைத்தான் செய்திருக்க வேண் டும். ஆனால் இதனை விடுத்து தோல்வி கண்டவர்கள் பின்னால் செல்லும் அரசியல் கலாசாரத்தை மஹிந்த ராஜபக்ச உருவாக்கியுள்ளார். அந்த அழிவுதான் இன்று சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சி யின் தலைமையை பெற்றுக் கொண்ட காலம் தொடக்கம் பல்வேறு பிரச்சி னைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி யிருந்தது. இதற்கு மூலகாரணமாக அமைந்திருந்தது மகிந்த ராஜ பக்சவும் அவருடன் இணைந்தி ருந்த இனவாதத்தை தூண்டும் கூட்டணி யுமாகும்.

அதன் காரணமாக சிறி லங்கா சுதந்திரக் கட்சி அடிமட்டத் தோல்வி யைக் கண்டது. நான் சுதந்திரக் கட் சியை நேசிப்பவன், பண்டார நாயக் கவின் கொள்கையை மதிப்பவன். எனவே எதிர்காலத்திலாவது கை சின்னத்தில் தேர்தலில் போட்டி யிட்டு நாட்டு மக்கள் மத்தியில் செல் வதற்கான வழிவகைகளை ஏற்படுத் திக் கொள்ள வேண்டும்.

இனவாதத்தை, மதவாதத்தை, தூண்டி விடும் வாய்ப்பேச்சால் வெற்றிபெற முயற்ச்சிப்பவர்களுடன் சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் இணைந்தால் சுதந்திரக் கட்சி அழிந்து போய் விடும்.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து ஆட்சி ஒன்று ஏற்படுத் தப்பட்டிருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகின்றேன். – என் றார். (ற)



# சாந்தி சிறிஸ்கந்தராசாவுக்கு மன்னாரில் வரவேற்பு நிகழ்வு

மன்னார், செப்.14
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசாவுக்கு நேற்று மன் னாரில் மக்களால் வரவேற்பளிக் கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வை மகளிர் அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. மன்னார் மாவட்ட பெண்கள் சமாசம் ஏற்பாடு செய்த குறித்த நிகழ்வுக்கு அதன் தலைவி ஏ.மல்லிகா தலைமை தாங் கினார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருக்கேதீஸ்வரம் கோயில் நிர்வாகசபையின்பிரமுகர் பொறியிய லாளர் ராமகிருஸ்ணன், அருட் சகோதரி ரூபராணி, தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செய ல்ாளர் வி.சிவகரன், விழுது நிறு வனத்தின் மன்னார் இணைப்பாளர் எச்.ஜே.டலிமா, பெண்கள் அமைப் பின் பிரமுகர் ஜெசி, முன்னாள் மன்னார் நகரசபையின் செயலா ளர் எஸ்.ஏ. ராஜேஸ்வரி மற்றும் அரசியல் பிரமுகர்கள் உட்பட பெண்கள் அமைப்பின் உறுப்பினர் கள் பலர் கலந்து கொண்டனர். (ற)

# இனங்களை ஒன்றிணைப்பதற்கு மதத் தலைவர்கள் முன்வர வேண்டும்

## சர்வ மத சமாதான நிதியத்தின் மக்கள் தொடர்பாடல் ஊடக செயலாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப்.14
எதிர்கட்சித் தலைவர் சம்பந்தனைப் பாராட்டியும் வாழ்த்துத் தெரிவித் தும் சிங்கள கிராமப் பகுதிகளில் சிங்கள மொழியில் பதாதைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. ஆனால் ஒருசில அரசியல்தலைவர்கள் மாத் திரமே இனத்துவேச கருத்துக்களைத் தெரிவித்து வருவதுடன் இனங் களுக்கிடையே குரோதங்களைக் கட்டி எழுப்ப முயற்சிக்கின்றனர். இவ்வாறான குரோத செயல் களுக்கு முற்றுப்புள்ளி வைக்க சர்வமதத் தலைவர்கள் முன்வர வேண்டும்.– இவ்வாறு தெரிவித் தார் சர்வ மத சமாதான நிதியத்தின் மக்கள் தொடர்பாடல் ஊடக செய லாளர் எஸ்.பி.அன்ரோனிமுத்து.

கொழும்பில் இடம்பெற்ற சர்வமத சமாதான நிதியத்தின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:–

சாதாரண சிங்கள மக்கள் இனங் களுக்கிடையே சகவாழ்வு சகோத ரத்துவத்துடன் வாழ்கின்றனர், வாழ விரும்புகின்றனர். ஆனால் இனது வேசத்தைக் கக்கி சாக்கடை அரசியல் செய்யும் ஒரு சில அரசியல் வாதி களே பிரிவினையை ஏற்படுத்தி நல்லிணக்கத்துக்குப் பங்கம் ஏற் படுத்துகின்றனர். இதற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு சர்வமதத் தலை வர்கள் முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

சர்வமத சமாதான நிதியத்தின் இணைத் தலைவர்களான சங்கைக் குரிய கலாநிதிவல்பொல தேரோ (பெலிகொடை), வணபிதா டபிள்யு திலகரட்ண(கண்டி) ஆகியோர் தலை மையில் நடந்த இந்தக் கூட்டத்தில் நாட்டின் அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த சர்வமதத் தலைவர்களும் புத்திஜீவிகளும் கலந்து கொண்டனர். அங்கு கருத்துத் தெரிவித்த நீதி–சமத் துவத்துக்கான அமைப்பின் உபதலை வர் அருட் தந்தை ரீட் செல்டன்:–

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு, வடக்கு–கிழக்கு மாகாணங் களில் நிலவிவரும் காணிப் பிரச் சினை அகதிகளது பிரச்சினை அர சியல் கைதிகளது பிரச்சினைகள் ஆகியவற்றை மட்டுமன்றி அடுத்து வரப்போகும் வரவு–செலவு திட் டத்தை அனைத் தரப்பினருக்கும் திருப்தி அளிக்கும் வகையிலான வரவு செலவு திட்டமாக மாற்றவும் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உறவினர் வருகையால் சந்தோசம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப் பீர்கள்; இலாபம் உயரும். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர். நண்பருக்குத் தேவையான உதவியைச் செய்வீர்கள்.

**இடபம்:** மற்றவர் தொடர்பாக கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக் கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். அரசியல்வாதிகள் எதிரியை இனம் கண்டு விலகுவர்.

**மிதுனம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்:** வழக்கத்தைவிட பொறுப்புகள் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் உழைப்புக்கேற்ப வருமானம் வரும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. உடல்நலனில் அக்கறை காட்டுவது அவசியம்

**சிங்கம்:** குடும்பத்துடன் கோவில் வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். புத்திரர் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**கன்னி:** உங்களின் புகழ் கண்டு பிறர் பொறாமைப்படுவர். தொழில், வியாபாரம் தொடர்பான நிர்வாகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுவீர்கள். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும். அரசியல்வாதிகள் தொண்டர் நலன் குறித்து ஆலோசிப்பர்.

**துலாம்:** சுதந்திர உணர்வுடன் பணியில் ஈடுபடுவீர்கள். புதியவர்களின் நட்பால் மனதில் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் பன்மடங்கு இலாபம் உயரும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சி இனிதாக நிறைவேறும். உறவினர், நண்பர்களின் அன்பும் பாசமும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** வீண் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். திடீர் செலவுகளால் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** எதிர்பார்த்த சுப செய்தி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

**கும்பம்:** சொல், செயலில் புத்திசாலித்தனம் வெளிப்படும். பழைய நண்பரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். புத்திரர் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** இலட்சிய மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த தடை விலகி இலாபம் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து நற்பெயர் பெறுவார்.



# பாட்ஷா மீண்டும் வருமா?

கபாலி பாட்ஷா படம்போல் இருக்குமா என்ற கேள்விக்கு, பாட்ஷா போன்று ஒரு படம் வராது. எப்போதும் ஒரேயொரு பாட்ஷா தான் என்று ரஜினி பதிலளித்ததைத் தொடர்ந்து மீண்டும் பாட்ஷா படம் பற்றிய பரபரப்பு தொற்றியுள்ளது. பாட்ஷாவை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணா, பாட்ஷா பாகம் இரண்டு எடுப்பதற்கான கனவோடு பலமுறை ரஜினி வீட்டுக் கதவை தட்டியும் அவருக்கு இல்லை என்ற பதில்தான் கிடைத்தது. இறுதியாக அஜித்திடம் முயற்சி செய்து பார்க்கலாம் என்று சென்றுள்ளாராம்.

இரண்டாம் பாகம் எடுத்து பாட்ஷாவின் பெயரை கெடுக்க வேண்டுமா? பாட்ஷா ஒரு பாகமாகவே இருந்துவிட்டு போகட்டும் என்று ரஜினி கூறியதைத் தொடர்ந்து பாட்ஷா இரண்டாம் பாகத்துக்கான முயற்சியை சுரேஷ் கிருஷ்ணா கைவிட்டார். தற்போது, அஜித்தை வைத்து பாட்ஷா போன்று ஒரு படம் எடுக்கவேண்டும் என்ற ஆசை அவரிடம் உள்ளதாம். இந்த நிலையில் சில நாள்களுக்கு முன்பாக ரஜினி பாட்ஷா படம் பற்றி புகழ்ந்து பேசியதைத் தொடர்ந்து மீண்டும் இரண்டாம் பாகத்தை இயக்கும் எண்ணத்துக்கே வந்து விட்டாராம் இயக்குநர்.


நான் இயக்கிய படத்தை பற்றி ரஜினியும் மற்றவர்களும் இன்னமும் பேசி வருவது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. அவர் கூறுவதுபோல் உண்மையிலேயே பாட்ஷா படம் போன்று இன்னொரு படம் எபோதும் எடுக்க முடியாது. அஜித் ஒரு சிறந்த நடிகர். அவரை வைத்து பாட்ஷா மாதிரியான ஒரு படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அது அமைந்தால் கண்டிப்பாக அவருக்காகவே கதை அமைத்து படம் இயக்குவேன் என்று தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கு தலை அஜித்தின் மனதில் என்ன பதில் இருக்கிறதோ பொறுத்திருந்து பார்க்கலாம்.

# பேஸ் புக்கில் பிடித்தவை...




உலகத்தில இருக்கிற அத்தனை விஞ்ஞானிகளும் நம்ம ஊர்லதான் இருக்கானுங்க...



மரங்கள் மட்டும் வைபை சிக்னல் தருமானால் மரங்களாக நட்டுத் தள்ளியிருப்போம்... ஆனால் பாவம், மரங்களால் சுவாசிக்க ஒட்சிசன் மட்டுமே தர முடிகிறது...



அவள் பாதம்பட்ட இடமெல்லாம் முத்தமிட்டேன் அவள் என் அம்மாவிடம் கூறினாள்



"ஆண்டி உங்க பையன் மண்ணு திங்குறான்"

konews.in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.ம.சு.கூட்டமைப்பில் சு.க.

## போட்டியிடும் என்கிறார் செயலாளர்

கொழும்பு, செப்.14
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் கீழ், சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் என கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு மேலும் விரிவுபடுத்தப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த சில காலங்களாக சிறு பான்மைக் கட்சிகள் கூட்டணியிலி ருந்து விலகிக்கொண்டுள்ளன. குறிப்பாக முஸ்லிம் கட்சிகளே இவ்வாறு விலகிக்கொண்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் தலைமையின் கீழ் பல கட்சிகள் இணைந்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துள்ளன. அரசியல் கட்சிகளைத் தவிர, சில இளைஞர் அமைப்புக்கள் மற்றும் வேறும் அமைப்புக்களும் கூட்ட ணியில் இணைந்து கொள்ள விரும்புகின்றன.

ஹக்கீம் மற்றும் பதியூதீனின் கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டி யிடுமா என்பது உறுதியாகக் கூற முடியாது என்ற போதிலும், பல கட்சிகள் இணைந்து கொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற–வ)

# விமல் வீரவன்சவின் கருத்துக்கு இராதகிருஷ்ணன் கடும் கண்டனம்

கொழும்பு, செப்.14
மலையக மக்களை கொச்சைப் படுத்தி சிங்கள தனியார் தொலைக் காட்சியில் கருத்துக்களை வெளி யிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை வன்மையாக கண்டிப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக தொழிலாளர்கள் இலங் கைக்கு தொழிலுக்காகவே கொண்டு வரப்பட்டார்கள். ஆனால் அவர் களுக்கு இன்று பிரஜாவுரிமை வழங் கப்பட்டு இந்நாட்டின் பிரசைகளாக மாறிவிட்டார்கள் என தொலைக் காட்சி நிகழ்வொன்றில் நாடாளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கருத்து வெளியிட்டிருந்தார்.

விமலின் இந்தக் கருத்துக்கு கண்டனம் தெரிவித்து இராஜாங்க அமைச்சர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

200 வருடகால வரலாற்றை கொண்டவர்கள் எமது மலையக இந்திய வம்சாவளி தமிழர்கள். இந்நாட்டின் பொருளாதாரத்தில் தமது முழுமையான பங்களிப்பை செலுத்தியவர்கள் எமது மூதாதை யர்களும் இன்றைய தொழிலாளர் களுமே. ஒரு காலத்தில் அன்னிய செலவாணியை ஈட்டிக் கொடுப் பதில் முக்கிய பங்காளிகளாக இருந்தவர்கள் இந்த தோட்ட தொழிலாளர்கள்.

இந்த மலையக மக்களின் ஆதர வின்றி ஆட்சி அமைக்க முடியாது என்பதை அவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

நானும் தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவன் என்ற வகையிலும்– எமது சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்பவன் என்றவகையிலும்–எமது பெருந்தோட்ட மக்களை கொச்சைப் படுத்துவதை கேட்டுக் கொண்டு மௌனமாக இருக்க முடியாது.

அவர்களும் இந்த நாட்டில் அனைத்து பிரசைகளைப் போல அனைத்து உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே நாங் கள் இன்று சேவை செய்து வரு கின்றோம். எனவே எமது மக்களை ஏளனப்படுத்த யாரும் முயற்சி செய்தால் அதற்கு தகுந்த பதிலடி கொடுக்க நாங்கள் பின்நிற்க மாட் டோம்– என்றுள்ளது. (ற)

# சீபா உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது

## அரசு அறிவிப்பு

கொழும்பு, செப்.14
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்தின்போது சீபா உடன் படிக்கை குறித்து கைச் சாத்திடப் படாது என அரசு அறி வித்துள்ளது.

நாளை புதுடில்லி பயணமாகும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாளைமறுதினம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜீ, வெளி விவகார அமைச்சர் சுஷ்மா சுவ ராஜ் உள்ளிட்ட பலருடன் பேச்சு வார்த்தை நடத்த உள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, பிரதமராகப் பதவியேற்ற பின்னர் மேற் கொள் ளும் முதலாவது வெளிநாட்டு பயண ணம் இதுவென்பது குறிப்பிடத்தக் கது.

இதேவேளை–சீபா உடன்படிக்கை பற்றி பேச்சுவார்த்தை இடம் பெறும். எனினும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது என அமைச் சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித் துள்ளார். இதன்போது இந்த உடன் படிக்கையினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய நலன்கள் குறித்து ஆராயப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ற–வ)

# நல்லாட்சிக்கான ஐ.தே. முன்னணியை கட்சியாக பதிய நடவடிக்கை

கொழும்பு, செப்.14
நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியை அரசியல் கட்சி யாக பதிவு செய்வதற்கான நடவ டிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தல் நிமித்தம் இந்த கூட்டணி உருவாக்கப்பட் டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மையிலான இந்த கூட்ட ணியில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட பல கட்சிகள் அங்கம் வகித்தி ருந்தன.

இந்தக் கட்சியை அரசியல் கட்சியாக பதிவு செய்வது குறித்து ஆலோசிக் கப்பட்டுள்ளதாக, அதன் பங்காளி கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள் ளார்.

இதேவேளை– உள்ளூராட்சி தொகு திகளை மீள்நிர்ணயம் செய்வதற் கான அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ள நிலை யில், அதனை சிறுபான்மை கட்சி களின் சார்பில் தாமும், அமைச்சர் ரவூப் ஹக்கீமும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் மனோ கணேசன் கூறியுள்ளார். (ற–வ)

# சிறப்புற நடந்து முடிந்தது நல்லூர்க் கந்தன் உற்சவம்

## ஒத்துழைத்த அனைவருக்கு நன்றி தெரிவித்தது இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணம், செப்.14
நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகோற்வசம் சிறப்புற நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளது இந்து சமயப் பேரவை.

இது தொடர்பில் அந்தப் பேரவை விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இந்த முறை திருவிழாவில் குற்றச் செயல்கள் அதிகளவில் இடம்பெற வில்லை. மக்கள் பெருமளவில் பாதுகாக்கப்பட்டுள்ளனர். இதற்கு மேல்நீதிமன்றத்தின் கடுமையான உத்தரவே காரணம்.

உற்சவகாலத்தில் பெரும் இழப் பையும் அசௌகரியங்களையும் சந்திக்கவேண்டிவரும் என சைவத் தமிழ் ஆர்வலர்கள் பலர் எதிர்வு கூறியிருந்தனர். கடந்தகாலங் களில் சில விரும்பத்தகாத செயல் கள் இடம்பெற்றிருந்தன. குறிப்பாக தீர்த்தோற்சவத்திலும் போக்கு வரத்து வேளைகளிலும் கோமா ளித்தனம் செய்யும் இளைஞர் களால் பொதுமக்கள் சிரமப்பட் டனர்.

இந்த முறை அவற்றை தடுக்க உதவிய நீதிமன்றம், பொலிஸ் திணைக்களம் மற்றும் ஏனைய தொண்டர்களுக்கும் நன்றி தெரி விக்கின்றோம். எதிர்காலத்தில் சிறுகுற்றங்கள் கூட நடைபெறாத வண்ணம் சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

மாநகர சபையினரில் சில குறை பாடுகள் இருந்தபோதிலும்–மேற் கொண்ட நிறைவான பணிகளைப் பாராட்டுகின்றோம். அவர்கள் தவறுகளை நியாயப்படுத்த முற் படாது தவறுகளை திருத்தவேண் டும்– என்றுள்ளது. (ற–10)

# அமைச்சர்கள் எம்.பிக்கள் சிலரிடம் விரைவில் விசாரணை

கொழும்பு, செப்.14
அமைச்சர்கள் மற்றும் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளத தாக பெரியளவிலான நிதி மோச டிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுயாதீன தொலைக்காட்சியில் தேர் தல் பரப்புரைக்காக செய்யப்பட்ட விளம்பரங்களுக்கு இன்னமும் கட்டணம் செலுத்தாமை குறித்தே இந்த விசாரணை நடத்தப்பட உள்ளது.கடந்த ஜனாதிபதி தேர்தல் பரப்புரைக்காக முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்சவின் சார்பில் இந்தப் பரப்புரைகள் செய்யப்பட் டுள்ளன.

இதில் சுமார் 114 மில்லியன் ரூபா நிலுவைப்பணம் செலுத்த வேண் டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகி றது.

பெரியளவிலான நிதி மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் இந்த விசார ணைகள் நடத்தப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்பு டைய குற்றச்சாட்டின் பேரில் சுயாதீன தொலைக்காட்சியின் முன்னாள் தலைவர் அனுர சிறி வர்தனவிடம் விசாரணை நடத் தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (ற–வ)



முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பை இலக்காகக் கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் விசேட செயலமர்வு மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக முன்பள்ளி ஆசிரியர் களின் கலை செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக இந்தப் பயிற்சிச் செயலமர்வு வடிவமைக் கப் பட்டுள்ளது. மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் ஏ.நவேஸ்வரன் மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிளான் சிறிலங்கா நிறுவன பிரதி நிதிகள் ஆகியோரும் இந்தப் பயிற்சிச் செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற)

# வாவிகளை புனரமைக்கும் செயற்றிட்டம் ஆரம்பம்

கொழும்பு, செப்.14
நீர்ப்பாசன திணைக்களத்துக்கு சொந்தமான அனைத்து குளங்கள் மற்றும் பிரதான வாவிகளை புனர மைக்கும் திட்டமொன்று ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்துக்கு முன்னர் இந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய எண்ணியுள்ளது என்று திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப் பாளர் ஜானகி மீகஸ்தென்ன தெரி வித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் கீழ் வாவி களிலுள்ள சேற்றை அகற்றுவது டன், குளங்கள் மற்றும் பிரதான வாவிகளுக்கு அருகிலுள்ள பகுதி களைச் சுத்தப்படுத்துவதுடன், வான் கதவுகளின் செயற்பாடு உள் ளிட்ட பல விடயங்கள் முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஏனைய வாவிகளை புனரமைக் கும் நடவடிக்கைகளை விவசாயி கள் தாமாக முன்னெடுக்குமாறும் நீர்ப்பாசன திணைக்களம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

இம்மாத இறுதிக்குள் போகத்துக் கான கூட்டத்தை நடத்தி, பெரும் போக நடவடிக்கைகளை ஆரம் பிக்கவுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி நாய்களால் மக்களுக்கு பெரும் கஷ்டம்

யாழ்ப்பாணம், செப்.14

யாழ்.நகரில் கட்டாக்காலியாக நடமாடும் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளன. அதனால் பொது மக்கள் பெரும் அசெகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நகரில் பஸ்தரிப்புச் சுற்றாடல், முற்ற வெளி பிரதேசம், கொட்டடி மீன் சந்தைச் சுற்றாடல் போன்ற இடங்களில் இந்த கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அவற்றால் வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

சில தினங்களுக்கு முன்னரும் முற்ற வெளியில் வீரசிங்கம் மண்டபத்துக்கு அண்மையில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் கட்டாக்காலி நாய் குறுக்கே ஓடியதால் அதனுடன் விபத்துக்குள்ளாகியிருந்தார். குறிப்பாக மாலை வேளைகளில் இந்தக் கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் கூட்டம் கூட்டமாக நடமாடுவதால் வீதியால் செல்லும் மக்கள் சிரமப்பட்டும் வருகின்றனர்.

கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படும் நடைமுறை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதை அடுத்தே அவற்றின் பெருக்கமும் அதிகரித்துள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ற-17)

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் மாதாந்த நிதி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.14

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஏற்பாட்டில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் மாதாந்த நிதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நேற்றுமுன்தினம் மாலை ரி.சி.ரி. மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார்.

யாழ். பிரதேச செயலகத்தினூடாக வாழ்வாதார வசதி தேவைப்பட்டோரை இனம் கண்டு குறித்த உதவி ஊக்குவிப்பு தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில்100 மாணவர்களுக்கு மாதம் தலா 500 ரூபாவும் பெண் தலைமைத்துவத்தில் இயங்கும் 50 குடும்பங்களுக்கு மாதம் தலா 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

அங்கு கருத்துத் தெரிவித்த பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை– ஏழைகளின் வாழ்வை மேம்படுத்தி வழிகாட்டுவது இந்த நிறுவனத்தினரின் நோக்கம். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பம் என்பதால் அந்தப் பெண்களுக்கு தாய், தந்தை ஆகிய இருவரின் கடைமைகளும் உண்டு. எனவே, அவர்கள் பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கிடைக்கும் மாதாந்த உதவிகளை சரியானமுறையில் பயன்படுத்துங்கள். வசதியான எதிர்காலத்துக்கு கல்வியே வழிவகுக்கும். கல்வியில் முயற்சி தேவை. சிறிய சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுங்கள்– என்றார்.



இந்த நிகழ்வில் யாழ். வலய கல்வி பணிப்பாளர் மாணிக்கராஜா, பயனாளிகள், நிறுவனத்தினர், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற–ரி4)

# பொருளாதாரத்தால் நலிந்த குடும்பங்களுக்கு கறவைப் பசு

கிளிநொச்சி, செப்.14

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரராசாவால் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட மூன்று குடும்பங்களுக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான கறவைப் பசுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன. மகாறம்பைக் குளம், சாந்தசோலை, சாம்பல் தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே குறித்த பசுக்கள் கையளிக்கப்பட்டன.

2015 ஆண்டில் பிரமாண அடிப்படையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் இந்திரராசாவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தே குறித்த உதவித் திட்டமானது வழங்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்துக்கான கறவைப் பசுவுக்காக தலா 60 ஆயிரம் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு அதிகமான விலையில் கொள்வனவு செய்ய விரும்பினால் உதவித்திட்டத்தை பெற்றுகொள்ளும் குடும்பத்தினர் மேலதிக பணத்தைச் செலுத்தி கறவைப் பசுவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் சில குடும்பங்களுக்கும் கறவைப் பசுக்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற–21)

# சாரணர்கள் மதிப்பூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.14

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவப் பெருவிழாவில் பங்கு கொண்ட யாழ்.மாவட்ட சாரணர் சங்க அங்கத்தவர்கள், சாரணர்கள் மதிப் பூட்டப்பட வுள்ளனர் என்று உலக சைவத்திருச்சபை தெரிவித்துள்ளது.

நல்லூர் அறு பத்து மூன்று நாயன்மார் மடத்தில் இன்று மாலை 7.30 மணிக்கு நடைபெறும் குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக உலக சைவத்திருச்சபையின் யாழ்மாவட்டச் செயலாளர் கு.சரவணபவானந்த ஐயர் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக தாணி அலுவலர் கணேசமூர்த்தி கோபால சூரியர் கலந்து கொள்கிறார். இந்த நிகழ்வில் சாரணர்கள், ஆசிரியர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள் அனைவரும் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று உலக சைவத் திருச்சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ற–ரி5)

## மரண அறிவித்தல்

**வஸ்தியாம்பிள்ளை யோசவ்நாயகம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலை)



இளவாலையைப் பிறப்பிடமாகவும், யாழ் பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை (பொடி மாஸ்ரர்) மற்றும் றோசம்மாவின் மகன் யோசவ்நாயகம் 08.09.2015 இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மா -மரியாம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அருட் சகோதரி சோவியா (தி.கு. சபை) திருமதி செல்வநாயகம்(பெல்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விவிட் ஜெவ் நிலோஷனின் தந்தையும் ஆன்டிலானியின் மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15.09.2015 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் இறை வழிபாட்டுடன் ஆரம்பமாகி பின்னர் இளவாலையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 66, பாண்டியன் தாழ்வு
யாழ்ப்பாணம்.


தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு : 0094 21205 068
0094 7777 57111

## மரண அறிவித்தல்

**வாழ்நாள் பேராசிரியர்**

**கந்தையா குணரத்தினம்**

B.Sc (Hons), Ph.D (London), Dic (London), FRAS (London), Hon D.Sc (Jaffna)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பேராசிரியர் கந்தையா குணரத்தினம் (முன்னாள் உபவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பௌதிகவியல் பேராசிரியர்) 09.09.2015 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஓவசியர் கந்தையா - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஷ்பவதியின் அன்புக் கணவரும் வைத்திய கலாநிதி தயாபரன், குமுதினி, வைத்திய கலாநிதி ஜயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திய கலாநிதி பிரியதர்சினி, பாலகுமார், கணேஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணி, செந்தூரன், சக்தியாழ் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ஆறுமுகம், இராசம்மா, இராசரட்ணம், மற்றும் பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசமணி, காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவமணி, சந்திரசேகரம்பிள்ளை, ராஜேஸ்வரி, மற்றும் கணேஷராஜா, கமலாதேவி, மகானந்தன், வைத்திய கலாநிதி மங்களேஸ்வரி, பேராசிரியர் குகனேசராஜா, புனிதவதி, ஞானதிலகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
14 . 08 . 1948



இறப்பு
11 . 09 . 2015

**கதிர்காமம் பூபாலசிங்கம் (சொக்கர்)**

யாழ்.குப்பிளானைப் பிறப்பிடமாகவும், வவுனியா மகாறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமம் பூபாலசிங்கம் 11.09.2015 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமம் - தங்கப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், சந்திரகாந்தி (சாந்தி - சுவிஸ்), காலஞ்சென்ற வசந்தி மற்றும் தயாநிதி (ஜெயந்தி - இலங்கை), சுகந்தி (லண்டன்), வாகீஸ்வரன் (பாபு - சுவிஸ்), தமயந்தி (இத்தாலி), சசிகலா (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பார்வதம் (இலங்கை), குஞ்சு (லண்டன்), சரசி (இலங்கை), காலஞ்சென்றவர்களான மகேந்திரம், பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவகுமார் (சுவிஸ்), வசந்தகுமார், திருச்செல்வம் (லண்டன்), யசோ (சுவிஸ்), இராசன் (இத்தாலி), ரவிக்குமார் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபாஜினி, துசாந்தி, சுபேஸ்வரன் (சுபேஸ்), அஜந்தன், பிரியா, யாழினி, கோகுலதாஸ், நிரோசன், சப்பிரினா, சரண்யா, தமிழ்செல்வன், சிந்து, ரம்யா, ராகவன், சிந்துஜன், விக்கி, குமணன், ஜனா ஆகியோரின் அன்புப் பேரனும் லாறன்யா, விஜய், சந்தோஸ், விதுஸ், அஸ்வின், ஆதிரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2015) திங்கட்கிழமை மகாறம்பைக்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சமளங்குளம் வீதி, மகாறம்பைக்குளம்,
வவுனியா.

தகவல் : குடும்பத்தினர்.
0778272829

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் அதிர்ஷ்டத்தை சரியாகப் பயன்படுத்துங்கள்

## வீட்டுக் கடன் உதவி வழங்கும் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் அறிவுரை

யாழ்ப்பாணம், செப்.14
அதிர்ஷ்டசாலியான மக்களே உங்கள் அதிர்ஷ்டத்தை உரியமுறையில் பயன்படுத்துங்கள் – இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கிடையே நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய 80 பேருக்கான வீட்டுக் கடன் உ தவியாக ஒன்றரை லட்சம் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட ஆட்சி அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்.மாவட்டத்தின் சமுர்த்தி பயன் பெறுநர்களாக ஒரு லட்சம் பேர் உள்ளனர். இவர்களுள் 54 ஆயிரம் நிவாரணம் பெறும் சமுர்த்திப் பயனாளிகளில், சீட்டிழுப்பு மூலமாக 80 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் யாழ்.மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் பயனாளிகள் வெற்றி ஈட்டியுள்ளனர். இலவசமாக வழங்கப்படும் இந்த நிதியைப் பெற்றுக் கொண்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

இந்த நிதியை நீங்கள் உங்களிடம் காணப்படும் வசதியீனங்களை நிறைவு செய்யும் வகையிலும், தொழில்சார் தேவைகளுக்கும், வீட்டுக்கட்டுமானப் பணிகள் மற்றும் வாழ்வாதார உதவிகளுக்காக மட்டும் பயன்படுத்துங்கள் – என்றார். (ற–ரி5)

# போதனாசிரியர்கள் வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், செப். 14
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்டங்களிலுள்ள அலுவலகங்களில் 10 வகையான கற்கை நெறிகளுக்கான போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

சமையல்கலை, வெதுப்பகம், அறை ஒழுங்குபடுத்துநர், உணவு பரிசாரகர், மின்மோட்டார் மீள் முறுக்குநர் (வைண்டிங்), நீர்க்குழாய் பொருத்துநர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர், முள்பள்ளி ஆசிரியர், அழகுக்கலை வல்லுநர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர் ஆகிய பதவிகளுக்கே வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இவற்றுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம், உட்பட 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அரச அங்கீகாரமுள்ள அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருட காலத்துக்கு மேல் தொழிற்பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் 3 வருட காலங்களுக்கு மேல் தொழிற் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அல்லது டிப்ளோமா பட்டம் பெற்றிருக்க வேண்டும். 2 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இலக்கம் 12 கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் கேட்டுள்ளார். (ற–4)


**மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு**

யப்பான் மேக்கிலுள்ள லான்சர்
கொண்டா 90 HX - XXXX,
MD 90.VO -XXXX,
500 - XXXX லான்சர்
மொடல் சாளி என்பன விற்பனைக்குள்ளன.
(62949) (13.15.
தொ.பே. 077 474 5921

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம்,நல்லூர்,பருத்தித்துறை வீதி
" சயன்ஸ் அக்கடமி" ரியூசன் சென்ரருக்கு
அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு
ஆதனம் விற்பனைக்கு உண்டு. தரகர்
தேவையில்லை.
தொடர்பு 077446 9371 நரேஷ்
சந்திரநாசன் 077 610 6760
சீலா (416) 845 8509

**யாழ் நகரில்**

LONDON A/L, O/L CLASSES.
MATHEMATICS, FURTHER. MATHEMATICS
EDEXCEL/ CAMBRIDGE
CALL: 077 361 4359

**தையல் வேலையாள் தேவை**

தையல் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் வேலையாள் தேவை.
தொ.பே. 077 056 2674

**மணமகள் தேவை**

இந்து 1981இல் பிறந்த பூராட நட்சத்திரம்
30பாவம் U.K குடியுரிமையுள்ள U.K யில்
விற்பனை முகாமையாளராகக்
கடமையாற்றும் மணமகனுக்கு தகுந்த
மணமகள் தேவை.
(64613) (12.18.16.17)
T.P: 077 7984390

**A/L 2016/17 COMBINED MATHS & PHYSICS**

க.பொ.த.உயர்தரம் 2016/17 இணைந்தகணிதம்,
பௌதிகவியல் பிரத்தியேக,சிறுகுழு
வகுப்புக்கள் (ஆங்கில/தமிழ் மொழி மூலம்)
பொறியியலாளரினால்.
தொடர்பு : 0773544413

**சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**காணி கட்டடம் விற்பனை அறிவித்தல்.**

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான யாழ் - காங்கேசன்துறை வீதியில் வீதிக்கு கிழக்குப் பக்கமாக சுன்னாகத்தில் NDB வங்கி சுன்னாகம் கிளைக்கு அருகில் "களக்கொக்கனும் கோட்டியாப்புலம்" என குறிப்பிடுகின்ற ஆதன இலக்கம் 2402 உடைய 7.5 குளி பரப்பளவு கொண்ட காணி கட்டடம் விற்பனைக்கு உண்டு.

விற்பனை தொடர்பில் மீளளிக்க முடியாத வகையில் ரூபா 500.00 இனை சங்கத்தில் செலுத்தி விண்ணப்பப்பத்திரத்தினைப் பெற்று முழுமையாக பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலமாக பொது முகாமையாளர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் என்னும் விலாசத்திற்கு 28.09.2015 ஆம் திகதிக்குள் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னரான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் பின்னர் பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

வேண்டிய விவரங்களை விண்ணப்பப்பத்திரத்துடன் பெற்றுக் கொள்ள முடியும்.

12.09.2015 பொது முகாமையாளர்.




வங்கித்துறை மற்றும் அலுவலகத்துறையில்
வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்தும்
கற்கைநெறிகள்
PEARSON edexcel
ESOFT is proud to be recognized as a GOLD PARTNER of Pearson (Edexcel), UK
PEARSON edexcel DiBM
Diploma in Business Management
+
MBA
BA (Hons) Degree
HND
DiBM
After O/L or A/L
யாழ் கிளையில் மட்டும்
Tally Accounting PACK FREE
0773728842
பதிவுகளை இம் மாதம் 16ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்
சேமிப்பு Rs. 18,375
DiBM the 1st Diploma + DiCA the 2nd Diploma

Diploma in Business Management
Diploma in Computerized Accounting
வலுவான இரட்டைச் சான்றிதழ் ESOFT + Pearson (UK)
25% off for the 1st Diploma 50% off for the 2nd Diploma
18.09.2015 | 21.09.2015 New Batches
ESOFT METRO CAMPUS - JAFFNA
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Hotline :077 309 9 308 Tel : 021 - 222 4142
இலங்கையின் மிகப்பாரிய உயர்கல்வி வலையமைப்பு



30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
A/L பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு,
வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்கு,
சொந்தமாக தொழில் செய்ய விரும்புவர்களுக்கு,
மற்றும் ஆர்வமுள்ள மகளிருக்கானது.

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 20.09.2015 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 23.09.2015 (புதன்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விளக்குகள் ஒளிராததால் பொதுமக்கள் பெரும் சிரமம்

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கொழும்புத்துறை,செப்.14

பாஷையூர், மகேந்திரபுரம், வளன்புரம் பகுதிகளின் கடற்கரை வீதிகளில் உள்ள வீதி மின் விளக்குகள் சரிவர ஒளிராது காணப்படுவதால் அந்தப் பகுதிகள் இரவு நேரங்களில் இருள்மண்டிக் காணப்படுகிறது என்றும் அதனால் அதிகாலை வேளைகளில் கடற்றொழில் மேற்கொள்ளச் செல்லும் மீனவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை சனசந்தடி மிகுதியாகவுள்ள இந்தப் பகுதிகளில் இரவில் பயணிப்பவர்கள் விபத்துக்களை எதிர்கொள்ளும் ஆபத்து காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. குறித்த குறைபாடுகள் தொடர்பாக இப்பகுதி பொது அமைப்புகள் மின்சார சபை மற்றும் மாநகர சபைகளிடம் முறையிட்டபோதும் பயனேதும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ள அந்தப் பகுதி மக்கள், இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-135)

**யா/யூனியன் கல்லூரித்தாயின் கண்ணீர் காணிக்கை**



யூனியன் கல்லூரியின் பழைய மாணவனும்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்
முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள்
பேராசிரியருமான
**நந்தையா துரைரட்னம்**
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.
பழைய மாணவர் சங்கம், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

**16 ஆம் ஆண்டு நினைவு**



குணசிங்கம்
**ஞானேந்திரன்** (குட்டி, கண்ணன்)
(உரிமையாளர்- கோபிகா ஆடைஅகம்)

மகிழ்வில்
07.01.1977

துன்பத்தில்
10.09.1999

ஆயிற்று ஆண்டுகள் பதினாறு...
குலம் விளங்க வந்த குலக் கொழுந்தே ஞானேந்திரா...
இருபத்து இரண்டு இளம் வயதில் நல்லூர்க்கந்தன் மேல்
நீ கொண்ட பக்தியினாலே அழைத்துக் கொண்டான் தன்னருகில்
தவிக்கின்றோம் நாங்கள் எல்லாம் நல்லூரின் வீதியிலே இன்று நாம்
நடந்து போகும் போதெல்லாம் எல்லோர் மனங்களிலும்– உந்தன்
எழிலுருவந் தெரியுதே கண்ணா பதினாறு ஆண்டுகள் கடந்து
உருண்டோடிச் சென்றாலும் நல்லூரான் திருவடியில் உன் ஆத்மா
சாந்திபெற வேண்டுகிறோம்.

40/6, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

**2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு
19.02.1939

இறப்பு
06.09.2013

திதி: பிரதமை (14.09.2015)

**அமரர் கணபதிப்பிள்ளை நடராசா**
(முன்னாள் ஓய்வுபெற்ற இ.போ.ச.பரிசோதகர்)

எம்மை இவ்வுலகிற்கு அறிமுகமாக்கி
பாசக் கயிற்றில் நல்வழி நடத்தி
குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஊர் போற்ற வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
எப்படியப்பா? நாம் இப்படி!
மனங்கள் ஆறவில்லை! நினைவுகள் அழியவில்லை!
சொர்க்கத்தில் வேண்டுமப்பா நீங்கள்!
மறு பிறவியிலும் அப்பாவாக!

இல.503 B, யூனிற் 7,
இராமநாதபுரம்.

குடும்பத்தினர்.

## திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு சாவா. பிரதேச சபை நடவடிக்கை

சாவகச்சேரி, செப்.14

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனச் செறிவு கூடிய இடங்களில் வாரத்தில் ஒருநாள் திண்மக் கழிவுகளை வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தும் நடவடிக்கை பிரதேச சபையால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சனச் செறிவு அதிகமாக காணப்படும் கைதடி, நாவற்குழி, வரணி எழுதுமட்டுவாழ், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் வாகனம் மூலம் திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு காலப்போக்கில் அந்தந்தப் பிரதேசங்களில் வாரத்தில் ஒரு நாள் திண்மக்கழிவு அகற்றல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் பிரதேச சபையால் அறிவிக்கப்படும் காலங்களில் மக்கள் அந்தந்த இடங்களில் வைக்கப்படும் கழிவகற்றல் தொட்டிகளில் திண்மக்கழிவுகளை உரிய தொட்டிகளில் வைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தினமும் சேகரிக்கப்படும் திண்மக் கழிவகளை அதற்கென இனங் காணப்பட்ட இடங்களில் கொட்டப்பட்டு அவை தனித்தனியாக வேறாக்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி பிரதேச சபையால் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது. அதன்போதே இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி தர்சினி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் பிரதேச சபையின் கைதடி, நாவற்குழி, மிருசுவில், கச்சாய், வரணி, சரசாலை ஆகிய உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிநிதி, பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பிரதேசத்தில் தினமும் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகள் உக்கக் கூடியவை தனியாகவும் பிளாஸ்ரிக் பொருள்கள், கண்ணாடிகள், இரும்புத் துண்டங்கள் போன்ற உக்காத பொருள்கள் என தரம் பிரிக்கப்பட்டு உக்கக்கூடிய திண்மக் கழிவுகளை விவசாயிகளுக்கு வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகள் உள்ளக பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்

### கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.14

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி சபைகளிலும் உள்ளக பரிசீலனைகள் முன்னெடுக்கப்படும் என கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

உள்ளூராட்சி வார நிறைவையொட்டி ஏறாவூர் நகர சபையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

உள்ளூராட்சி வாரத்தையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தலைமையில், நேரில் சென்று உள்ளூராட்சி நிர்வாகத்தின் வேலைத் திட்டங்கள், குறைபாடுகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவற்றை கண்டறிந்துள்ளோம்.

அந்தவகையில், எதிர்வரும் மாதங்களில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் இவ்வாறான உள்ளகப் பரிசீலனைகள் இடம்பெறவுள்ளன. இதன்போது நிதிக் கையாளுகை, தாபனப் பிரிவுச் செயற்பாடுகள், அபிவிருத்திப் பிரிவுச் செயற்பாடுகள் தொடர்பில் எமது குழுவினர் பரிசோதனைகளில் ஈடுபடுவார்கள்.

எதிர்வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னராக கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற 45 உள்ளூராட்சி சபைகளிலும் இந்தப் பரிசோதனைகள் இடம்பெறும்.

எமது நிர்வாகக் காலத்தில் கணக்கில் எந்தவித மீதியுமில்லாத உள்ளூராட்சிச் சபைகள், அதிக நிதிகளைத் துஷ்பிரயோகம் செய்த உள்ளூராட்சி சபைகள், ஊழியர்களை அளவுக்கதிகமாக நியமித்திருக்கின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள், முறைப்படியான அனுமதியில்லாமல் நியமனங்களை வழங்கியிருக்கின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள், தங்களுடைய பொறுப்புக்களை முற்று முழுதாகவே தட்டிக் கழித்து மக்களது வரிப்பணத்தில சுக போகங்களை அனுபவித்துள்ள உள்ளூராட்சி சபைகளும் உண்டு. எவ்வாறாயினும், இவற்றையெல்லாம் நாம் அடையாளம் காண்போம்.

இந்தக் குறைபாடுகளை நீக்கி சீரான நிர்வாகத்தைக் கொண்டு வர நாம் கடுமையாக நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.– என்றார். (ற)

## கதீஜா கல்லூரியின் பழைய மாணவ சங்க கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், செப் 14

யாழ். கதீஜா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே பழைய மாணவர்களை நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் செல்வி சி.ஜான்சி கேட்டுள்ளார்.

25 வருடங்களுக்குப் பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் குறித்த பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பழைய மாணவிகளின் அங்கத்துவம் உறுதிப்படுத்தப்பட்டவர்களே பழைய மாணவிகள் சங்க நிர்வாகக் குழுவில் இடம்பெறலாம். எனவே அவர்கள் கல்லூரியில் கற்கும் போது வழங்கப்பட்ட சுட்டெண் அல்லது தேர்ச்சி அறிக்கை அல்லது குறித்த பாட சாலையில் கல்வி கற்றதை உறுதிப்படுத்தும் கற்பித்த ஆசிரியர் ஒருவரின் கடிதம் அல்லது குறித்த பாடசாலையில் கல்வி கற்ற ஏனைய 2 பழைய மாணவிகளின் கடிதத்தை ஆவணப் படுத்தலுக்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பொதுக் கூட்டம் இடம்பெறும். அதில் பழைய மாணவிகள் சங்க உறுப்பினர் தெரிவு இடம்பெறும் என்று அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (ற-4)

### விதை நெல் கொள்வனவில் விவசாயிகள் ஆர்வம்

வரணி, செப். 14

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் தற்சமயம் விதை நெல் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. பீ.ஜீ.406, ஏரீ 362 என்ற இன வர்க்கத்தைச் சேர்ந்த விதை நெல்லினங்கள் முறையே [illegible] விலைகளில் இவை [illegible] விவசாயிகள் இந்த விதை நெல்லை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். (ற-122)

## ஆமை இறைச்சி வைத்திருந்தோருக்கு ரூ.70 ஆயிரம் அபராதம்


யாழ்ப்பாணம், செப் 14

சட்டவிரோதமாக ராமர் பாலத்துக்குச் சென்றது மட்டுமல்லாது அங்கு சட்டவிரோதமாக ஆமையைப் பிடித்து அதன் இறைச்சியை வைத்திருந்தவர்களுக்கு 70 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மன்னார் நீதிமன்று.

உரிய அனுமதியின்றி ராமர் பாலத்துக்கு எவருமே செல்ல முடியாது. அவ்வாறிருக்கையில் மன்னாரைச் சேர்ந்த குறித்த 2 பேரும் சட்ட விரோதமாக அங்கு சென்றுள்ளனர். அவ்வாறு சென்றதுமல்லாது, ஆமையைப் பிடிப்பது அதனை இறச்சியாக்குவது என்பன தடை செய்யப்பட்டுள்ள நிலையில் ஆமை ஒன்றைப் பிடித்து வெட்டிக் கொன்று அதிலிருந்ததில் 5 கிலோ இறைச்சியை வைத்திருந்த போது இருவரும் கடந்த வியாழக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அந்த இருவரும் கடற்படையினரால் வனஜீவிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டனர். அவர்களுக்கு எதிராகக் குறித்த இரண்டு குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டு மன்னார் நீதிமன்றில் வனஜீவிகள் திணைக்கள அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்தனர். நீதிவான் ஜீ.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அதன்போது சந்தேக நபர்கள் இருவரும் தம்மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டனர். அதனையடுத்து இருவருக்கும் தலா 35 ஆயிரம் ரூபா வீதம் 70 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது மன்னார் நீதிமன்று. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நோய்களை முன்கூட்டியே அறியும் ஸ்மார்ட் முகம் பார்க்கும் கண்ணாடி!

எமது உடல்நிலை மற்றும் நோய்களை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் வகையில் விரைவில் ஸ்மார்ட் முகம் பார்க்கும் கண்ணாடி வெளியாகவுள்ளது. வைஸ் கண்ணாடி என்ற நிறுவனம் ஸ்மார்ட் முகம் பார்க்கும் கண்ணாடிகளைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. எமது முகம் மற்றும் மூச்சுக் காற்று ஆகியவற்றை நவீன சென்சர்கள் மூலம் ஆய்வு செய்து அதன் மூலம் உடல்நிலை பற்றித் தெரிந்துக்கொள்ள முடியும். இந்தப் புதிய தொழில் நுட்பம் மூலம் நீரிழிவு, மாரடைப்பு மற்றும் பிற இதய நோய்களையும் முன் கூட்டியே தெரிந்துக்கொள்ள முடியும்.

# மைக்ரோசொப்ட் மொழிபெயர்ப்பில் தமிழுக்கு இடமில்லையா?

மைக்ரோசொப்ட் நிறுவனம் 50 மொழிகளுக்கான மொழிபெயர்ப்பு செயலியை (அப்) அறிமுகம் செய்துள்ளது. இது கூகுள் மொழிபெயர்ப்பை விடவும் வசதியானது. கூகுள் மொழிபெயர்ப்பு தற்போது 27 மொழிகளுக்கு மட்டுமே உதவக் கூடியது.

மைக்ரோசொப்ட் மொழிபெயர்ப்பு அன்ரோயிட் ஐ.ஓ.எஸ், விண்டோஸ் என எல்லா இயங்கு தளத்துக்கும் கிடைக்கிறது. கைபேசி, டப்லட், அப்பில் வாட்ச், ஸ்மார்ட் வாட்ச் போன்றவற்றில் இதைப் பயன்படுத்த முடியும். ஒருவர் ஒரு மொழியில் பேசவோ எழுதவோ (டைப்பிங்) செய்தால் அதை இன்னொரு மொழிக்கு (குறிப் பிட்ட 50 மொழிகளுக் குள்) மாற்றிக்கொள்ள முடியும்.




இந்தப் புதிய செயலியால் கூகுள் இயங்கும் பகுதிக்குள் நுழைந்துள்ளது மைக்ரோ சொப்ட் நிறு வனம். கூகுள் பல வருடங்களாக இணையம் அன் ரோ யிட் ஐ.ஓ.எஸ் வழியாக மொழி மாற்றம் தொடர்பான வசதிக ளைச் செய்து தருவது குறிப்பிடத்தக் கது.




# விண்டோஸ் 10 வழங்கும் வாட்ஸ் அப் விரைவில்

மைக்ரோசொப்ட் நிறுவனம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பாதுகாப்பான புதிய இயங்கு தளத்தை வெளியிட்டுள்ளது. விண்டோஸ் 10 கடந்த வாரம் உலகம் முழுவதும் 190 நாடுகளில் வெளியி டப்பட்டது. வெளியிடப்பட்ட 24 மணிநேரத்துக்குள் ஒன்றரைக் கோடிக்கும் அதிகமானோர் இந்த இயங்கு தளத்தை பயன்படுத்தியுள்ளனர். விண்டோஸ் 102 என்ற இந்தப் புதிய மென்பொருளில் கூகுள் குரோமை விட 112 சதவீதம் அதிவேகம் கொண்ட எட்ஜ் என்ற புதிய பிரவுசரும் இணைக்கப்பட்டுள்ளது. இது ஏற் கனவே, விண்டோஸில் வழங்கப்பட்டு வரும் இண்டர்நெட் எக்ஸ்புளோரருக்கு மாற்று பிரவுசராகும். சமூக வலைத்தளங்களில் தற்போது பிரபலமாக இருந்து வரும் வாட்ஸ் அப் கணினிகளில் பயன்படுத்தும் வகையில் வாட்ஸ் அப் வெப் எனும் சேவையை வழங்கி வருகிறது. இந்தச் சேவை கூகுள் குரோம், சபாரி, பயர்பாக்ஸ் மற்றும் ஓபெரா ஆகிய பிரவுசர்களில் மட்டுமே வழங் கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் விண்டோஸ் 10 இல் வழங் கப்பட்டுள்ள புதிய எட்ஜ் பிரவுசரிலும் வாட்ஸ் அப் வெப் வசதியைக் கொண்டுவர மைக்ரோசொப்ட் நிறுவனம் முடிவு செய் துள்ளது

# மரண அறிவித்தல்



## செல்லத்தம்பி மாணிக்கசுந்தரம்

(ஓய்வுபெற்ற விசாரணை அதிகாரி - விற்பனைத் திணைக்களம்)

வடமராட்சி, துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் மற்றும் கொழும்பு, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத் தந்தை செல்லத்தம்பி மாணிக்க சுந்தரம் 11.09.2015 பகவான் பாதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக்கணவரும், கிருபானந்தன் (U.K) சுதானந்தன் (Sutharsika Traders ltd-Canada), ஜீவானந்தன் (U.K) மாலினி (Srilanka), ஷியாமினி (U.K), பிறேமினி (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தினி (U.K), தர்மினி (Canada), ஜெயசோதி (U.K), காலஞ்சென்ற சந்திரகுமார் (Senior Manager - Seylan Bank), ஸ்ரீவேட் (Hotel Westrn), பாரத்குமார் (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr. தனிகன், பிரணவன், பிரவீனன், சிந்துஜா, கார்த்திகா, கஜேந்திரன் (BA), ரதூஷன், அங்கஜன், சாயிசரண்யா, சாயிகிருஷ்ணா றொஷான், ஹரிஷான், மிதுஷான், வினிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை (15.09.2015) செவ்வாய்க்கிழமை 9 am - 6 pm வரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் 16.09.2015 (புதன்கிழமை) முற்பகல் 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூலோக தோற்றம் 01.01.1926

பகவான் பாதம் 11.09.2015

**தகவல்: பிள்ளைகள்**

கிருபானந்தன் - 079 564 87876 - UK
சுதானந்தன் - 077 264 9808 - Srilanka
ஜீவானந்தன் - 071 718 1772 - Srilanka
ஷியாமினி - 077 430 5991 - Srilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்தளிக்கின்றது ஜப்பான்

## கடும் வெள்ளப்பெருக்கால் ஐவர் சாவு: பல லட்சம் மக்கள் இடம்பெயர்வு



டோக்கியோசெப்.14
ஜப்பானின் வடபகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப் பெருக்கால் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 16 பேர் காணாமற்போயுள்ளனர் பல லட்சக் கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.
கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கன மழையை அடுத்தே வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.
கடந்த பத்தாண்டுகளில் ஜப்பானில் ஏற்பட்ட மிகப் பெரிய வெள்ள இடரால் இது பதிவாகியுள்ளது.
ஜப்பானில் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாகப் பல ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.
அதையடுத்து சுமார் 30 லட்சம் மக்களை பாது காப்பான இடங்களுக்கு நகருமாறு மீட்புக்குழுவினர் அறிவித்துள் ளனர். சுமார் ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 500 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர் ஏன்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதுவரையில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளநிலையில் 16 பேரின்நிலை என்னவென்று தெரியாதுள்ளது என்று மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இது ஒரு எதிர்பார்க்கப்படாத இடர். மீட்புப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளோம். 27 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ற–ரி4)

## குழந்தைகளை கூண்டுக்குள் அடைத்து வைத்த தாய் கைது

நியூயோர்க், செப்.14
குழந்தைகளைக் கூண்டுக்குள் அடைத்து வைத்திருந்த அமெரிக்கத் தாய் ஒருவர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.
அமெரிக்காவின் மிசவுரி மாநிலத்தில் உள்ள கன்சாஸ் நகரில் பிரிட்டனி முகரார் என்ற 24 வயதுடைய பெண்ணே மேற்படி கைது செய்யப்பட்டவராவார்.
குகைபோன்ற வீட்டில் மரத்தாலான கூண்டுக்குள் தனது 4 மற்றும் 6 வயதான குழந் தைகளை அடைத்து வைத்திருந்துள்ளார் குறித்த தாய். பொலிஸார் காணாமற்போன கார் ஒன்றை மீட்பதற்காக குறித்த பகுதிகளில் தேடுதல் நடத்திய பொழுது இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்துள்ளனர்.
உடனடியாகக் குழந்தைகளை மீட்ட பொலிஸார் குறித்த செயலைச் செய்த அந்த பெண்ணையும் உடனடியாக கைது செய்தனர். (ற–ரி4)

## இசையமைத்த திரைப்படத்தால் ரஹ்மானுக்கு சிக்கல்

புதுடில்லி, செப்.14
ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்த படம் ஒன்றுக்கு இஸ்லாமியர் களிடம் இருந்து பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.
'முஹம்மட் மெஸெஞ்சர் ஒவ் காட்' என்ற இந்தத் திரைப்படத்துக்கு மும்பையைச் சேர்ந்த ரஸா அகாதெமி என்ற அமைப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.
இந்தத் திரைப்படம் இஸ்லாமிய மத உணர்வுகளைப் புண்படுத்துவதாகவும் மதத்தைக் கேலி செய்வதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ள அந்த அமைப்பு சாதாரண சித்திரங்கள் குறித்தே இஸ்லாம் கட்டுப்பாடுகளை விதித்திருக்கும் நிலையில் முகமது நபி குறித்தே திரைப்படம் எடுப்பது மிகத் தவறானது என்றும் குறிப்பிட்டுள்ளது.
இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ரஸா அகாதெமியின் துணைத் தலைவர் மன்சூர் ஆலம் ஷேக்:-
முகமது நபியின் குழந்தைப் பருவம் குறித்து வரும்போது அவரது உருவத்தை படத்தில் காட்டுகிறார்கள். இது ஏற்க முடியாதது.
ஏ.ஆர். ரஹ்மான் ஓர் இஸ்லாமியராக இருந்தும் இஸ்லாமியர்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தியிருக்கிறார்.
மத்திய உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கைச் சந்தித்து இந்தப் படத்துக்கு தடை விதிக்கக் கோரவுள்ளோம். - என்றார். (ற–10)

## புகலிடம் கோருவோருக்கு ஆதரவாகப் பேரணிகள்

லண்டன், செப்.14
புகலிடம் கோரி வரும் அகதிகளை ஏற்பதற்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் பின்னடித்து வரும் நிலையில், புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுகோரி பல்வேறு நாடுகளில் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன.
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆக்கிரமிப்பில் சிக்கித் தவிக்கும் சிரியாவில் இருந்து ஆயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். இவர்களின் தெரிவாக ஐரோப்பிய நாடுகள் இருந்து வருகின்றன. எனினும் சில நாடுகள் அகதிகளை ஏற்பதாக இல்லை. வேறு சில நாடுகள் சுமாரான உதவியும் இழுத்தடிப்பும் செய்கின்றன. இந்த நிலையில் அகதி களை ஆத ரிக்குமாறு பல நர்டு களில் மக்கள் பேரணிகளை நடத்தியுள்ளனர்.
இங்கிலாந்தில் நடத்தப்பட்ட பேரணியில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் பங்கேற்றனர். இவர்கள் "அகதிகளுக்காக எல்லையைத் திறந்து விடுங்கள், அகதிகளே வருக" என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கைகளில் ஏந்தியிருந்தனர். அதே போன்று சுவீடன் தலைநகர் ஸ்டாக்கோமில் நடந்த பேரணியில் 1000 மக்கள் பங்கேற்றனர். டென்மார்க் தலைநகர் கோபின்கேகனில் மக்கள் நாடாளுமன்றம் வரை பேரணியாகச் சென் றனர். அதில் 30 ஆயிரம்பேர்கலந்துகொண்டனர். பிரான்ஸ், ஆஸ்திரியா, நெதர்லாந்து மற்றும் ஆஸ் திரேலியா உள்ளிட்ட நாடுகளிலும் ஆதரவுப் பேரணி நடைபெற்றது.
அதே நேரத்தில் அகதிகளுக்கு எதிராகவும் பேரணிகள் நடைபெறுகின்றன. போலந்தில் கிட்டத்தட்ட 5ஆயிரம் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். செக்குடியரசிலும் எதிர்ப்புப் பேரணி நடைபெற்றது. அதில் 1500 மக்கள் பங்கேற்றனர்.
(ற–ரி4)



ரஷ்ய விண்வெளி வீரரான கென்டி படல்கா அதிக நாள்கள் விண்வெளியில் தங்கியிருந்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். அவர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 876 நாள்கள் தங்கியிருந்து நேற்று பூமி திரும்பியுள்ளார். அவருடன் விண்வெளி வீரர்களான ஜட்யன், அமெடெவ் அன்ரியாஸ் ஆகியோரும் பூமி திரும்பியிருந்தனர். அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. (ற–ரி4)




## திணறுகின்றது ஜேர்மனியின் முனிச் நகர்

### 10 ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஒரே நாளில் குவித்ததால்

சிரியப் புகலிடக் கோரிக்கையாளர்கள் 10 ஆயிரம் பேர் நேற்று ஜேர்மனியின் முனிச் நகரில் தஞ்சடைந்தனர். தொடர்ந்து வந்து குவியும் புகலிடக் கோரிக்கையாளர்களால் முனிச் நகர் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆக்கிரமிப்பில் சிக்கித் தவிக்கும் சிரியாவில் இருந்து ஆயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். இவர்களின் தெரிவாக ஐரோப்பிய நாடுகள் காணப்படுகின்றன. நேற்று கிட்டத்தட்ட 10ஆயிரம் அகதிகள் ஜேர்மனியின் முனிச் நகரில் தஞ்சமடைந்துள்ளனர்.
ஜேர்மன் மக்களின் அழுத்தத்தால் அந்த அரசு அகதிகளுக்கு முழு உதவியையும் செய்ய முன்வந்துள்ளது. அகதிகளாக வருபவர்களின் பாதுகாப்புக்கும் அவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கும் ஜேர்மனி 4 ஆயிரம் ராணுவ வீரர்களை நியமித்துள்ளது. ஜேர்மனி



யின் பிரபல்யமான காற்பந்துக்கழக அணியான பெயர்ன் மூனிச் அணியும் அகதிகளுக்கு உதவ பெருந்தொகை பணத்தை தருவதாக அறிவித்துள்ளது. (ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் மக்கள் செயல்கட்சி அமோக வெற்றி



சிங்கப்பூர் பொதுத் தேர்தலில் ஆளும் மக்கள் செயல்கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. சிங்கப்பூர் 1965 இல் சுதந்திரம் அடைந்தது முதல்நடைபெற்றஅனைத்துத்தேர்தல்களிலும் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுவந்த மக்கள் செயல்கட்சி இந்த முறை தேர்தலில் கிட்டத்தட்ட 70வீதமானவாக்குகளைபெற்றுமொத்தமாகவுள்ள 89 இடங்களில் 83 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

சிங்கப்பூரை நிறுவிய தலைவர் லீ குவான் யூவின் மறைவை அடுத்து மக்கள்மத்தியில்எழுந்ததேசப்பற்று உணர்வே ஆளும் கட்சி வாக்குகளை அள்ளக் காரணம் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த முறை மக்கள் செயல்கட்சி போட்டியிட்ட எல்லாத் தொகுதிகளிலும் முதல் முறையாக போட்டியிட்ட எதிர்க்கட்சியான பாட்டாளிக் கட்சி ஆளும்கட்சியை தோற்கடிக்க முடியும் என்று நம்பியிருந்தது.

2011ஆம் ஆண்டு தேர்தலில் முதல் தடவையாக குறைந்த அளவில் 60 வீதமான வாக்குகளை வென்றிருந்த மக்கள் செயல்கட்சி 87 ஆசனங்களில் 80 ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)




## ரயில் விபத்தில் இருவர் உயிரிழப்பு

புதுடில்லி, செப்.14

வட இந்தியாவில் கல்காவிலிருந்து ஷிம்லா சென்று கொண்டிருந்த ரயில் விபத்தில் 2 பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த ரயிலில் 36 சுற்றுலாப் பயணிகளும் ஒரு நிர்வாகியும் இருந்தனர். நான்கு பெட்டிகளைக் கொண்ட அந்த ரயிலில் 37 பிரிட்டிஷ் குடிமக்கள் பயணம் செய்தனர். குறித்த ரயில் கல்கா ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத் தில் இரண்டு பெட்டிகள் தடம் புரண்டுள்ளன. கிரேட் ரயில் ஜர்னிஸ் எனப்படும் 13 நாள் சுற்றுலாப் பயணத்தில் 3வது நாளில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

## சீனாவில் வளர்ப்பு நாய்களுக்கு தடை

பீஜிங் செப். 14

சீனாவில் ஒரு மாவட்ட நிர்வாகம் வளர்ப்பு நாய்களுக்குத் தடை விதித்துள்ளது . உரிமையாளர்கள் தங்கள் நாய்களை மாவட்டத்தை விட்டு வெளியேற்றாவிட்டால் அவற்றைக் கொன்றுவிடுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது. கிழக்கு சீனாவின் ஷான்டாங் மகாணத்தில் உள்ளது டேயாங் மாவட்டம். இந்த மாவட்ட நிர்வாகம் குடியிருப்போரின் நலன் கருதியும் சுகாதாரத்தைப் பேணும் வகையிலும் வளர்ப்பு நாய்களை வளர்க்கத் தடை விதித்துள்ளது. அனைத்து நாய்களையும் அகற்ற வேண்டும். இல்லாவிட்டால் அதிகாரிகள் உங்கள் வீட்டுக்கு வந்து உங்கள் நாய்களைக் கொல்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெறிபிடித்த தெருநாய்களின் தாக்குதலில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களையும் ஏன் வெளியேற்ற சொன்னார்கள் என்பது [illegible]இல்லை என்று மாவட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மாவட்ட நிர்வாகத்தின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு விலங்கு ஆர்வலர்கள் [illegible] மக்கள் [illegible] எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த தடை தொடர்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வலைத் தளங்கள் மூலம் பலர் வலியுறுத்தி வருகின்றனர். (ரி4)

## ஜேர்மனியில் மேயர் தேர்தல்

பெர்லின், செப், 14

மேற்கு – மத்திய ஐரோப்பாவைச் சேர்ந்த ஜேர்மனியில் மேயர் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதில் பான் நகர் மேயர் வேட்பாளராக பிரதமர் ஏஞ்சலா மெர்கலின் கிறிஸ்டியன் டெமாக் ரடிக் யூனியன் – சி.டி.யு.இ கட்சியைச் சேர்ந்த அசோக் ஸ்ரீதரன் களமிறங்கியுள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர் சமூக ஜனநாயக கட்சி – எஸ்.பி.டி. வேட்பாளர் பீட்டர் [illegible] ரோத்[illegible] விட கூடுதல் வாக்குகளைப் பெறுவார் என கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது. எனினும் கருத்துக் கணிப்பில் நடுநிலை வகித்த 26 சதவீத வாக்காளர்களின் வாக்குகள் தான் வெற்றியை தீர்மானிக்கும்.

இந்திய தந்தைக்கும் ஜேர்மனி தாய்க்கும் பிறந்த அசோக் ஸ்ரீதரன் கோனிங்ஸ்வின்டர் நகர துணை மேயராகவும் கருவூலத் துறை தலைவராகவும் உள்ளார். இவர் வெற்றி பெற்றால் ஜேர்மனியில் முக்கிய நகரின் முதல் இந்திய வம்சாவளி மேயர் என்ற சிறப்பை பெறுவார். பான் நகரின் மேயர் பதவியை 20 ஆண்டுகளுக்கும் மேலாக சி.டி. யு. தக்கவைத்துக் கொண்டுள்ளது. இம்முறையாவது எஸ்.பி.டி. கைப்பற்றுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. (10)

## அந்தாட்டிக்காவின் பனிப்பாறை உருகல் 100 கோடி மக்களின் இருப்பிடம் கேள்விக்குறி



எரிவாயு நிலக்கரி எண்ணெய் என அனைத்திலும் இருந்து வெளியாகும் காபனின் அளவு படிப்படியாக அதிகரித்து வருவதால் உலகின் பெரு நகரங்கள் பலவும் நீருக்குள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவற்றில் அமெரிக்காவின் தலை நகரான நியூயோர்க்கும் உள்ளடங்கியுள்ளது என்று பிரபல ஆய்வாளரான அண்டர்ஸ் லெவர்மன் தெரிவித்துள்ளார்.

அந்தர்ட்டிக்காவின் வடபகுதியில் திடீரென தற்பொழுது ஏற்பட்டு வரும் துரித மாறுதல்கள் [illegible]நிலை குறித்த ஆய்வுகளை துரிதப்படுத்தியும் அவசியப்படுத்தியும் உள்ளன. கட்டுப்பாடற்ற கரியமில வாயுவின் வெளியேற்றம் அந்தாட்டிக்காவின் பனிப்பாறையை உருகச்செய்து உலகின் பெரு நகரங்களை அழியச் செய்யும் அபாயத்தை தோற்றுவித்துள்ளது. குறித்த விடயம் தொடர்பாக ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளரான லெவர்மன் பனிப்பாறை உருகலால் ஆபத்தின் விளிம்பில் உள்ள சில நாடுகளையும் நகரங்களையும் பட்டியலிட்டுள்ளார். அவற்றில் ரோக்கியோ, ஹொங் கொங், கம்பேர்க், நியூயோர்க், சங்கை, கல்குட்டா ஆகியன இடம் பிடித்துள்ளன. இதனால் தற்போது வரை குறித்த நாடுகள் மற்றும் நகரங்களில் வாழும் சுமார் 100 கோடி மக்கள் தமது குடியிருப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (ரி4)

## 10 ஆயிரம் சிரிய அகதிகளை ஏற்கவுள்ளது அமெரிக்கா

வொஷிங்டன்: செப்.14

எதிர்வரும் வருடத்தில் குறைந்தது 10 ஆயிரம் சிரிய அகதிகளை ஏற்றுக் கொள்வதற்கு அமெரிக்கா தயாராக வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தத் தகவலை வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் போர் ஆரம்பமானது முதற்கொண்டு அமெரிக்காவில் மீள் குடியமர்த்தப்படுவதற்கு 1500 சிரியர்களுக்கே அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகை கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த வருடம் ஐரோப்பாவை வந்தடைந்துள்ள 3 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகளுடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை மிகவும் குறைவாகக் கருதப்படுகிறது.

சிரியாவில் போர் ஆரம்பமானது முதற்கொண்டு அமெரிக்கா மேற்படி அகதிகள் தொடர்பில் 4 பில்லியன் டொலரை உதவித் தொகையாக வழங்கியுள்ளது. ஏற்றுக் கொள்ளும் அகதிகள் தொகையிலான இந்த அதிகரிப்பு போர் இடம்பெற்று வரும் இடங்களிலிருந்து மக்களை ஏற்றுக்கொள்வதுடன் அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்குவதற்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பை அதிகரிப்பதாக உள்ளதாக வெள்ளை மாளிகை ஊடக செயலாளர் ஜோஷ் ஏர்னெஸ்ட் தெரிவித்தார். அத்துடன் அமெரிக்காவுக்கு மேலதிக[illegible] ஆயிரம் அகதிகளை அ[illegible] தற்காக குறிப்பிடத்தக்க நிதியை அமெரிக்கா ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளதாகவும் ஏர்னெஸ்ட் தெரிவித்துள்ளார்.

அகதிகள் அமெரிக்காவுக்கு வரும் போது அவர்கள் தொடர்பில் பாதுகாப்புச் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு 12 முதல் 18 மாத காலம் எடுக்கும் எனத் தெரிவித்த அவர், அமெரிக்காவின் பாதுகாப்புக்கே முதலிடம் கொடுக்கப்படும் என்று கூறினார்.

இந்த நிலையில் ஜேர்மனிய அதிபர் அஞ்ஜெலா மெர்கெல், தனது நாடு 800,000 சிரிய அகதிகளை ஏற்கத் தயாராகி வருவதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தனது நாடு 20 ஆயிரம் சிரிய அகதிகளை ஏற்க [illegible] [illegible] தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் நிலையம் 4 மில்லியன் சிரிய அகதிகளைப் பதிவு செய்துள்ளதுடன், 2016 ஆம் ஆண்டுக்குள் 130,000 சிரிய அகதிகளை மீளக் குடியமர்த்த உலகமெங்குமுள்ள அரசுகளின் உதவியைக் கோரியுள்ளது. அமெரிக்காவுக்குள் 65 ஆயிரம் சிரிய அகதிகளை மீளக்குடியமர்த்த அனுமதிக்குமாறு 14 அமெரிக்க செனட்சபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கடந்த மே மாதம் ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தனர்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன், குடியேற்றவாசிகள் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடும் முகமாக ஐக்கிய நாடுகள் பொது சபையில் உலகளாவிய அவசரக் கூட்டமொன்றை எதிர்வரும் மாதம் கூட்ட அழைப்பு விடுத்துள்ளார். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கத் தூண்டுகின்ற கனதியான கண்காட்சி

லக்ஸ்மன்

பல மனைகள், பல வங்கிக் கணக்குகள், பல கார்கள் ஒரு மனிதனுக்கு ஏன் வேண்டும்? இந்தக் கேள்விக்குப் பெரும்பாலானவர்களின் பதில் ஒன்றாக இருக்கலாம். நாகரிக உலகம் என்பதால் ஒவ்வொரு மனி தனதும் சிந்தனை இவ்வாறாகவே செல்கிறது. ஆனால் மனிதனுக்கு உண்மையில் வேண்டப் படுவது நோயற்ற வாழ்வே, அதுவே குறை வற்ற செல்வம். ஆன்றோர்கள் இவ்வாறு கூறியிருந்தபோதும் இந்தக் குறைவற்ற செல்வம் பற்றிச் சிந்திக்காது பணம், சொத்துக்கள் என்று, கூடவராத செல்வங்களைத் தேடி அலைவது, அதற்காக தவறான வழிகளைத் தேர்ந்தெடுப்பது என்ற ஒவ்வாத விடயங்களிலேயே தனது புலனைச் செலுத்துகின்றான்.

யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பகுதி அவலம் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் மனித முக்கியத்துவம் எது என்பதை ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டு வாழப் பழகிக் கொள்வது அவசியம் என்பதால் நோயற்ற வாழ்வு வாழ்வியல் முறைகள் என்ற கண்காட்சியை நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தையொட்டி நடத்தியது. வழமையாக இடம்பெறும் கண்காட்சிகளைப் போலன்றி சில விளக்கப்படங்களுடன் சிறந்த கருப் பொருள்களைக் கொண்ட சொற் பிரயோகங்கள் அடங்கிய பதாதைகள் பார் வைக்காக வைக்கப்பட்டன. பலதரப்பட்ட பொருள் தொகுதிகளடங்கியதாக இது இல்லாத போதும் சுகதேகியான மனித வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதால் கூடுதலான கல்விச் சமூகம் கண்காட்சியைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டியிருந்தனர்.

அன்று யானையைக் கண்டு பயந்தோடிய மனிதன் இன்று நுளம்பைக் கண்டு ஓடுகின்றான். ஒரு சிறிய நுளம்பு யானையை விடப் பயங்கரமானது என்பது இங்கு உணர்த் தப்படுகின்றது.டெங்கு ஒரு மோசமான உயிர்கொல்லி என்பதால் அதனைக் கட்டுப் படுத்துவதில் ஒவ்வொருவரும் தமக்குரிய கடப்பாடுகளைச் சரிவரக் கொள்ளவேண்டியதன் முக்கியத்துவம் குறித்து, இதில் காட்டப் பட்டுள்ளது. இன்று சொற்ப வயதிலேயே நாம் மரணத்தைத் தழுவும் நிலை உள்ளது. அதற்கு எமது உணவுப் பழக்கங்களும் காரணமாகி விட்டன. அவசர உலகாகிவிட்ட பூமியில் நமது வாழ்வு முறைகளும் அவசரமாகிவிட்டது. அதனாலேயே அவசர அவசரமாக உலகை விட்டு விலகிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் எமது முனிவர்கள், யோகிகள் வாழ்ந்த நூற்றாண்டுகள் கடந்த வாழ்வைச் சிந்திக்க வேண்டும் என வலியுறுத்தும் கண்காட்சி, மரக்கறி வகைகள், பழங்கள் என்பவற்றை உண்ண வேண்டியது குறித்தும் தியானம், யோகாசன முறைகளைப் பின்பற்றுவதால் மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டு திடகாத்திரமான நீடித்த ஆயுளுக்கு வழி பிறக்கும் என்பதையும் தத்ரூபமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.இன்று மது போதைப் பொருள்கள் பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது. ஆரோக்கியத்தைச் சீர் குலைக்கும் ஆரோக்கியமற்ற உணவு வகைகளுடன் மதுபாவனை வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்புப் பாவனைகள் உடலுக்குத் தீங்கு விளைவிப்பதற்குக் காரணமாவதால் அவற்றை முற்றாக நீக்க வேண்டும். முறையற்ற பாலியல் தொடர்புகள், மனதை ஒன்றுபடுத்த முடியாத நிலைகள் ஏற்படுவதாக போதைப் பொருள்கள் பாவனையில் இருந்து மீண்டவர்கள் கூறுகிறார்கள். இழந்தோம் எமது வாழ்க்கையை, பிரிந்தோம் எமது உறவுகளை என்பது அவர்களின் புலம்பலாக உள்ளது. பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் குடும்ப வாழ்வின் சீர்குலைவுகளுக்கும் நோய்த்தாக்கங்களால் திடீர் மரணங்களுக்கும்கூட போதைப் பொருள்கள் மது பாவனைகள் புகைத்தல் என்பன முக்கிய காரணிகளாக அமைவதாகவும் எவ்வளவுதான் குளித்தாலும் சிகரட் நாற்றம் போகாது. சிகரட் நிறுவனம் பொதுமக்களுக்கு புற்றுநோயைக் கொடுத்து பெருந்தொகையான பணத்தை அவர்களிடமிருந்து பறித்துக் கொள்வதாகவும் ஆண்டொன்றுக்கு 20,000 பேர் புகைத்தலூடாக மரணமடைவதாகவும் விளக்கும் அதிகாரிகள் இது அவலட்சணமான பாலியல் பலவீனத்தையும் ஏற்படுத்தும் என்கிறார்கள். எப்படி இருந்த நாம் இப்படி ஆகிவிட்டோமே என்ற கவலையை திடகாத்திரமும் எலும்புக்கூடுமான மனித உருவங்கள் மூலம் சித்திரித்துள்ளார்கள். அனாவசியமான புகைத்தல் பழக்கத்தால் நாளொன்றுக்கு ரூபா இருபத்தைந்துகோடி பணத்தைத் தண்டமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் புகைஞர்கள். இவர்களின் தவறான போக்குகளால் வீட்டில் வறுமையும் பசி பட்டினியும் குடிகொண்டிருப்பதைக் கூறும் வகையில் அடுப்பில் நெருப்பில்லை. அடுத்த வேளைக் கஞ்சிக்கு வழியில்லை என்ற மனைவியின் புலம்பல்களூடாக பொறுப்பற்ற புருஷன் குறித்து சமூகத்துக்கு எடுத்துக் காட்டப் பட்டது.

> **திடமான ஆரோக்கிய வாழ்வு மனித சமுதாயத்துக்கும் நாட்டின் நலனுக்கும் தேவையானது. எனினும் மனிதனின் அவசரம் அதனைச் சிந்திக்க விடுவதில்லை. ஒரு சிகரட் புகைக்கும்போது அவன் தனது வாழ்நாளில் பன்னிரண்டு நிமிடங்களைக் குறைக்கின்றான் என்ற உண்மையைத் தெரிந்து கொள்வதில்லை. ஒவ்வொரு விடயத்திலும் ஆரோக்கிய நிலை குறித்த எண்ணங்கள் அனாவசிய மற்றதாகவே காணப்படுகின்றன. நம்மீதே நமக்குள்ள அக்கறையின்மையால் நோய்களுக்கும் அனாவசிய இறப்புக்களுக்கும் நாமே காரணங்களாகி விடுகின்றோம்.**





அழகு சாதனங்களைப் பயன்படுத்தித் தம்மை மேலும் மெருகூட்டுவதில் அனேகர் குறிப்பாக இளம்பெண்கள் அதீத நாட்டம் கொண்டுள்ளனர். இயற்கையான அழகுக்கு மேலாகக் கைக்கொள்ளும் இந்த மெருகூட்டல்கள் எதிர்காலத்தில் தம்மைப் பாதிக்கும் என்பது உணரப்படுவதில்லை. பலதரப்பட்ட உடலுக்கு ஒவ்வாத கலவைகள், பச்சை குத்துதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டியது குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

கிருமி நாசினிகள், அசேதனப் பசளைகளைப் பயன்படுத்திய உணவுவகைகளை மூன்று தினங்களுக்குப் பின்னரே சமைக்க வேண்டும் எனவும் சேதனைப் பசளைகளூடாக உற்பத்தியான பொருள்களே தரமானதும் நோயற்ற வாழ்வுக்கு உறுதுணையாக உள்ளது எனவும் குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் வியாபாரிகளின் சுயநலம் மருந்து விசிறப்பட்டு பழங்களைப் பழுக்க வைத்து விற்பனைக்கு விடுவது என்றார்கள். பொது நோக்கற்ற தன்மை இன்று ஒவ்வொன்றிலும் காணப்படுவதையும் சொல்வதற்குக் கண்காட்சி தவறவில்லை. திடமான ஆரோக்கிய வாழ்வு மனித சமுதாயத்துக்கும் நாட்டின் நலனுக்கும் தேவையானது. எனினும் மனிதனின் அவசரம் அதனைச் சிந்திக்க விடுவதில்லை. ஒரு சிகரட் புகைக்கும்போது அவன் தனது வாழ்நாளில் பன்னிரண்டு நிமிடங்களைக் குறைக்கின்றான் என்ற உண்மையைத் தெரிந்து கொள்வதில்லை. ஒவ்வொரு விடயத்திலும் ஆரோக்கிய நிலை குறித்த எண்ணங்கள் அனாவசியமற்றதாகவே காணப் படுகின்றன. நம்மீதே நமக்குள்ள அக்கறையின்மையால் நோய்களுக்கும் அனாவசிய இறப்புக்களுக்கும் நாமே காரணங்களாகி விடுகின்றோம். புகை வளையம் நாமே நமக்கு வைக்கும் மலர் வளையம் என்பதை உணர வேண்டும். நம்முடைய பழக்க வழக்கங்கள் புத்து ணர்ச்சியான சுவாசத்துக்கு ஆரோக்கியமான வாழ்வுக்கு வழி காட்டக் கூடியதாக அமைய வேண்டும். வாழ்க்கைப் புத்தகத்தின் வளமான பக்கங்களை விடுத்து சோகப் பக்கங்களைப் புரட்டும் நிலை மாற வேண்டும். ஒரு நல்ல சமூ கத்தை உருவாக்கும் பணியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஒருங்கிணைய வேண்டும். மனித வாழ்வு குறித்த அறிவியல் ரீதியான கருத்துக்களைக் கூறும் ஒரு பயனுள்ள கண் காட்சியாக இது அமைந்திருந்தது. காட்சியில் கருத்துரைகளும் விளக்கப்படங்களுமே உள்ளன. எனினும், டெங்கு நுளம்பு உற்பத்திக்கு உறுதுணையாகவுள்ள கழிவுப் பொருள்களை உரிய முறை யில் பயன்படுத்துவதன் மூலம் வீட்டுக்கான அலங்காரப் பொருள்களாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதற்கான ஒரு தொகுதியும் வைக்கப்பட்டிருந்தது. சொப்பிங் பையில் சிறுவர்களுக்கான அழகான சட்டையின் மாதிரி உருவாக்கப்பட்டிருந்தது எல்லோரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது.

எனது உடல் நலத்தைப்பேண நான் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்கத்தூண்டும் கனதியான கண்காட்சி இது.


# டிரையம்ப்பின் புதிய அறிமுகம்

டிரையம்ப் தனது புதிய ரீ-சேர்ட் பிரா தெரிவுகளை அண்மையில் அறிமுகம் செய்திருந்தது. இந்த அறிமுக நிகழ்வில் பெண்கள், சுவை நிரம்பிய வைன்கள், ஆச்சரியமூட்டக்கூடிய பரிசுகள் மற்றும் புகைப் பட தருணங்கள் போன்றவற்றை அனுபவித்திருந்தனர். இந்த புதிய தெரிவுகள் கனகச்சிதமான தன்மையையும் யூரோ ஜெர்ஸி துணியின் விசேட வகையினால் உருவாக்கப்பட்டுள்ளதால் மேலதிக சௌகரியத்தையும் வழங்குகிறது. டிரையம்ப் மொடல்கள் மூலம்



வைன்கள் பரிமாறப்பட்டதுடன், வேடிக்கை நிறைந்த விளையாட்டுக் களில் பங்குபற்றி பரிசில்களை வெல்லும் அதிர்ஷ்டம் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. டிரையம்பின் ஆடம்பர வரவேற்பை அனுபவித்த அதேவேளை, மனங்கவரும் நீலநிற ஊதா மற்றும் கிறீம்சன் சிவப்பு நிறந்தினாலான புதிய தெரிவுகள் வாடிக்கையாளர்களை மிகவும் கவர்ந்திருந்தது. சௌகரியத்தை விரும்பும் சுதந்திரமான பெண்களுக்கு இந்த நவநாகரிகமான புதிய தெரிவுகள் மிகவும் ஏற்றதாகும்.

டிரையம்ப் இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி அமல் பெர்ணாண்டோ கருத்து தெரிவிக்கையில், 'பெண்ணியம் மற்றும் நவநாகரிகம் ஊடாக பெண்களின் தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவதே டிரையம்ப்பின் நோக்கமாகும். இன்றைய நவநாகரிக பெண்களுக்கு இந்த எத்னிக் பிரிண்டட் ரீ-சேர்ட் பிரா வகைகள் அத்தியாவசிய புதிய அம்சமாக அமைந்திருக்கும்' என்றார்.

அழகிய உலகுக்கான டிரையம்ப்பின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில், எமது பசுமை நிறைந்த உலகின் பாதுகாப்புக்கு பங்களிப்பு வழங்கிய சூழல் நட்புறவான ரக இனை கொண்ட இந்த துணிகள் கவர்ச்சிமிக்க புதிய தெரிவுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. (த)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனச் சாரதிகளே ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் என்ன?

யாழ்ப்பாணம்பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள ஆவரங்காலில் இடம்பெற்ற லொறி. மினிபஸ் விபத்தில் பலர் மோசமான காயங்களுக்கு உள்ளாகியமை அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

மினிபஸ்ஸில் சென்றவர்களில் அனேகமானவர்கள் நல்லூர் ஆலயத்தின் தீர்த்த உற்சவத்தில் பங்கு கொள்ளச் சென்றவர்கள் என்பதை அறியும்போது வேதனை பன்மடங்கு அதிகரிக்கின்றது.

ஆலயத்துக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக அதிகாலை வேளையில் எழுந்து புறப்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் தஞ்சமடைய வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் விசாரணைகளின் முடிவில் தான் வெளிவரும். ஆனால் இவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயன் எதுவும் கிடைக்கப்போவதில்லை. தற்போதைய நிலையில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலையில் கடுமையான விழிப்புடன் செயலாற்ற வேண்டியது வாகனச் சாரதிகளின் முக்கிய பொறுப்பாகும். அத்துடன் அனுபவம் குறைந்தவர்கள் மினிபஸ், லொறி போன்ற வாகனங்களை இயக்குவதாலும் விபத்துக்கள் ஏற்படுவதாகப் பரவலான அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் சிக்கிய மினிபஸ் சாரதிக்கு [illegible] லொறிச் சாரதிக்கு 31 வயது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.




மேலும், மேற்படி விபத்து சந்தி அல்லது வளைவில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நேர் வீதியில் ஏற்பட்டதாகவே படங்களின் வாயிலாகத் தெரிகின்றது.

அவ்வாறாயின் வாகனச் சாரதிகளின் கவனக்குறைவு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டிருக்க வேண்டும். மேலும், விபத்தில் சிக்கிய லொறி சின்னாபின்னமாகக் கிடப்பதைப் பார்க்கும்போது இரண்டு வாகனங்களும் அதிவேகமாகச் செலுத்தப்பட்டபோதே விபத்து ஏற்பட்டதென ஊகிக்க முடிகின்றது.

எது எப்படியோ இந்த இரண்டு வாகனச் சாரதிகளில் எவராவது ஒருவர் தவறு புரிந்திருக்கலாம் அல்லது இருவருமே தவறைப் புரிந்திருக்கலாம். ஆனால் நடந்து முடிந்துபோன இந்த விடயத்தை ஆராய்ந்து உண்மை களைக் கண்டறிவது அவசியமானதாகும். அப்போது தான் எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்து ஏற்படாமல் தடுக்கலாம்.

அதேவேளை இங்கு சில விடயங்களைக் குறிப்பிட்டேயாக வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்புக்கு அவர்களை ஏற்றிச் செல்லுகின்ற பஸ்களுக்குப் பொறுப்பானவர்களே உத்தரவாதம் வழங்க வேண்டும். ஆனால் சில பஸ்காரர்கள் பொறுப்பில்லாமல் நடப்பதையும் காணமுடிகின்றது. பஸ்களை நீண்ட நேரம் ஒரேயிடத்தில் நிறுத்தி வைப்பதும், ஆமை வேகத்தில் செலுத்துவதும் பின்னர் நேரத்தைச் சரி செய்வதற்காக அசுர வேகத்தில் செலுத்துவதும் வழமையான விடயங்களாகி விட்டன. அசுர வேகத்தில் பஸ்களைச் செலுத்திச் செல்லும்போது விபத்து ஏதாவது ஏற்படுமாயின் பயணிகளின் நிலை என்னவாகும் என்பதை ஒருவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அதிலும் அனுபவம் குறைந்த இளைஞர்கள் சாரதிகளாக இருக்கும்போது நிலைமை கட்டுக்கடங்காமல் செல்லுகின்றது.

ஆகவே பணம் கொடுத்துப் பயணத்தை மேற்கொள்ளுகின்ற அப்பாவிகளை ஒருகணம் இவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தம்மை நம்பியே இவர்கள் பஸ்களில் ஏறுகின்றனர் என்பதையும் இவர்கள் மறந்து விடலாகாது.

*செ.பாலசுப்பிரமணியம், சுன்னாகம்.*

# நடவடிக்கை எடுப்பார்களா?


நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று யாழ். பஸ் நிலையத்திலிருந்து அராலி, மாவடி ஊடாக சித்தன்கேணி வரை செல்லும் (இலக்கம் 789) தனியார் பேருந்து ஒன்று முற்பகல் 10 மணி அளவில்யாழ். பஸ்நிலையத்தில் இருந்து புறப்பட்டு கந்தர்மடம் சந்தியில் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்றது. அந்த பஸ் அராலி அம்மன் கோவிலடிக்கு வந்ததும் நடத்துநர் பயணிகள் அனைவரையும் 40 ரூபா தருமாறு கேட்டார். ஆனால் பயணிகளோ நாங்கள் வழக்கமாகத் தரு கிறமாதிரி சித்தன் கேணியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான கட்டணமான 35ரூபா தான் தருவோம் என்றார்கள்.

ஆனால், நடத்துநரோ அப்படியில்லை, விருப்பம் என்றால் இருங்கள், இல்லாவிடில் இறங்கிப்போங்கள் என்று வீரவசனம் பேசி வாக்குவாதம் செய்தார். அத்துடன் இடையில் இறங்கும் பயணிகளிடமும் 40 ரூபா தான் பெற்றுக்கொண்டார். அதாவது அராலி அம்மன் கோவிலடி, ஆலடி, பாடசாலை, வைத்திய சாலை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்கும் 40ரூபா தான் அறவிட்டார்.

அந்த வழித்தடத்தில் பயணிக்கும் ஏனைய தனியார் பஸ்களும், இ.போ.ச பஸ்களும் வழக்கமான கட்டணத்தை வசூலிக்கும்போது ஏன் இந்த நடத்துநர் இப்படிச் செய்கின்றார் என்று பயணிகள் பெரும் கவலை அடைந்தனர். மேலும் இப்படிப்பட்ட நடத்துநருக்கு எதிராக அவர்களுடைய மேலதிகாரிகளோ அல்லது தனியார் பஸ் சங்கமோ நடவடிக்கை எடுக்க மாட்டார்களா என்றும் அந்தப் பயணிகள் மிகுந்த வேதனையும் கவலையும் தெரிவித்தனர்.

*அராலி, வட்டுக்கோட்டை மக்களுக்காக,*
*வைகுந்தன்*

## கேலிச் சித்திரம்




*நன்றி: லங்காதீப*

# கடினத்திலும் சுகமிருக்கும்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெற்றுள்ளது. நேற்றுப் பூங்காவனத் திருவிழாவான திருக்கல்யாணமும் சிறப்பாக இடம்பெற்று முடிந்துள்ளது.

திருவிழா ஆரம்ப நாள்களிலேயே பலத்த கூட்டம் நல்லூரில் முண்டியடித்தது. இந்த நிலையில் இறுதித் திருவிழா நாள்களான மஞ்சம், சப்பறம், தேர், தீர்த்தம் என்பனவற்றில் பக்தர்களின் தொகை வழமைபோன்று பல்லாயிரமாகி விட்டது. நல்லூரானுக்குப் பக்தர் வெள்ளம் ஒன்றும் புதியதல்ல. நாடு கடந்து வெளிநாடுகளிலும் அது பக்திப் புகழ் பரப்பித்தேன் ஒழுகப் பாமாலை பாடிப் பரவசப் படுத்திக்கொண்டிருக்கிறது.

தவிர நல்லூரானைச் சுற்றியுள்ள பல மண்டபங்களில் தெய்வீக நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தமை சலிப்பைத் தரவில்லை. பல மண்டபங்களிலும் பாடல் களும், இசைக் கருவிகளின் சங்கமமும், தெய்வீக உரை களும், பேருரைகளும், வரலாற்றுக் கதை உரைகளும், வர லாற்று நாடகங்களும் என ஏதாவது ஒரு நிகழ்வு நிகழ்ந்து கொண்டிருக்கும். அங்கு அடியவர் கூட்டமும் நிறைந்திருக்கும். இலவசமாகக் கிடைக்கும் அந்தச் சங்கமங்களை - இசைகளைக் கேட்பது நயக்கத்தக்கதாக இருந்தது. நல்லூரானைத் தரிசித்துவிட்டு வெளியே வருபவர்கள் நிகழ்வுகள் இல்லையென வீடு திரும்பக் கூடாது என்ற குறையைத் தீர்த்து வைப்பதாக அவை அமைந்திருந்தன. இசையால் வழிபாடுகளை இயற்றியவர்களை வரலாற்றுக் கதைகளில் இருந்து கேட்டும் பார்த்தும் இருக்கிறோம். எனவே தெய்வத்தைக் கையெடுத்துக் கும்பிடுவது மட்டும் தான் வழிபாடு அல்லவே. இசையால் வழிபாடியற்றலும் இசையூல் வழிபடுவதும் இருக்கின்றன. அதனை அதிகளவில் நல்லூரானின் திருவிழாக் காலங்களில் காணமுடியும். சுற்றுப் பிரகாரத்தை நடந்து வழிபட்ட வர்கள் அத்தகைய மண்டபங்களில் காலாற அமர்ந்து அவற்றைக் கேட்கும் போது தெரியும் அதன் ரசனை.

பஜனைகள் பாடுவோரைப் பல குழுக்களாக அங்கு காண முடிந்தது. வயதான ஆண்களும் பெண்களும் அவ்வாறு பக்தியில் திளைத்துப் பாடும்போது அவர்களுடன் சளைத்தவர்கள் அல்ல என்ற வகையில் யுவதிகளும் நன்றாகவே அதில் பங்குகொண்டிருப்பர். அது வழமையானதாகவும் இருந்து வருகிறது. தேர்த் திருவிழா அன்றும் இவற்றுக் குறைவிருக்க வில்லை. அன்றைய தினம் தேர்முட்டிக்குப் பின்புறமாகச் சற்றுத் தூரத்தே இருந்து இளைஞர் கூட்டம் ஒன்றும் பஜனை பாடியிருந்தமை பலரதும் கவனத்தை ஈர்த்திருந்தது. அவர்கள் மத்தளம் கொட்டி அவ்வாறு பாடியிருந்தமையைக் காணமுடிந்தது. எனவே கோயில் திருவிழா என்றால் பக்தர்களின் கூட்டம் அதிகரிக்கும். அவ்வாறு அதிகரித்த நிலையில் வருபவர்கள் இவ்வாறான நிகழ்வுகளையும் கண்டுகளிக்கக்கூடியதாக ஏற்பாடு செய்யப்படுகின்றமையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

தீர்த்தோற்சவம் புராணங்கள்பாடச் சிறப்பாக இடம் பெற்றது. பக்தர்களின் எண்ணிக்கையை முழுமையாக உள்வாங்க, பக்தர்கள் தீர்த்தோற்சவத்தைப் பார்வையிட நல்லூரில் இடம் பற்றாக்குறை ஒரு பிரச்சினைதான். ஆனால் அதற்கும் பல காரணங்கள் இருக்கலாம். எதனை யும் சும்மா இருந்து பெறமுடியாது. கஷ்டப்பட்டுப் பெறுவதில் உள்ள அக்கறை ஆர்வம் - மதிப்பு அதனைப் பெற வேண்டும் என்ற உத்வேகம் - சுகம் சும்மா இருந்து பெறுவதில் இருந்துவிடப் போவதில்லை.

தீர்தோற்சவம் காலை 7 மணிக்கே ஆரம்பித்துவிட்டது. பக்தர்கள் கூட்டம் அதற்கு முன்னரே குவிந்துவிட்டது. அனைவரையும் உள்வாங்கி தீர்த்தோற்சவத்தைப் பார்வையிட வழிசமைக்கப்பட்டிருந்தது. ஆனால் எங்கும் குழப்பவாதிகள் உள்ளனர் என்பதனை அங்கும் காணத்தவற முடியவில்லை. அந்தக் குழப்பவாதிகள் பக்தர்கள் கூட்டத்திலேயே பக்தர்களின் வேடத்திலேயே இருந்தனர். சகலரும் அரோகரா என்று வழிபாட்டில் ஈடுபட்டிருக்க அந்தக் குழப்பவாதிகள் தம்மைவிட அங்கு எவருமில்லை என்ற தோரணையில் அங்கு செயற்பட்டமை பலரையும் முகம் கோணச் செய்தது. தீர்த்தக்கேணியில் தீர்த்தமாடிக் கொண்டிருக்கையில் அதனைச் சுற்றிப் பக்தர்கள் கூட்டம் முட்டி மோதித் தள்ளுப்பட்டு வழிபடுவதிலும் - தீர்த்தமாடுவதனைப் பார்ப்பதிலும் அக்கறை கொண்டிருந்தனர். கேணியை அண்மித்திருந்த பலர் அமர்ந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் பின்னால் நின்ற ஏராளமானவர்கள் நின்றவாறு பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் தீர்த்தமாடுவதைப் பின்னால் நின்று பார்த்தால் அவ்வளவு தெரியாது. ஆனால் இடிபாடுகளுக்கு மத்தியில் அவர்கள் அனைவருமே அமர்ந்திருந்து பார்த்தால் இடையூறு இருந்திருக்காது. பின்புறமாக நின்றிருந்தவர்கள் நிலத்தில் அமர்ந்துவிட்டு முன்புறமாக உள்ளவர்களை அமருமாறு கூறியபோதும் அவர்கள் அதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அமர்ந்திருந்து பார்த்தால் தள்ளுப்படுவது குறைந்திக்கலாம். நின்று பார்க்கும்போதே தீர்த்தமாடுவது தெரியவில்லை அமர்ந்திருந்து பார்த்தால் எப்படித் தெரியும் என்ற கேள்வி எழுவது புரிகிறது. ஆனால் அனைத்துத் தள்ளுபடிகளுக்கும் நெருக்குதல்களுக்கும் அது காரணமாக இருந்திருக்கலாம். தவிர அவர்கள் உரத்துக் கதைத்தும் பகிடிவிட்டுச் சிரித்தும் நடந்து கொண்டமையை ஏற்க முடியவில்லை.

அது வழிபட வந்த ஏனைய பலரையும் பாதிக்கும். புறவீதியிலும் அதனைக் காண முடிந்தது. சிலவற்றைக் கஷ்டப்பட்டுப் பெறும் போது தான் அதன் அருமை, பெருமை தெரியும்

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜெனிவாவில் தமிழர் தரப்பின் குரல் ஓங்கி உயர்ந்து ஒலிக்கட்டும்

இலங்கையை - அதாவது இந்தியா தனது அண்டை நாடுகளில் ஒன்றான சிறிலங்காவை, எப் போதுமே தனது நட்பு நாடாக வைத்துக் கொள்வதற்கு விரும்புவதில் எந்தவிதத் தவறும் இல்லை. ஆனால், ஆறுகோடி தமிழ் நாட்டுத் தமிழர்களின் இரத்த உறவுகளான இலங்கைத் தமிழர்களை அது பகைவர்களாகப் பார்க்க முடியாது - பார்க்கவும் கூடாது.

அந்த வகையிலேயே, இப்போது ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாகத் தாக்கல் செய்யப்படவிருக் கும் நிபுணர்கள் அறிக்கையில், பரிந்துரைக்கப்படக் கூடிய விசாரணைகளை அனைத்துலகப் பொறி முறைக்கு உட்படுத்த வேண்டும் என்ற இலங்கை தமிழர் கோரிக்கையை ஆதரிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்திய அரசை வலியுறுத்தியிருக்கின்றார்.

இன்று செப்.14 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம் பமாகும் மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத் தொடர் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது. இந்தத் தொடரின் போது, ஏற்கனவே மனித உரிமைகள் சபையின் நிபு ணர்களால் இலங்கையில் நடந்த போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற் றங்கள் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத் துக்குமாறான குற்றங்கள் தொடர்பான அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஆராயப்படவிருக்கிறது.

அதன்போது, இலங்கை அரசு தரப்பில் கலந்து கொண்டு கருத்துக்களை வெளியிடவும், அறிக்கையில் இலங்கை மீது தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டுக்களை உள் நாட்டு பொறிமுறையொன்றின் படியே விசாரிக்கப் பட வேண்டும் என்று வலியுறுத்தவும், வெளியுறவு அமைச் சர் மங்கள சமவீர மற்றும் நீதித்துறை புத்தசாசன அமைச் சர் விஜய தாச ராஜபக்ச ஆகியவர்களின் தலைமையில் குழு வொன்று ஜெனிவா சென்றுள்ளது.

மகிந்த ராஜபக்ச காலத்தில் இருந்த வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிசைப் போல அன்றி, மங்கள சமரவீர வெளிநாட்டு இராஜதந்திரிகள் மீது செல்வாக் குச் செலுத்தும் திறமை கொண்டவர். மனித உரிமை ஆணையாளரையும் அவர் சந்திக்கவிருக்கிறார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவொன்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலும் வேறு சிலர் தனிப்பட்ட முறையிலும் சென்றுள்ளனர். தமிழர் தரப்பிலான குழுவினர், மாநாட்டில் கலந்துகொள்ளும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகள் பலரையும் சந்தித்து அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை தமிழர் தரப்பு வற்புறுத்துவதற்கான நியாயங்களை மட்டுமன்றி, உள்ளக விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கையில்லாமைக்கான காரணங்களை எடுத் துக் கூறி, அந்த வகைநாடி, அவர்களைச் செயற்படும் படியாகவும் கோருவார்கள் என்று எதிர்பார்க் கப்படுகின்றது. அந்த வகையில், இந்தியா அதற்கு முன்னின்று உதவவேண்டும் என்பதே தமிழர் தரப் பின் எதிர்பார்ப்புமாகும்.


இதற்கிடையில், ஐ.நா.மனித உரிமைகள் பேர வையில், இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமெரிக்க நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாலும், அந்நாடு இலங்கை அரசோடு இணைந்து தீர்மானமொன்றை சபையில் சமர்ப் பிக்கப்போவதாக அறிவித்திருப்பதாலும், தமிழர் தரப்பில் பெரும் ஏமாற்றமும் கவலையும் தோன்றி யுள்ளன. அந்தத் தீர்மானம் தொடர்பான கலந்து ரையாடல்களை வரும் 17 ஆம் திகதி அமெரிக்கா நடத்தவிருப்பதால், அந்தச் சந்தர்ப்பத்தையும் நம்மவர்கள் பயன்படுத்திக்கொள்வது அவசியம். தங்கள் தரப்பின் நியாயப்பாட்டை ஆணித் தரமாக எடுத்துரைத்து - வாதாடி - ஒரு சாதகமான முடிவை அவர்களால் ஏற்படுத்த முடியுமானால், பயன் உள்ளதாகவும் மகிழ்ச்சி தருவதாகவும் இருக்கும்.

மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் செயித் அல் - ஹிசேனையும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் சந்தித்துப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கோரியுள்ளனர். அனைத்துலக பொறியமைப்பு ஒன் றையே இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் கோரிநிற்கிறார்கள் என்பது, அனைத்து லக நாடுகளின் மத்தியில் ஓங்கி ஒலிப்பது அவசியம்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையை, ஆணையாளர் சபையில் சமர்ப்பித்து, கருத்து வெளியிடுகையில், இலங்கை அரசு இதுவரை இனங்களுக்கிடை யில் நல் லுறவு, பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமை களைப் பேணும் வகையில் எந்தளவுக்கு நடவடிக்கை களை எடுத்துள்ளது என்பதை எடுத்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், அறிக் கையை அவர் சபையில் தாக்கல் செய்வதற்கு முன்னர் தமிழ்த் தரப்பினர் ஆணையாளரைச் சந்தித்து உண்மை நிலைமையை எடுத்துக் கூறுவது பயனளிப்பதாக இருக்கும். கருத்தில் கொண்டு செயலாற்றுவார்களா?

# எதிர்க்கட்சித் தலைமை சுதந்திரமாகச் செயற்படுமா?

வந்தியத்தேவர்



பிரதான எதிர்க்கட்சி நாட்டுக்குச் சாதகமான முறையில் தீர்வு விடயத்தில் செயற்பட வேண்டும் என்பது போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கூற்று. நாட்டுக்குச் சாதகமான தீர்வு என்பது தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வா? அல்லது சிங்கள மக்கள் தமது விருப்புக்கு இசைவாக வழங்கும் தீர்வா என்பதுதான் கேள்வி. நிமல் சிறிபால டி சில்வா மட்டுமல்ல, இதர சிங்களத் தலைவர்களும் எதிர்பார்ப்பதும் விரும்புவதும் சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்வு ஒன்றையே. சாதாரண சிங்கள மக்கள் என்றும் தமிழர்களுக்குரிய தீர்வு இவ்வளவு தான் என்று ஒட்டுமொத்தமாகத் தெரிவித்தது கிடையாது. பெரும்பாலான சிங்கள மக்கள், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளுடனும் கூடியவர்களாகவே வாழ விரும்புகின்றனர். ஆனால் அதைக் குழப்பி சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுத்து இந்த நாட்டின் தலைவர்களாகத் தம்மை முன்னிலைப் படுத்துவதில் கண்ணாக உள்ள அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளுமே தமிழரை இரண்டாந் தரப் பிரசைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற மனப் பாங்குடன் பிரச்சினைகளை உரு வாக்கி அவர்களுக்கான தீர்வு இது தான் என்று மட்டுப்படுத்திக் கொண் டுள்ளனர். தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாததைத் திணித்து அவர்கள் இங்கு இரண்டாந் தரப் பிரசைகளாகவே தமது ஆதிக்கத்தில் அடங்கிக் கிடக்க வேண்டும் என்பதற்காகவே தோற்றுவிக்கப் பட்டதுதான் இந்த இனப்பிரச்சினை என்பது மாற்றுக்கருத்துக்கு இடமில்லாத ஒன்று.

ஏற்கனவே யாழ்ப்பாண இராச்சியம், கண்டி இராச்சியம், கோட்டை இராச்சியம் என மூன்று இராச்சியங்களை உள்ளடக்கிய ஒரு தேசமாகவே இலங்கை இருந்துள்ளது. அந்நியர்களின் வருகை இவற்றை இணைத்துக்கொண்டது. அது தமிழர்களைப் பெரும்பாதிப்புக்கு உள்ளாக்கி விட்டது. பின்னாளில் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா இலங்கைக்கு உகந்த அரசு, வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசம், மத்திய பகுதி தெற்கு கரையோரப் பகுதிகளைக் கொண்டதான மூன்று சமஷ்டி ஆட்சிமுறையே என்று கூறியிருந்தார். அது அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நியாயமான கருத்து. பண்டாரநாயக்கா பின்னர் தடைமாறிக்கொண்டாலும் இலங்கையின் ஒற்றுமையை விரும்பும் ஒவ்வொருவரும் சமஷ்டி முறையிலான இந்த மூன்று அரசுகளையும் ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள். தென்பகுதி அரசியல்வாதிகள் தமது சுயநலன்களைக் கைவிட்டு ஒருசிறந்த முடிவுக்கு ஒத்துழைக்க வேண்டும். இன்று எதிர்க்கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னாட்சியுடன் கூடிய சமஷ்டி அரசியலே தமிழர்களுக்கான தீர்வு எனத் தெரிவித்து தமிழர்கள் விரும்பும் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் எனத் தெரிவிக்கின்றது. மக்கள் தந்த ஆணையைப் புறக்கணிக்க முடியாது என்பதால் இரண்டும் கெட்டான் நிலைதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. இரண்டு வருடங்களில் புதிய அரசியல் யாப்பை உருவாக்க அரசு முயற்சித்து வருகின்றது. அரசியல் யாப்புப் பேரவை யில் நியமிக்கப்பட்ட சம்பிக்க ரண வக்க போன்றவர்கள் நேர்மையான அரசியல் தளத்தைக் கொண்டவர்களல்லர். தமிழ் விரோதப் போக் கால் வளர்ந்தவர்கள். எனவே தமிழர் தரப்பு முன்வைக்கப் போகும் கோரிக்கை களுக்கு முழுமையான ஆதரவு இவர்கள் மூலம் கிட்டும் என்று எதிர்பார்க்க முடியாது. என்னதான் நல் லெண்ணம் தேசிய ஒற்றுமை என்று கூறினாலும் உருவாக்கப் போகும் புதிய அரசியல் யாப்பு தமிழர் களுக்கு நியாயமான, தமிழ் மக்கள் விரும்பும் சரத்துக்களைக் கொண்டதாக அமையும் என்பதையோ அப்படி அமைவதை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதையோ எதிர்பார்க்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவராகச் சம்பந்தனை ஏற்க முடியாதென, ஐ.ம.சு.கூட்டமைப்பின் அரைப்பங்கிற்கும் அதிகமான உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நெருக்கடியைக் கொடுப் பதிலேயே காலத்தைச் செலவிடுகின்றனர். தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் கடந்த காலங்களைப் போல பெரிய அளவில் பகிரங்கமாக இல்லை என்றாலும் சிறிய அளவிலாவது தொடர்ச்சியாகவும் மறைமுகமாகவும் இடம்பெற்றுக் கொண்டே வருகின்றது. பிரிவினை வாதப் பேச்சுக்கள் எல்லாமே இன்று மறக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளன. இன்று தனிநாடு என்ற கோரிக்கை தமிழர்களிடத்தில் அறவே இல்லை. அவர்கள் சுயாட்சியுடன் கூடிய சமஷ்டி அமைப் புக்கே தம்மைத் தயாராக்கிக் கொண்டுள்ளனர். ஆனால் சமஷ்டி பிரிவினைக்கானது, இந்த நாட்டைப் பிளவுபடுத்த எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்றெல்லாம் தென் பகுதி அரசியல்வாதிகள் அடிக்கடி வாய்க்கு வந்தபடி கூறி தனிநாடு, பிரிவினைவாதம் என்ற நிலைப்பாடுகளுக் குள் தமிழரைத் தள்ளி நாட்டில் மீண்டும் ஒரு குழப்பத்தை உண்டு பண்ண முயற்சிப்பதன் மூலம் நீதியான தீர்வு வழங்கத் தயாரில்லை என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். தேசிய அரசு, நல்லாட்சி என்பதெல்லாம் வெறும் காலத்தை ஓட்டுவதற்கான கண் துடைப்புக்களே.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி, தமிழர்களுக்குக் கிடைத்த கௌரவம் என்று தமிழர்கள் வேண்டுமானால் புகழ்ந்து தள்ளலாம். ஆனால் தென் பகுதியில் ஒருசாரார் அதற்காக அடிபட்டுப் கொண்டிருக்கும்போது நாங்கள் அதனைக் கௌரவம் என்று எண்ணிக் கொண்டிருப்பது அர்த்தமற்றது. நாட்டின் அனைத்து மக்களும் சமத்துவ உரிமைகளைப் பெறக்கூடியதான நீதியான தீர்வுகளைக் காண்பதற்கான கடமை எதிர்க்கட்சித் தலைமைக்குரியது. ஒரே நாட்டில் வடக்கு தெற்குக் கென இருவேறுபட்ட சட்டங்களும் நீதி முறைகளும் இருந்த இந்த நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் பொதுத் தேர்தல் முடிவுகளும், ஒரு நீதியான எதிர்க்கட்சித்தலைமை தனக்குரிய பொறுப்புக்களையும் கடமைகளை யும் பாரபட்சமின்றிச் செய்து முடிக்க அனுசரணை வழங்குமா என்பது தான் காலத்தின் எதிர்பார்ப்பு.

> ஒரே நாட்டில் வடக்கு தெற்குக்கென இருவேறுபட்ட சட்டங்களும் நீதி முறைகளும் இருந்த இந்த நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் பொதுத் தேர்தல் முடிவுகளும், ஒரு நீதியான எதிர்க் கட்சித்தலைமை தனக்குரிய பொறுப்புக் களையும் கடமைகளையும் பாரபட்சமின்றிச் செய்து முடிக்க அனுசரணை வழங்குமா என்பது தான் காலத்தின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிங்கள மூலம்:– ஞாயிறு மவ்பிம (உபுல் யோசெப் பெர்னாண்டோ)*
**தமிழில்: வீ.எஸ்.ரீ**

# முகம் கொடுக்கும் சவாலை முறியடிப்பாரா மைத்திரிபால

"மகிந்தவின் ஊழல் ஆட்சிக் காலத்தில்தான் இந்த நாட்டின் வரலாற்றிலேயே பெருமளவிலான மனிதப்படு கொலைகள், பெண்கள் மீதான வன்முறைகள், சிறுவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், விபச்சாரம், போதைப் பொருள் வர்த்தகம் என்பவை இடம்பெற்றுள்ளன. மகிந்த அரசில் அமைச்சராக இருந்தவன் என்ற வகையில், போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய ஐந்து அமைச்சர்கள் அரசில் அங்கம் வகிக்கின்றனர் என்பதை நானறிவேன். மேற்குறித்த குற்றங்கள் யாவும் அரசின் அனுசரணையுடனேயே இடம்பெறுகின்றன. அத்தகைய குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துவதுடன் சுதந்திரக்கட்சியைத் தூய்மையானதாகவும் நான் மாற்றுவேன்."

தமது ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண்டவாறு நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார்.

அவ்விதம் கூறிய மைத்திரிபால போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கியிருக்கிறாரே, பெண்கள் மீது வன்முறை பிரயோகித்தாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வெட்கமில்லாமல் அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளாரே?



என இன்றைய அரசை பொது மக்கள் விமர்சிப்பதிலும் குறை காண இயலாது.

அப்படியானால் மக்கள் ஆணையைப் புறம் தள்ளி ஜனாதிபதி மைத்திரிபால இவ்விதம் செயற்படுவது நியாயமானதா?

உண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதுடன் சுதந்திரக் கட்சியின் பதவியையும் ஏற்ற மைத்திரிபால முதலில் சுதந்திரக்கட்சியை தூய்மைப்படுத்த முயன்றார். அதைக் கண்டு மகிந்தவைப் புறக்கணித்து மைத்திரிக்கு கட்சி யின் தலைமைத்துவத்தை வழங்க ஆதரவளித்த தரப்பினர் குழம்பிப் போயினர். மீண்டும் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்தில் நுகேகொட கூட்டத்தில் இணைந்ததன் மூலம் தமது நிலைப்பாட்டை சூசகமாக வெளிப்படுத்தினர். அதனால் மைத்திரிபால குழம்பிப் போனதென்னமோ உண்மைதான். மகிந்தவுடன் இணைந்து செயற்பட குறித்த தவறிழைத்த தரப்பினர் முயன்ற போது இந்த நாட்டின் ஊடகங்கள் மகிந்த தரப்பில் இணைந்து கொண்டோர் திருடர்களே எனக் கருத்துக் கூற முயலவில்லை. மாறாக அவர்களை வீரர்களாகச் சித்திரித்தன. குற்றஞ்சாட்டப்பட்ட மகிந்த அரசின் முக்கியஸ்தர்களை மைத்திரிபால இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுமுன் கொண்டு சென்ற வேளையிலும், அவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட வேளையிலும் இந்த நாட்டு ஊடகங்கள் நாட்டு மக்களுக்கு தவறான கருத்தையே, மகிந்த தரப்பினரை மைத்திரிபால பழிவாங்குவதான தோற்றத்தையே உருவாக்கிக் காட்டின. விளைவு, விளக்கமறியலில் வைக்கப்பட்டோர் வீரர்களாக வெளியில் வந்தனர். குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான கோத்தபாய மீது எவரும் கைவைக்க இயலாத விதத்தில் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு குற்றஞ்சாட்டப்பட்டோர் தொடர்பான கோவைகளை கிடப்பில் போட்டது. சட்டமா அதிபர் திணைக்களம், குற்றஞ்சாட்டப்பட்டோருக்கு எதிராக வழக்குத் தொடுக்கவலுவான சாட்சியங்கள் எதுவுமில்லை எனக் கைவிரித்தது. கொலைகாரர்கள், திருடர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல் வாதிகள் தொடர்பான பொலிஸாரது நடவடிக்கைகள் ஆமை வேகத்தில் நகர்ந்தன.

பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட வேளையில் சஜித் வாஸ் குணவர்த்தன மட்டுமே விளக்கமறியல் கைதியாக இருந்தார். ஊழல் குற்றச்சாட்டின் பேரில் அரசியல் வாதிகளுக்கு எதிரான விசாரணைகள் இடம்பெற்றபோது சுதந்திரக்கட்சி தலைமையிலான பொ.ஐ. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியிலும் பேயாட்டம் ஆடினர். மகிந்தவுக்கு பிரதமர் வேட்பாளர் நியமனம் வழங்காதுவிட்டால் தாம் பிரிந்து தனியாகப் போட்டியிடப் போவதாக மைத்திரிபாலவுக்கு அச்சுறுத்தல் விடுத்தனர். அவ்விதம் இடம்பெற்றால் சுதந்திரக் கட்சி பிளவுண்டு விடுமென மைத்திரிபால அஞ்சினார். தமக்கு பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்து, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு உட்பட்டோருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படாவிட்டால் தாம் நிச்சயம் சுதந்திரக் கட்சியை விடுத்து தனித்துப் போட்டியிட இருப்பதாக மகிந்தவும் கூட மைத்திரிபாலவை அச்சுறுத்தியதால் கடைசியில் சுதந்திரக் கட்சி பிளவுபடத் தாம் காரணமாக இருக்க விரும்பாது மைத்திரிபால, மகிந்த தரப்பினரது விருப்பத்துக்கேற்ப வேட்பாளர் நியமனங்களை வழங்கினர்.

இடம்பெற்ற பொதுத் தேர்தலில், ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கு உள்ளான சுதந்திரக்கட்சி வேட்பாளர்களே விருப்பு வாக்குகள் எண்ணிக்கையில் முன்னிலை பெற்றனர். சுதந்திரக்கட்சியைத் தூய்மைப்படுத்துவதற்காக மைத்திரியுடன் இணைந்து நின்ற சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் தேர்தலில் தோல்வியுற்றனர்.

சுதந்திரக் கட்சி பிளவுபடாது இருப்பதற்காக மைத்திரிபால, மகிந்த தரப்பினருடன் இணைந்து பயணிக்கத் தீர்மானித்தார். மகிந்த தரப்பினரோ அது மைத்திரிபாலவின் அரசியல் நலிவு நிலை காரணமான முடிவு என விமர்சித்தனர். அத்தகைய மைத்திரிபால வின் அரசியல் பின்னடைவைப் பயன்படுத்தி மகிந்த மீண்டும் பதவியைக் கைப்பற்றுவார் என நாட்டு மக்கள் நம்பினர். மைத்திரி அரசு பலவீன முற்றுக் கவிழ்ந்து, மகிந்த மீண்டும் தலைதூக்குவார் என்றே அந்த வேளையில் மக்கள் நம்பினர். ஊடகங்களும் அதற்குத் தீனிபோட்டன.

ஆனால் அவை குறித்து கருத்தேதும் வெளிப்படுத்தாது பொறுமை காத்த மைத்திரிபால, ஒரு சந்தர்ப்பத்தில் மகிந்தவின் ஆட்சிக் காலத்துக்கும் தமது புதிய நிர்வாகத்துக்கும் இடையேயான வேறுபாடு குறித்துத் தெளிவுபடுத்தியிருந்தார்.

மகிந்தவின் நிர்வாகத்தில் பேச்சுச் சுதந்திரம் நிலவவில்லை. நான் அதனைப் பெற்றுத்தந்துள்ளேன். அதேபோன்று மகிந்தவின் ஆட்சியில் அச்சுறுத்தல், அழுத்தம் என்பவற்றுக்கு உட்பட்டிருந்த ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் சுதந்திரத்தை நான் பெற்றுத்தந்துள்ளேன். இலஞ்ச, ஊழல், விசாரணை ஆணைக்குழு, உயர் நீதிமன்றம் போன்ற நீதித்துறைசார் நிறுவனங்களும் அழுத்தம், அரசியல் செல்வாக்கு என்பவற்றால் நியாயமான விதத்தில் செயற்பட இயலாது சிரமமுற்று வந்தன. இன்று அத்தகைய அரசியல் தலையீடு எதுவும் கிடையாது. ஜனாதிபதிப் பதவிக்குரிய அதிகாரங்களை இறுக்கமான விதத்தில் நான் பேணிச் செயற்படுவதில்லை என என்மீதும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. என்னால் ஜனாதிபதி பதவிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்திச் செயற்பட இயலும். ஆனால் நான் அந்தப் பதவிக்குரிய அதிகளவிலான அதிகாரங்களை நீக்கிவிடுவதாக வாக்குறுதியளித்தே பதவிக்கு வந்துள்ளேன். ஆதலால் எனது பதவி குறித்த எந்தவொரு விமர்சனத்தையும் நான் கணக்கில் எடுக்கப்போவதில்லை என மைத்திரிபால தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்தார்.

ஆனால் [illegible] சுதந்திரக் கட்சியினரோ? தமது போராட்டத்தை நிறுத்திக் கொள்ளாமல் தொடர்ந்தும் மைத்திரிபாலவுக்கு அரசியல் நிர்வாகம் தொடர்பில் சிரமங்களை ஏற்படுத்தி வந்தனர். கடைசியில் பொறுமை இழந்த நிலையில் எனது ஜனநாயக அடிப்படையிலான செயற்பாடுகளை எனது அரசியல் பின்னடைவு நிலை எனக் கணக்கிட வேண்டாம் என மீண்டும் மைத்திரிபால இறுக்கமான எச்சரிக்கை ஒன்றை மகிந்த வாதிகளுக்கு விடுக்கத் தவறவில்லை.



மைத்திரிபாலவின் பொறுமை எல்லை தாண்டி சினமாக உருவெடுக்கக் காரணமாக அமைந்தது சுதந்திரக்கட்சி மற்றும் பொ.ஐ.முன்னணி என்பவற்றின் செயலாளர்களுக்கு அவர் வழங்கியிருந்த சுதந்திரத்தை அவர்கள் தவறான விதத்தில் பயன்படுத்தியமையே ஆகும். பொதுத்தேர்தலை அண்டிய வேளையில் ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றிக்காக கடுமையாக உழைத்த ராஜித சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க மற்றும் ஹிருணிக்கா ஆகியோர் சுதந்திரக் கட்சியை விட்டு விலகி ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டதால் சினமுற்ற மைத்திரிபால அந்த மூவரையும்கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து விலக்கி, கட்சியின் கட்டுப்பாட்டை பேணிய வேளை மகிந்தவும் அவரது தரப்பினரும் பொ.ஐ. முன்னணியில் போட்டியிட்ட மைத்திரிபால ஆதரவுத் தரப்பினரைத் தோல்வியுற வைக்கும் சதி முயற்சியில் ஈடுபட்டனர். அதற்கு பொ.ஐ. முன்னணி மற்றும் சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் செயலாளர்கள் உடந்தையாகச் செயற்பட்டனர். இதனால் அந்த இருவரையும் அவர்களது செயலாளர் பதவியில் இருந்து நீக்கும் நிலைக்கு மைத்திரிபால தள்ளப்பட்டார். பொதுத் தேர்தல் முடிவுகளுக்கு அமைய தமது தீவிர ஆதரவு வேட்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டதை உணர்ந்த மைத்திரிபால அவர்களைத் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமித்துக் கொண்டார்.

பொதுத்தேர்தலில் எந்த ஒரு தரப்புக்கும் தனித்து அரசமைக்கும் பெரும்பான்மை கிட்டவில்லை. ஐ.தே.கட்சி, சுதந்திரக்கட்சியின் ஒரு தரப்பினரையும் தன்பக்கம் இழுத்து அரசொன்றை நிறுவ முயலுமானால் மைத்திரிபால மீது விரல் நீட்டிக்குற்றஞ்சுமத்த மகிந்த தரப்பினர் காத்திருந்தனர். தேசிய அரசு ஒன்றை நிறுவ ஐ.தே.கட்சி விரும்பாத போதிலும், மைத்திரிபால அவர்களை அதற்கு இணங்க வைத்தபோதிலும் மைத்திரிபால தரப்புக்கு கட்சிக்குள் பெரும்பான்மைப்பலம் கிடையாது என மகிந்த தரப்பினர் சுட்டிக்காட்டினர். தாம் நாடாளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் பதவியையும் கைப்பற்றுவதாகவும் இரண்டு, மூன்று மாதங்களுக்குள் இந்த அரசைக் கவிழ்த்து விடுவோம் எனவும் மகிந்த தரப்பினர் சவால் விடுத்தனர்.

தற்போது மைத்திரிபாலவின் முன்னுள்ள சவால்கள் இரண்டாகும். சர்வதேச போர்க்குற்ற விசாரணை யோசனையை தோல்வியடையச் செய்ய வேண்டியது இவற்றில் முதலாவதாகும். மகிந்த தரப்பினர் நாட்டைப் பொருளாதார நலிவுக்குள் தள்ளியுள்ள நிலையை நேர் சீர் செய்ய வேண்டியதுடன் சீனாவின் கடன் சுமையில் இருந்து நாட்டை விடுவிக்க வேண்டி யுள்ளதும் இரண்டாவது ஆகும். இந்த இரு சவால்களில் வெற்றி பெறு வதுடன் நாட்டின் பாதுகாப்பையும் உறுதி செய்தாக வேண்டும். இந்த அரசை நிலை குலைய வைக்கவே மகிந்த நாடாளுமன்றத்துள் நுழைந்துள்ளார் என்பதை மைத்திரிபால நன்கு அறிவார். மகிந்தவும் அதற்கான காலவேளையை எதிர்பார்த்தே காத்திருக்கிறார். அதேபோன்று ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என மைத்திரிபாலவால் புறமொதுக்கி வைக்கப்பட்டோரும் இந்த அரசை வீழ்த்துவதற்கு அதற்கு தருணம் பாத்து காத்திருக்கின்றனர்.

பேய்களைக் கொண்டும் வேலை வாங்கத் தக்க திறமைசாலிகளும் பலர் உள்ளனர். ஊழல் மோசடி புரிந்தோருக்கு அமைச்சர் பதவிகளை வழங்கி இந்த அரசை இன்னமும் 5 ஆண்டுகளுக்கு எவராலும் வீழ்த்த இயலாது என மைத்திரிபால தெரிவித்திருப்பது பேய்களை அரவணைத்தாவது இந்த அரசைப் பலப்படுத்துவதற்காக இருக்கக் கூடும்.

ஆனால் நாட்டு மக்களோ மைத்திரிபாலவின் அந்த அணுகுமுறை குறித்து கடும்கோபம் கொண்டுள்ளனர். நாட்டு மக்களது அந்தக் கோபம் தணிவதற்கான வாய்ப்பு மைத்திரிபால எதிர்வரும் ஈராண்டு காலத்துக்கு மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகளிலேயே தங்கி உள்ளது.

அவர் நாட்டை சுபீட்சம் மிக்கதொரு நாடாக மாற்றும் தமது நோக்கத்தில் வெற்றி ஈட்டுவாரானால் ஊழல் மோசடிக்காரர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கியதை நாட்டு மக்கள் மறந்து மன்னித்து விடுவர். இல்லையேல் நாட்டுமக்களே! ஐயோ! சிறிசேன என்று மைத்திரி மீது அனுதாபப்படும் நிலையே ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 2 | | | 8 | 6 | 5 |
| | | | | | | | 1 | 2 |
| 1 | | | 6 | 8 | | 4 | | 3 |
| | 9 | | 8 | | | 3 | | 6 |
| | | | 9 | | 3 | | | |
| 3 | | 1 | | | 6 | | 2 | |
| 2 | | 3 | | 7 | 5 | | | 8 |
| 8 | 4 | | | | | | | |
| 7 | 5 | 6 | | | 8 | | 4 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | 8 | 2 | 7 | 5 | 3 | 6 |
| 2 | 3 | 8 | 1 | 5 | 6 | 7 | 9 | 4 |
| 7 | 5 | 6 | 4 | 3 | 9 | 2 | 8 | 1 |
| 5 | 6 | 4 | 7 | 9 | 2 | 8 | 1 | 3 |
| 3 | 7 | 1 | 5 | 4 | 8 | 9 | 6 | 2 |
| 9 | 8 | 2 | 3 | 6 | 1 | 4 | 5 | 7 |
| 4 | 9 | 7 | 6 | 1 | 5 | 3 | 2 | 8 |
| 8 | 1 | 5 | 2 | 7 | 3 | 6 | 4 | 9 |
| 6 | 2 | 3 | 9 | 8 | 4 | 1 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதுகுவலிப் பிரச்சினையா?

பலருக்கும் முதுகுவலி தீராத பிரச்சினையாக இருக்கும். அலுவலகத்தில் வெகு நேரம் கணினி முன் அசையாமல் அமர்ந்திருப்பது, உணவுகளில் அக்கறையின்மை, விற்றமின் 'டி' குறைபாடு, அமருவதில் அலட்சியம், சரியான இருக்கைகள் இன்மை போன்ற பல பிரச்சினைகள் முதுகுவலிக்கு காரணமாக அமைகின்றன. இதுவரை உங்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லாமல் இருக்கலாம். இதை வரவழைத்து கொள்வதும், தடுப்பதும் நம்மை பொறுத்து தான் உள்ளது. வேலையின் போது சில விடயங்களில் கவனம் கொண்டால் முதுகுவலிப் பிரச்சினையிலிருந்து நீங்கள் உஷாராகத் தப்பித்துவிடலாம்.

கல்சியம் எலும்புக்கு முக்கிய தேவை. உணவில் உள்ள கால்சியத்தை உடல் தக்கவைத்து கொள்ள விற்றமின் 'டி' அத்தியாவசியம். விற்றமின் 'டி' இல்லாமல், நீங்கள் எடுத்துக் கொள்ளும் கல்சியம் உணவுகளை உடல் ஏற்காது. அதைத் தவிர விற்றமின் 'ஏ', விற்றமின் 'சி', விற்றமின் 'கே' ஆகியவை எலும்புத் தேய்மானத்தைத் தடுக்கக் கூடிய வல்லமை பெற்றவையாகும். எலும்பின் வளர்ச்சி, வலிமையைக் கல்சியம், மக்னீசியம், இரும்பு சத்து ஆகியவற்றை உணவில் சரிவர எடுத்து கொள்ளுதல் ஒரு சீரான சத்தான உணவுப் பழக்கத்தை அமைத்துக் கொள்ள உதவும். விற்றமின்களுடன் தாதுக்களும் நமக்கு முக்கியமானவை. சிறிய உடற் பயிற்சிகள் முதுகு வலிக்கு நல்ல தீர்வாக இருக்கும். நாற்காலியில் உட்கார்ந்த நிலையில், மூட்டு மற்றும் கால்களை நேராக வைத்தபடி கீழே குனிந்து உங்கள் கால் விரல்களை தொட வேண்டும். 20 எண்ணிக்கைகள் வரை இதே முறையில் இருக்கவும். நாள்பட பயிற்சியின் நேரத்தை 2 நிமிடங்கள் வரை செய்யலாம். கீழ் முதுகு வலியால் அவதிப்படுவோர், மூட்டு வலிகள் இல்லாத பட்சத்தில் தரையில் மண்டியிட்டு அவ்வப்போது உட்காருங்கள். எப்போதும் இப்படி உட்காருவது சிறந்த முறையாகும்.



**ஆவணி-29**
**செவ்வாய்க்கிழமை**
**15.09.2015**

*திதி: துதியை பி.ப.04.24 வரை*
*நட்சத்திரம்: அத்தம் மு.இ.07.31 வரை*
*சுபநேரம்: 10.33–12.03 வரை*
*இராகுகாலம்: 03.03–04.33 வரை*

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 400 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 650 |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 500 | 420 |
| சுறா | 600 | 500 | – | 700 | 600 | – |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 300 | – |
| விளை | 650 | 400 | 400 | 600 | 300 | 350 |
| சூரல் | 350 | 400 | 350 | 450 | 200 | – |
| கும்பிளா | 450 | 350 | 300 | 400 | 200 | 350 |
| கிழாக்கன் | 450 | 800 | – | 400 | 400 | – |
| ஓரா | 400 | 400 | 300 | 300 | 200 | 350 |
| திரளி | 250 | 250 | 200 | 200 | 100 | 300 |
| நகரை | 200 | 200 | 150 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 80 | 80 |
| ஒட்டி | 250 | 200 | 250 | 250 | 100 | 250 |
| திருக்கை | 150 | 300 | 250 | 300 | 200 | 140 |
| பாலை | 450 | 250 | 300 | 400 | 200 | – |
| வாழை | 100 | 150 | – | 300 | 200 | 250 |
| கொய் | 100 | 100 | 100 | 120 | 50 | [illegible] |
| மதனம் | 150 | 250 | 300 | 250 | 100 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 40 | 70 | 40 | 60 | 40 | 20 |
| கத்தரி | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 40 |
| கரட் | 70 | 120 | 120 | 80 | 120 | 120 | 100–120 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 40 | 40 | 60 | 60 | 50–60 | 40 |
| பயிற்றை | 80 | 40 | 40 | 50 | 40 | 80 | 80–100 | 30 |
| பாகல் | 100 | 80 | 100 | 80 | 70 | 120 | 100–110 | 60 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | 120 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 110 | 100 | 100 | 110 | 100–120 | 90 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 80 | 100 | 100–120 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 | 80 | 50–60 | 25 |
| தக்காளி | 40 | 40 | 40 | 40 | 40 | 70 | 60–80 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 70 | 40 | 60 | 25 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 40 | 30–35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 20 | 20 | 40 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 140 | 180 | 160 | 130 | 120 | 200–220 | 100 |
| புடோல் | 40 | 60 | 40 | 40 | 40 | 60 | 60–80 | 30 |
| கோவா | 60 | 70 | 60 | 60 | 60 | 80 | 80–100 | 40–50 |
| வெண்டி | 40 | 30 | 30 | 40 | 60 | 40 | 40–50 | 25 |
| போஞ்சி | 160 | 120 | 180 | 160 | 140 | 140 | 120–160 | 140 |
| லீக்ஸ் | 80 | 70 | 80 | 80 | 70 | 120 | 70–80 | 70 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 60 | 60 | 40–50 | 35–50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 80 | 90 | 80 | 90 | 80–100 | 80–100 |
| தேசிக்காய் | 70 | 100 | 120 | 110 | 100 | 120 | 120–160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15–20 | 08 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 120 | 100 | 120 | 100–120 | 100 |
| இராசவள்ளி | 150 | 120 | – | 160 | 80 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 120 | 60 | 140 | 100 | 120 | 70 |

## நன்மை செய்வதே தர்மம், தீமை செய்வதே பாவம்

**விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....**



துன்பங்களைக் கண்டு அஞ்சாதே. பெரிய மரத்தின் மீது புயல் காற்று மோதத் தான் செய்யும். கிளறி விடுவதால் நெருப்பு நன்கு எரியத் தான் செய்யும். தலையில் அடிபட்ட பாம்பு முன்னிலும் வேகமாகப் படமெடுக்கத் தான் செய்யும். ஆகவே துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமல், உறுதியாய் எதிர்த்து நில். உன்னால் எதுவும் முடியும். எப்பொழுதும் விரிந்து மலர்ந்து கொண்டிருப்பது தான் வாழ்க்கை. மாறாக சுருங்கி, மடங்கிக் கொண்டிருப்பதே மரணமாகும். தன்னுடைய சுயநலத்தை மட்டும் கவனித்துக் கொண்டு, சுக போகத்துடன் வாழும் ஒருவனுக்கு நரகத்திலும் இடம் கிடைக்காது. மற்றவர்களுக்கு நன்மை செய்வதே தர்மம். தீமை செய்வதே பாவம். வலிமையும் ஆண்மையுமே வீரம். பலவீனமும் கோழைத்தனமுமே மரணம். மற்றவர்கள் மீது அன்பு செலுத்துவதே புண்ணியம். பிறரை வெறுத்து ஒதுக்குவதே பாவம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெண்ணின் குணாதிசயங்கள் பற்றிய


# பொய்மைகளும் உண்மைகளும்

**(நேற்றுமுன்தினம் தொடர்ச்சி)**

இவற்றைப் பாதுகாக்கவும் நிர்வகிக்கவும் அதிகார அமைப்புக்களும் தேவைப்பட்டன. மேலும் இவற்றை அடைய குழு அங்கத்தவரிடையே, அதாவது ஆண்களிடையே போட்டி ஏற்பட்டு பலவான் குழுத்தலைமையையும் சொத்துக்களையும் தனதாக்கிக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. இது இதுவரை காலமும் இருந்து வந்த குழுப்பிணைப்பில் பெரும் விரிசலை ஏற்படுத்தியது. நிலம், மிருகங்கள், அடிமைகள் முதலிய இன்னோரன்ன அம்சங்கள் பொதுச் சொத்தாகக் கருதப்பட்டநிலை மாறி மனிதனிதர்களின் சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட்டன. உடல் வலிமையும் ஆயுதங்களைக் கையாளும் ஆற்றலும் இவற்றைப் பெற்றுத் தரும் அடிப்படைக் காரணிகளாகியபோதும் சொத்துக்களின் பெருக்கம் காலகதியில் வேறு பல அதிகாரங்களையும் ஒருவருக்கு அளித்தது. மனித உறவுகளில் அடிப்படையாகக் கொண்டு சொத்துள்ளவன், சொத்தற்றவன் என்றும் ஆண்டான் அடிமை என்றும் புதிய உறவுகள் பிறந்தன. மனிதர்கள் பரஸ்பரம் தங்கியிருந்த நிலைபோய் பலர் ஒருசிலரில் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது. இதன் பிரதிபலிப்பு பெண்களைப் பொறுத்த வரை எவ்வாறு அமைந்ததெனப் பார்ப்போம். மனித குழுக்கள் தமது குழுநீடிப்புக்காகவும் குழுப் பாதுகாப்புக்காகவும் பெண்களில் தங்கியிருந்த நிலை மாறித் தற்போது பெண் தனது பாதுகாப்புக்காகவும், ஜீவனோபாயத்துக்காகவும் ஆணில் தங்கியிருக்க வேண்டியவளானாள். முன்னையது இயற்கையின் விளைவாக இருக்க பின்னையது மனிதரால் உருவாக்கப்பட்ட ஒன்றாகியது. ஆண் தனது சொத்துக்களைத் தனது சொந்த வாரிசுக்கு கையளிக்க வேண்டி, பெண்ணுக்கிருந்த சுதந்திரத்தை மறுத்ததுடன், தனது உரிமையை மட்டும் அவர்களில் நிலைநிறுத்திக் கொண்டான். பெண்ணானவள், சமூகத்துக்கு வாரிசை வழங்கிய கடமையிலிருந்து மாறித் தனி மனிதனது வாரிசைப் பெற்றுத்தர வேண்டிய கடப்பாடு உடையவளானாள். அவளுக்கும் சமூகத்துக் கும் இருந்த நேரடித் தொடர்பும், பங்களிப்பும் குறுக்கப்பட்டு அல்லது முடக்கப்பட்டு ஆணைச் சார்ந்தவளாக அவனது நலம் பேணுபவளாக எல்லைப்படுத்தப்பட்டாள். இங்கு பெண்மை என்பது தாய்மையின் சின்னமாக இருந்த நிலைமாறி போகத்தின் சின்னமாக்கப்பட்டது. சுருங்கக்கூறின் ஆண் ஆதிக்கமும் ஆண்வழிச் சமூகத் தொடர்ச்சியும் பெண்ணை ஆணின் அடைக்கலப் பொருளாக்கியது. ஆண் ஆதிக்கம் நிலைபெறவே சமூகத்தில் சகல அம்சங்களும் அதாவது வாழ்க்கை முறைகள், தொழிற்பகுப் புக்கள், அதிகார அமைப்பு, ஆட்சிமுறை, பொரு ளாதார முறை, சொத்துரிமைகள், சட்டங்கள் முதலியன ஆணை முதன்மையாகக் கொண்டே தோற்றம் பெற்றன. இதன் சாராம்சத்தை சமூ கத்தின் மேல் கட்டுமானங்களாகிய நம்பிக்கைகள், விழுமியங்கள், நெறிமுறை போன் றவை அப்படியே உள்வாங்கிக்கொண்டன. இவை காலம் காலமாக வலியுறுத்தப்பட்டுப் பேணிப் பாதுகாக்கப்பட்டும் வந்ததன் விளைவாக சமூக கலாசாரத்தில் இரண்டறக் கலந்து பட்டுப் போனமை ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல. இவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் ஆணும் பெண்ணும் வளர்த்தெடுக்கப்பட்டார்கள். ஆண் முதன்மையானவனாக, ஆளும் குணம் உள்ளவனாக, சமூகநலன் பேணுபவனாக, இரட்சிப்பவனாக, போற்றப்பட வேண்டியவனாக, சுகங்களை அநுபவிக்க வேண்டியவனாக சித்திரிக்கப்பட, பெண்ணோ ஆணில் தங்கியிருக்க வேண்டியவளாக, அவனது பாதுகாப்பில் இருக்க வேண்டியவளாக, அவனது சுகம் பேணுபவளாகவும், கடமைகளைச் செய்ய வேண்டிய வளாகவும் வடிவமைக்கப்பட்டாள். மேற்குறிப்பிட்ட நிலைப்பாட்டை செவ்வனே நடைமுறைப்படுத்திக் கொள்ளும் வகையில் அவரவர் குணாதிசயங்களும் ஆற்றுப்படுத்தப்பட்டன. ஆண் வீரம் உறுதி ஆகிய குணங்களைக் கொண்டவனாகவும், பெண் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய குணாதிசயங்களைக் கொண்டவளாகவும் விளங்கக் கற்பிக்கப்பட்டனர். இவற்றின் வார்படங்களாக நாளாந்த சமூகமயமாக்கல் செயல்முறைகள் மட்டுமல்ல, மதங்கள், இலக்கியங்கள், சமூக நெறிமுறைகள் மற்றும் சகல சமூக நிறுவனங்களும் தொழிற்படலாயின.

உலகில் எதுவும் ஸ்தம்பிக்கப்பட்டு போவதில்லை. எவையும் எப்போதும் மாறிக்கொண்டே இருப்பன. இருப்பினும் இம்மாற்றத்தின் வேகத்திலும், போக்கிலும் தான் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**(தொடரும்)**





# மனைவியின் அன்பை பெற வேண்டுமா ?

**1. பெண்களை மதியுங்கள்**

வீட்டு வேலை தவிர, தங்களால் நிறைய விடயங்கள் முடியும் என்று பெண்கள் நிரூபித்து நீண்ட நாள்களாகி விட்டன. எனவே மனைவியை அவரது திறமைக்காக மதியுங்கள். புதிய விடயங்களைச் சாதிப்பதற்கு ஊக்குவியுங்கள்.

**2. கனவுகளைப் பின்பற்றட்டும், உங்களை அல்ல**

இன்றைய பெண்கள் இலக்கு சார்ந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு ஓர் இலட்சியம் இருக்கிறது, ஒரு கனவு இருக்கிறது. உங்களுக்காக அவர்கள் தங்கள் கனவுகளை விட்டுவிட வேண்டும் என்று வற்புறுத்தாதீர்கள்.

**3. எல்லை தாண்டிச் சிந்தியுங்கள்**

மனைவியை சமாதானபடுத்துவதற்கான பழைய விதிகள் எல்லாம் காலாவதியாகிவிட்டன. புதிய யோசனைகளில், சோதனை முயற்சிகளில் ஈடுபடத் தயங்காதீர்கள். மனைவிக்குத் திடீர் ஆச்சரியம் கொடுக்கும் வழக்கத்தைக் கைவிடாதீர்கள்.

**4. உணர்வுகளை வெளிபடுத்துங்கள்**

ஆண்கள் அழ மாட்டார்கள் என்பது சரிதான். உணர்வுகளை வெளிபடுத்தும் உணர்வுபூர்வமான ஆண்களையே பெண்கள் விரும்புகிறார்கள் என்பதே உண்மை. ஆனால் எதற்கெடுத்தாலும் கண்ணைக் கசக்காதீர்கள். அழுமூஞ்சி ஆண்களை பெண்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது.

**5. ஆலோசனை கேளுங்கள்**

நீங்கள் ஒரு முடிவெடுக்கும்போது உங்கள் மனைவியின் ஆலோசனையையும் கேளுங்கள். அது பணத்தைப் பற்றியதாக இருக்கலாம், வேலை, தொழிலைப் பற்றியதாக இருக்கலாம். மனைவியின் கருத்தைக் கேளுங்கள், அதற்கு மதிப்புக் கொடுங்கள்.

**6. சமைக்கத் தெரிந்து கொள்ளுங்கள்**

நேசத்தில் மட்டுமல்ல, சமையலிலும் கெட்டிக்காரராக இருக்கும் கணவரை மனைவிக்குப் பிடிக்கும். அப்படிபட்ட கணவர் தான் அவர்களை பொறுத்தவரை முழுமையானவர்.

**7. பேசுங்கள்**

பேசுவது பெண்களுக்குப் பிடிக்கும் என்று தெரியும். மனைவியுடன் வழக்கமான விடயங்களை மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதாரம், இலக்கியம் என்று பல விடயங்களைப் பற்றியும் பேசுங்கள். உங்களின் எதிர்காலத் திட்டங்கள், கனவுகள், பயங்கள் என்று எல்லாவற்றைப் பற்றியுமே பகிர்ந்துகொள்ளுங்கள்.

**8. மனைவியின் குடும்பத்தில் பங்கு கொள்ளுங்கள்**

வீட்டுக்கு வரும் மனைவி உங்கள் குடும்பத்தோடு ஒன்றிப் போய்விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். அப்படி நீங்களும் ஒரு அன்பான மருமகனாக மனைவியின் வீட்டில் அக்கறை காட்டுவது அவசியம்.

**9. அழகில் கவனம் செலுத்துங்கள்**

அழகு, பெண்கள் மட்டும் சம்பந்தபட்ட விடயம் என்று யார் சொன்னது? வெளியிடங்களுக்குப் போகும்போது உங்கள் மனைவியை வியப்பாக நான்கு பேர் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அப்படி அவரும் எதிர்பார்ப்பது நியாயம்தானே?

**10. அவ்வப்போது வழக்கம்போல் இருங்கள்**

எல்லாவற்றிலும் புதுமையாக இருக்க வேண்டும் என்பதில்லை. அவ்வப்போது, நீ தான் எனக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம் என்று பழைய டயலாக் பேசுவதில் தவறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணம் அறிந்து குறைதீர்



ஒரு நாள் நள்ளிரவு நேரம், கள்ளத்தனம் கொண்ட ஓர் ஓநாய் ஆட்டு மந்தையினுள் புகுந்து ஆடுகளை அடித்துக் கொல்ல முயன்றது. அப்போது அந்த ஆட்டு மந்தைக்குக் காவலாக இருந்த நாய்கள் ஓநாயை துரத்திப் பிடித்து நன்றாகக் கடித்துக் காயப்படுத்தி விட்டன.


படுகாயமடைந்த ஓநாய் நடக்க முடியாமல் வேதனை யுடன் ஓரிடத்தில் ஒதுங்கிப் படுத்திருந்தது. அதற்குக் கடுமையான பசி வேறு. அந்தச் சமயத்தில் அந்த வழியாக ஓர் மான் சென்று கொண்டிருந்தது. ஓநாய் அந்த மானைக் கூப்பிட்டது.

மான் நண்பரே! என் எதிரிகளால் இப்படிப் படு காயப்படுத்தப்பட்டு, நான் நடக்க முடியாமல் இருக்கி றேன். தண்ணீர் தாகம் அதிகமாக இருக்கிறது. எனக்கு ஒரு கை கொடுத்து பக்கத்திலிருக்கும் நீரோடை வரை என்னைக் கொண்டு சென்று விட்டு விட்டால் நான் நீர் அருந்தித் தாகம் தீர்த்துக் கொள்வேன். தயவு செய்து உதவ வேண்டும்!

என உருக்கமாக வேண்டிக் கொண்டது. ஓநாயின் கபட நாடகத்தை உணராத மான் அதன் மீது அனுதாபம் கொண்டு அது நடப்பதற்கு உதவி செய்வதற்காக அதன் அருகே சென்றது. கைக்கு எட்டும் தூரத்திற்கு மான் வந்ததும் பசியோடிருந்த ஓநாய் திடீரென அதன் மீது பாய்ந்தது. அதைக் கொன்று அதன் இறைச்சியை உண்டது.

பிள்ளைகளே.... பிறர் கஷ்ட நிலையில் இருக் கும்போது நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டியது கடமைதான். ஆனால் நாம் எவருக்கு உதவி செய்கிறோம் என்பதையும் கவனிக்க வேண் டும்.



## விடுகதைகள்

1) விடிய, விடிய பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம் அது என்ன?
நட்சத்திரங்கள்

2) காட்டிலே இருக்கும் குடை, வீட்டில் இல்லாத குடை அது என்ன?
காளான்

3) கிண்ணம் நிறையத் தண்ணீர் இருக்கிறது குருவி குடிக்க வழியில்லை அது என்ன?
இளநீர்

4) இரத்தத்தில் வளர்வது ஆனால், இரத்தம் இல்லாதது அது என்ன?
நகம்

5) கேடயமுள்ள வீரனுக்கு வாள் இல்லை அவன் யார்?
ஆமை



## ஒத்துண்ணல்

இட்டதோர் தாமரைப்பூ
இதழ் விரித்திருத்தல் போலே
வட்டமாய் புறாக்கள் கூடி
இரையுண்ணும்அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்துமில்லை;
வேறுவேறு இருந்து அருந்தும்
கட்டில்லை கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்கம் இல்லை!

–பாரதிதாசன்

## தெரிந்து கொள்ளுங்கள்

1.தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் மூச்சு கருவியின் பெயர் ஸ்கியூபா ஆகும்.

2.முதன் முதல் 1893 ம் ஆண்டு நினைவு தபால் தலையை வெளியிட்ட நாடு அமெரிக்கா.

3.தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் மூன்று அடிப்படை நிறங்கள் பச்சை,நீலம்,சிகப்பு

4.பிளாஸ்டிக்குகளை எரிக்கும் பொழுது டையாக்சின் என்ற நச்சுப் புகை வெளியேகிறது.

5.பாம்பு நாக்கின் மூலம் வாசனையை உணர்கிறது.

6.காண்டா மிருகத்தின் கொம்புகள் உண்மையில் எலும்புகள் அல்ல.அவை மிகக் கடினமான மயிரிழைகளால் உருவானவை.

7.அனப்லெப்ஸ் என்ற மீனுக்கு இரண்டு கண்களில் நான்கு விழித்திரைகள் உண்டு.

8.கடுமையான வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள நீர் யானையின் தோலில் ஒருவித இளஞ்சிகப்பு நிறத்தாலான திரவம் சுரந்து, குளிர்ச்சியைக் கொடுக்கிறது.

9.உண்ணி எனப்படும் தெள்ளுப்பூச்சி, ஓராண்டு வரையிலும் கூட பனிக்கட்டியினுள் உயிருடன் இருந்து, பனி உருகிய பின் வெளிவரும் ஆற்றல் கொண்டது.

10.நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.

# நட்புக்கு இல்லை எல்லை

நம் எல்லோருடைய வாழ்விலும் நட்பு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. எம் சுக துக்கங்களை பகிர்ந்து கொள்ள மட்டுமல்ல, நம் சந்தோஷங்களைப் பல மடங்கு அதி கரிக்கவும், துன்பங்களை முற்றிலும் குறைக்கவும் எமக்கு எப்போதுமே ஒரு நட்பு தேவைப்படுகிறது. இருவருக்குமி டையில் ஒரு நல்ல அலைவரிசை உருவா குமிடத்தில் நல்லதொரு நட்பு செட் ஆகி விடும். நல்ல நட்புக்கு வயது ஒரு தடை யல்ல. ஆண்–பெண் பாகுபாடும் கிடை யாது. அதேபோல், ஆண் நட்பை விட பெண் நட்போ அல்லது பெண் நட்பை விட ஆண் நட்போ சிறந்தது என்று சொல்லி விடவும் முடியாது. ஆனாலும், ஒரு பெண்ணுடன் கொள்ளும் நட்பை விட, ஒரு ஆணுடன் வைத்துக் கொள்ளும் நட்பு வித்தியாச மானது. ஏன் சம்திங் ஸ்பெஷல் என்று கூட சொல்லலாம். நீங்கள் ஆணோ, பெண்ணோ தெரியாது. ஆனால், நீங்கள் ஆண்களின் நட்பையே பெரிதும் விரும்





புவீர்கள் என்பதை உணர்ந்துள்ளீர்களா? ஆண்கள் தான் தங்கள் நட்புக்காக எதை யும் செய்வார்கள் என்பதும் உண்மை தான். ஆண் நட்பே ஒரு ஸ்பெஷல் தான் என்பதற்கான 8 காரணங்கள் இதோ உங் களுக்காக:

**தயக்கத்தைத் திறப்பார்கள்**

ஆண் நட்புக்கு அழகே இதுதான். உங்கள் மனதில் உள்ளவற்றை நீங்களாகவே போட்டு உடைக்கும் வரை அநாவசியமாக உங்கள் ஆண் நண்பர்கள் உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள்.

**அந்த நிமிடத்தில் வாழ்வார்கள்**

ஆண் நட்புக்கு தேவையில்லாத ஃபார்மா லிட்டி எல்லாம் கிடையாது. நண்பனின்/ நண்பியின் பிறந்தநாளை மறந்து விட்டோமே என்று மூலையில் உட்கார்ந்து அழமாட் டார்கள். இதுபோன்ற அற்பத் தனமான சின்ன விஷயங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, சந்தோ ஷமாக இருப்பார்கள் நண்பர்களையும் சந் தோஷப்படுத்துவார்கள்.

**உங்கள் மதிப்பு தெரியும்**

உங்கள் ஆண் நண்பர்களுக்கு உங்கள் குழந் தைகளின் பெயரோ, உங்களுக்கு என்ன உணவு பிடிக்கும் என்பதோ அல்லது உங்கள் சொந்த விஷயங்களோ ஒரு பொருட்டல்ல. உங்களுடன் உணர்வுபூர்வமாக இருப்பது தான் அவர்களுக்கு முக்கியம்!

**எப்போதும் உங்கள் பக்கம்**

ஆண் நட்பில் பொறாமை என்ற வார்த் தைக்கே இடம் கிடையாது. அவர்கள் நட்பு உண்மை யானால், உங்களுடைய அனைத்து முடிவுகளிலும் உங்களுக்கு ஆதரவாகவே இருப்பார்கள்.

**நாடகம் ஆடுவதில்லை**

பெண் நண்பர்கள் போல் ஆண் நண்பர் களுக்கு நாடகம் ஆடத் தெரியாது. தங்கள் மனதில் எதையும் போட்டு மூடி மறைக்க மாட்டார்கள். எதற்கும் தயங்காமல் பட் பட்டென்று வெளிப்படையாகப் பேசி விடு வார்கள். சக நட்புக்கு மரியாதை

**சக நட்புக்கு மரியாதை**

அளிப்பதில் ஆண்களுக்கு நிகர் ஆண்களே! இதன்மூலம் ஆயுளுக்கும் அவர்கள் உங் களுக்கு நண்பர்களாகவே இருப்பார்கள். குறைந்த பேச்சு, நிறைய செயல் ஆண் நண் பர்கள் வளவளவென்னு அதிகம் பேசுவ தில்லை. அதற்குப் பதில், காரியத்தைச் செய்து முடிப்பதில் உறுதியாக இருப்பார்கள்.

**உங்களை மதிப்பிட மாட்டார்கள் -**

ஆண் நட்பின் முக்கிய அம்சமே இதுதான். நீங்க நீங்களாகவே இருக்கலாம். நீங்கள் என்ன பேசுகிறீர்கள், செய்கிறீர்கள் என்று அலசி ஆராய்ந்து கொண்டிருக்க மாட் டார்கள் உங்கள் ஆண் நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனைக்குதவாத உணவு விற்பனை: வர்த்தகர்களுக்கு அபராதம்

மட்டக்களப்பு, செப்.14

மட்டக்களப்பு நகரில் மனித பாவனைக்குதவாத உணவுப்பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 6 வர்த்தகர்களிடமிருந்தும் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் பிரபல உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், பழக் கடைகள் உட்பட உணவுப்பொருள் விற்பனை மையங்கள் சுகாதார அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டபோது மனித பாவனைக்குதவாத பெருமளவு உணவுப்பொருள்கள் மற்றும் பழுதடைந்த உணவுப்பொருள்களை தயாரிக்கும் பாத்திரங்கள் என்பன கைப்பற்றப்பட்டன. அத்துடன் சுகாதார மற்ற முறையில் உணவு விற்பனையில் ஈடுபட்டு வந்த ஆறு வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டனர். குறித்த வர்த்தகர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லாஹ் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோதே குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. (ற)

## 'சிஎஸ்என்' நிறுவனத்தை கைமாற்ற தடை உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வருக்கு சொந்தமான சிஎஸ்என் தொலைக்காட்சி நிறுவனத்தை விற்பனை செய்யவோ, குத்தகைக்கு விடவோ அல்லது தற்காலிக கைமாற்றம் செய்யவோ தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடுவெல நீதிவான் நீதிமன்றமே இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதிமோசடி தொடர்பில் பொலிஸ் பிரிவின் கோரிக்கைக்கு இணங்கவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே சிஎஸ்என் நிறுவனத்துக்கு நிதிவரும் தரப்புக்கள் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விசாரணைகள் பணச்சலவை சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்போது பல்வேறு முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன என்று தகவல்கள் கசிந்துள்ளன. இந்தநிலையிலேயே சிஎஸ்என் நிறுவனத்தை கைமாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் கூறப்பட்டிருந்தது. (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமி சின்னத்தம்பி

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி சின்னத்தம்பி நேற்று (13.09.2015) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் கனகரத்தினம், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் தர்மரத்தினம் (அதிபர் யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை), தர்மராணி ஆகியோரின் அன்புத் தாயும், பூமணி, சிவனேஸ்வரி, கிரிசாம்பாள் (ஆசிரியர் யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை), யோகராஜா (கிளை முகாமையாளர் - நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2015) திங்கட் கிழமை பி.ப 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சிவியாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்ற வயலின் ஆசிரியை
திருமதி றெபேஷன் கலாசக்தி
அவர்களது பாசமிகு தந்தையார்
**சிவரத்தினம் நவரத்தினம்**
அவர்களது மறைவுத் துயர் அறிந்து அன்னாரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கிழவன் காடு
கலாமன்றம், காரைநகர்.

நிர்வாக சபையினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### அருட்தந்தை J.P.E செல்வராஜா அடிகளார்



அச்சுவேலி மண்ணின் மைந்தன் அருட்தந்தை J.P.E. செல்வராஜா அடிகளார் எல்லோர் மேலும் அன்பும் அக்கறையும் கொண்டவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர், ஏழையர், பணக்காரர் என்ற வேறு பாடற்றவர்.

எல்லோர்க்கும் எல்லாமாய் திகழ்ந்தவர். தன்னலம் கருதாது தாரள மனப்பாங்குடன் கிறிஸ்துவின் பணியினைத் தன்பணியாய்க் கொண்டு வாழ்ந்தவர். இவ்வுலகில் இவரை நேசித்த நாம் விண்ணுலகில் அவர் ஆன்மா ஆண்டவன் அடியில் அமைதி பெற அவருக்காய் வேண்டுவோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
அச்சுவேலி.

## இதய அஞ்சலி

### குமாரசாமி கனகசுந்தரம்



நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலய திருப்பணிச் சபைத் தலைவரும், பரிபாலன சபை உறுப்பினரும், தொண்டர் சபையின் காப்பாளரும் காமாட்சி அம்பாள் கூட்டுறவுக் கைத்தொழிற் சங்க முன்னாள் முகாமையாளரும் , காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய முன்னாள் தலைவருமான குமாரசாமி கனகசுந்தரம் அவர்களின் இழப்பு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். இதயத்தால் அஞ்சலி செய்து ஆன்மா சாந்தியடைய அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி.

காமாட்சி அம்பாள் ஆலய சமூகத்தினர்.

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
24 . 07 . 1981



மறைவு
16 . 08 . 2015

### சந்திரலிங்கம் சுதர்சன்

அன்னார் நோயுற்றிருந்த வேளையில் வைத்தி யசாலையிலும் இறுதி நிகழ்வின் போதும் சகல வழிகளிலும் உதவிய டயலக் நிறுவன முகாமையாளர் சக உத்தியோகத் தர்களுக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கடந்த 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த அமரர் சந்திரலிங்கம் சுதர்சன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 15.09.2015 செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.


இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பக்கஸ் லேன், மானிப்பாய். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வாழ்நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தினம்

[ Bsc.(Cey.), Ph.D (Lond.), FRAS (Lond.), F.Inst.P. (Lond.), C.Phy. (Lond.), முன்னாள் மூன்றாவது துணை வேந்தர்-யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் (1994-04.01 - 1996.06.30)]



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வாழ்நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தினம் (முன்னாள் உபவேந்தர்-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வாழ்நாள் இயற்பியல் பேராசிரியர்) கடந்த (09.09.2015) புதன்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ''ஓவசியர்'' கந்தையா-யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புஸ்பவதியின் அன்புக் கணவரும், வைத்திய கலாநிதி தயாபரன், குமுதினி, வைத்திய கலாநிதி ஜயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திய கலாநிதி பிரியதர்சினி, பாலகுமார், கணேஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், கிருஷ்னி, செந்தூரன், சக்தியாள் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ஆறுமுகம், இராசம்மா, இராசரட்ணம், மற்றும் பேரம்பலம் ஆகியோரின் சகோதரரும், கணேசராசா, கமலாதேவி, மகானந்தன், வைத்திய கலாநிதி மங்களேஸ்வரி, பேராசிரியர் குகனேசராசா, புனிதவதி, ஞானதிலகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14.09.2015 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர்கள், நண்பர்கள், யாழ்ப்பாணபல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், மாணவர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில்
மேற்கு, கோண்டாவில்.
T.P:- 0777 353740

தகவல்:
கந்தையா கணேசராசா

## மரண அறிவித்தல்கள்

### வரதராஜா முருகாநந்தன்

(Unite development manager Union Assurance)



வண்ணார் பண்ணை, கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட வரதராஜா முருகாநந்தன் நேற்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரதராஜா - செல்வநாயகி தம்பதியினரின் அன்பு மகனும், சந்திரிகாவின் அன்புக் கணவரும், நிவாசினியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கயத்திரியின் அன்பு அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

22/4, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, தாவடி.

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி பூரணம் குணரத்தினம்



குணபூரணவாசா, பதிவாளர் லேன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் குணரத்தினம் கடந்த (11.09.2015) வெள்ளிக்கிழமை மாத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி -சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின் னத்தம்பி குணரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அழகையா, தங்கம்மா, பொன்னையா, கந்தசாமி (மட்டுவளை அப்பு) அரசரத் தினம் மற்றும் நவரத்தினம் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரி யும்,ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), பூரணகுணரேவதி (கட்டைப்பிராய்), குகதாசன் (கனடா), மகேந்திரதாசன் (கனடா), சரோஜினிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை, மாத்தளை, செண். தோமஸ் பெண்கள் கல்லூரி), சகுந்தலாதேவி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), பத்மநாதன் (கட்டப்பிராய்), ராஜினி (கனடா), நந்தகுமாரி (கனடா) , ஜெயந்திரபூபதி (மாத்தளை), காலஞ்சென்ற பாஸ்கரநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், புவனராஜ்-தர்சினி (லண்டன்), கீதா-முரளிகாந்தன் (கொழும்பு), தேவவிஜித்தா(ஜேர்மனி), தேவஜெசித்தா (ஜேர்மனி), பஹீர் (கட்டப்பிராய்), அகில் (கட்டப்பிராய்), கிருபா (கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி, 2ஆம் வருடம்), ஜனனி (கனடா), ஜகதீபன் (கனடா), ஸ்ரீபன் (கனடா), விதுசன் (கனடா), அனுஜனா (அமெரிக்கா), தர்சன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துவாரகா (லண்டன்), அட்சதன் (லண்டன்), கைலாஷ் (கொழும்பு), ஹரினி (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும்(16.09.2015) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் களுதாவளை இந்து மயானம் மாத்தளையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/10, அகலவத்தை றோட், மாத்தளை,
கு. சரோஜினிதேவி (0664926175)
கு. குகதாசன் (கனடா,0014165878902)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலலும்
## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



### அமரர் லக்ஸ்மன் யோசப்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் வழி காட்டியாகத் திகழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து விண்ணகம் எய்திய எங்கள் குலத்தின் ஒளிவிளக்கு அமரர் லக்ஸ்மன் யோசப் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து எங்கள் இல்லத்திற்கு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு எம் துயரில் பங்கெடுத்தவர்களுக்கும், தொலைபேசி மூலமும், ஈமெயில் மூலமும், ஈமெயில் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், இறுதி யாத்திரையில் மற்றும் இரங்கல் திருப்பலியில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் உற்றார், உறவினர்; நண்பர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும், இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுத்த ஆலய பங்குத் தந்தை அருட்பணி அன்ரனிஸ் ஸ்ரீபன் அடிகளாருக்கும், ஏனைய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

எமது தந்தையின் 31ஆம் நாள் நினைவு நாளாகிய இன்று [14.09.2015] திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது ஞாபக சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் யாருக்காவது அழைப்பு விடத் தவறியிருந்தால் பெரு மனதுடன் மன்னித்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

இல.25, உடுவில் தெற்கு,
கன்னாகம்.
021 225 5399

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### துரையப்பா ஜெயபதி
(முன்னாள் காகிதாலை ஊழியர் வாழைச்சேனை)

மண்ணில்
01
.
07
.
1939



விண்ணில்
13
.
09
.
2015

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி மட்டக்களப்பு கறுவாக்கேணி வாழைச்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா ஜெயபதி நேற்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - செல்லமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் ஜெயரூபன் (அவுஸ்திரேலியா), ஜெயதீபன் (மட்/செங்கலடி மத்திய கல்லூரி), ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆரணி (அவுஸ்திரேலியா), பாலகௌரி (மட்/ஆரயம்பதி மகாவித்தியாலயம்), சர்மிளா (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஜெயமணி, ஹரிச்சந்திரா, பொன்மணி, வேல்சந்திரன், ஞானமணி ஆகியோரின் சகோதரனும், சறோஜினி தேவி, ராஜேஸ்வரி, தவரட்ணம், மகேந்திரன் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), கணேசநாதன், சீவரெட்ணம், திரவியராணி, காலஞ்சென்றவர்களான பொன்னையா, கமலநாயகி, ராஜலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் கதிர்காமநாதன், ஆனந்தராஜா ஆகியோரின் பாசமிகு சகலனும், சுகந்தினி, மாலா, ஜெகதா ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், சரணா, கிருஷிகன், பவந்தி, ஓவியா, சஹானன், இனிய ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு 14.09.2015 திங்கட்கிழமை சிறுப்பிட்டி இல்லத்தில் வைக்கப்பட்டு 15.09.2015 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி சனசமூக நிலைய வீதி,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
0773397795/0212058802

தகவல் : ஆ.மகேந்திரன்
(இலங்கை மின்சாரசபை)
சே.கணேந்திரன்

## மரண அறிவித்தல்

### கந்தையா சோமசுந்தரம்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், D5 கமரிகுடா - பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா- சோமசுந் தரம் நேற்று முன்தினம் (12.09. 2015) சனிக்கிழமை காலமாகி விட் டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- அகத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், வரதராஜா (நெதர் லாந்து), சகுந்தலாதேவி (பிரான் ஸ்), றஞ்சினிதேவி, காலஞ்சென்ற வரதகுணராஜா மற்றும் சுசிலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமா (நெதர் லாந்து), சுப்பையா-தேவதாஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற முத்துக்குமார் - கிருஸ்ணகுமார் மற்றும் தியாகராஜா - நீதிராஜா (ஆசிரியர், கிளி உருத்திரபுரம் ம.வி) ஆகியோரின் அன்பு மாமனும், நெதர்லாந்தைச் சேர்ந்த விதுஷன், அபிராம், பிரான்ஸ்சைச் சேர்ந்த சுஜீவன், யதுசன், மிதிலா, நிஷிக்கா, நவீனன், துஷ்யந்தன் (களனி பல்கலைக்கழக மாணவன்), சுகன்யா, ஆதித்தன், (திருவையாறு ம.வி மாணவர்களான யதார்த்தன், சுஜாத்தன், சுஜார்த்திகா, சாகித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும், தெய்வானை, செல்லம்மா, மகேஸ்வரி (ஓய்வுபெற்ற கூட்டுறவுச் சங்க முகாமையாளர்-பரந்தன்), காலஞ்சென்ற யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான றெஜினா செல்வராணி, மரியநாயகம் மற்றும் குணநாயகம் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2015) செவ்வாய்க்கிழமை பி.ப. 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பரந்தன் கோரக்கன்கட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

D5 கமரிக்குடா,
பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.
தியாகராஜா நீதிராஜா (மருமகன்)
தொலைபேசி 077 9060758

## மரண அறிவித்தல்



### குமாரசாமி கனகசுந்தரம்

நீர்வேலி வடக்கு, காமாட்சி அம்பாள் கோவிலடியைச் சேர்ந்த குமாரசாமி கனகசுந்தரம் 09.09.2015 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நடராசா செல்வரத்தினத்தின் அன்புப் பெறாமகனும் வைத்திலிங்கம் - தையல்முத்து (சிறுவிளான்) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ரகீதன், கௌசலா (அவுஸ்திரேலியா), கலாஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவசுதன் (அவுஸ்திரேலியா), விண்ணிலா (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருஜனின் (அவுஸ்திரேலியா) அன்புப் பேரனும், கமலாம்பிகை, மகேஸ்வரி, குணவதி (ஜேர்மனி), மதிவதனா, ரவிச்சந்திரன் (பிரணவன் ஹாட்வெயார்ஸ், நீர்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வரதராசா (ஜேர்மனி), சோதிராசா (அளவெட்டி), குனேஸ்வரி (ஜேர்மனி), காசிநாதர், லோகசரோஜா (கனடா), கௌரி (ஜேர்மனி), சரோஜினி (பிரான்ஸ்), கிருஷ்ணதாசன், சிவராசா (ஜேர்மனி), மோகனதாஸ், சுபேந்திரா ஆகியோரின் மைத்துனரும், சிவகாமசுந்தரி (ஜேர்மனி), புனிதவதி (யா/அளவெட்டி அ.மி.த.க. பாடசாலை), ஸ்ரீசெல்வநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் நீர்வேலி, சிவியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காமாட்சி அம்பாள் கோவிலடி,
நீர்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பிக்குணிகள் வருகையை தடுக்கத் தாய்லாந்து ஆலோசனை

***சமூக கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு***

சமூக கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு இலங்கை பிக்குணிகளின் வருகையைத் தடை செய்வதற்கு தாய்லாந்து ஆலோசித்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையும் தாய்லாந்தும் பௌத்த நாடுகளாக இருந்த போதிலும் இலங்கையில் தேரவாத பௌத்தமும், தாய்லாந்தில் மகாயான பௌத்தமும் பின்பற்றப்படுகின்றது.

மகாயான பௌத்தத்தில் பெண்கள் பிக்குணிகளாக துறவறம் மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் போன்று வெள்ளை ஆடையில் பெண் பிக்குணிகள் காட்சியளிப்பதுடன், அவர்களுக்கு சமூகத்தில் அங்கீகாரம் வழங்கப்படுவதும் இல்லை.

இந்த நிலையில் இலங்கை பிக்குணிகளின் வருகை காரணமாக தாய்லாந்து நாட்டில் வாழும் பௌத்தர்கள் மத்தியிலும் பெண்களின் துறவற ஆர்வம் அதிகரித்து வருகின்றது. அத்துடன் இலங்கையில் போன்று தங்களுக்கும் அரச மற்றும் சமூக அங்கீகாரம் கோரி தாய்லாந்து பிக்குணிகளும் போராடத் தொடங்கி விட்டனர்.

இது அந்நாட்டின் சமூக கட்டமைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் இலங்கையிலிருந்து பிக்குணிகள் வருவதைத் தடை செய்ய தாய்லாந்து ஆலோசித்து வருகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)


**விற்பனைக்கு**

Photocopy இயந்திரம் (New Model) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு. 0773302853

**கட்டட இடிபாடுகள் தேவை**

வலிகாமம் பிரதேசங்களில் பழையகட்டடங்கள் இலவசமாக இடித்து அகற்றித்தரப்படும்.

தொடர்பு. 0768622764

**பணியாளர்கள் தேவை**

- வீடியோ எடிற்றர்
- போட்டோ டிசைனர்
- போட்டோ பிறின்டர்
- பனர் பிறின்டர்
- வீடியோ , போட்டோ படப்பிடிப்பாளர்கள்

ஆகிய பதவிகளுக்கு ஆளணியினர் தேவை.
பயிற்சி பெற விரும்புபவர்களும்.
(ஆண், பெண் இருபாலரும்) விண்ணப்பிக்கலாம்.

20.09.2015 இற்கு முன்னர்

விண்ணப்பிக்கவும் K.D.M. கலர் லப்

இராசவீதி, அச்சுவேலி 077 634 1239


**மரண அறிவித்தல்**

**ஆறுமுகம் கமலாம்பிகை**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கமலாம்பிகை நேற்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :
ஆ.ஞானம் (மகன் ஆசாரி நயினாதீவு)

**மரண அறிவித்தல்**

**சிவசுப்பிரமணியம் சண்முகரத்தினம்**



அராலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சண்முகரத்தினம் 12.09.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு புதல்வனும் நேசமணியின் அன்புக் கணவரும் துவாரகாவின் பாசமிகு தகப்பனாரும், தருமலிங்கம் (முழங்காவில்), விமலநாதன், ஆனந்தவாசன் (ரைக்ரர் மெக்கானிக் CTB), சத்தியேந்திரா (அமெரிக்கா), சிறிதரன் (மின் இணைப்பாளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சாரதாதேவி, அனுசா (ஆசிரியை), சசிகலா, புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், குகப்பிரியா, மதிவதனன், காலஞ்சென்ற மீரா, லவதீசன், திசாந்தன், ஆர்த்திகா, ஆதித்தன், கேசினி, ஆரணி, சந்தியா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 9.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி, அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்.
0777570190


**NEW SCIENCE HALL**

SINCE 1988 KANNATHIDDY ROAD, JAFFNA.

**DAY CLASSES**

திங்கள் – வெள்ளி

2015 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குரியது

| | |
|---|---|
| PHYSICS | திரு. S.சோதிலிங்கம்<br>திரு. G.பிரபா |
| CHEMISTRY | திரு. K.சிவத்திரன் , திரு. S.T.உமாசங்கர்<br>(PAST PAPER) (MODEL PAPER)<br>திரு. T.சுசாந்தன் , திரு. G.BENO |
| BIOLOGY | வழமையான ஆசிரியருடன்<br>திரு. T.கெங்காதரன் |
| COM.MATHS | திரு. P.செந்தில் நாதன்<br>திரு. S.சிவகரன் |

ஆரம்பம் - 16/09/2015 WEDNESDAY 7.30AM

தொடர்புக்கு :- 0777917611

https://facebook.com/newsciencehalljaffna

GATEWAY Language Centre

**GATEWAY** LANGUAGE CENTRE

**General English**
*for School Leavers*
பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறி

6 மாத காலத்தில் மொழியொன்றை கற்றுக்கொள்ளுங்கள்

மாதாந்தம் ரூபா 1000.00 மட்டுமே

**General Sinhala**
*for School Leavers*
பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கான சிங்களக் கற்கை நெறி



தொழில் புரியும் மற்றும் தொழில்வாய்ப்பினை தேடுபவர்களுக்கான வகையிலும் தகுதி மிக்க விரிவுரையாளர்களினால் வார மற்றும் வார இறுதி நாட்களில் விரிவுரைகள் நடைபெறும். வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தங்கள் பதிவுகளினை விரைவாக மேற்கொள்ளவும்

**Hotline : 0716 362 362**

# 39, College Road, Neeraviady, Jaffna Tel: 021 492 7456 Fax: 021 221 7780

Email: gatewayjfn@sltnet.lk / Web: www.gatewayworldwide.com / FB: www.facebook.com/jaffnagateway

| Nelliady Branch: | Chavakachcheri Branch: | Kilinochchi Branch |
|---|---|---|
| *#55, Point Pedro Road, Nelliady.* | *#1, New Market Building Chavakachcheri.* | *Karadippokku Junction, A9 Road, Kilinochchi.* |
| *021 492 7457* | *021 492 7432* | *021 492 7454* |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இலங்கையில் அறவேயில்லை

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

கண்டி, செப்.14

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இலங்கையில் செயற்படவில்லை என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் தீவிரவாத செயற்பாடு காணப்படுவதற்கான எவ் வித ஆதாரங்களும் கிடையாது என அது தெரிவித்துள்ளது.

இலங்கையர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்து கொண்டதாக தகவல்கள் வெளியான போதிலும், இலங்கையில் தீவிரவாத இயக்கத்தின் செயற்பாடுகள் இருப்பதற்கான எவ்வித உறுதியான ஆதாரங்களும் கிடையாது என புதிதாக பதவியேற்றுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:–

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.இலங்கையின் தேசியப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் எவ் வித தளர்வும் ஏற்படுத்தப்படவில்லை. பாதுகாப்புப் படையினர் முக்கிய கேந்திர நிலையங்களில் தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

வீட்டிற்கு கள்வன் புகுந்து விட்டால் அதன் பின்னர் கொள்ளைகள் குறித்து விழிப்புடன் இருப்போம். அது போன்று பாதுகாப்புப் படையினரும் விழிப்புடன் இருக்கின்றனர்.

பயங்கரவாதிகளினால் மட்டும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதில்லை. இலங்கையின் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களும் ஓர் வகையில் அச்சுறுத்தலேயாகும் . பொருளாதாரப் பயங்கரவாதிக ளாகவே அவர்களை பார்ப்ப தாகவும் அவர் தெரிவித்துள் ளார். (ற–வ)

# வினாத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பம்

முதலாம் கட்டமாக கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியூ. என். ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்காக 7 ஆயிரத்து 600 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், 23 பாடசாலைகள் பயன்படுத்தப் படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

8 பாடசாலைகள் முழுமையாகவும் 17 பாடசாலைகள் பகுதியள விலும் பயன்படுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 மாவட்டங்களின் 20 நகரங்களில் வினாத்தாள்களை மதிப்பீடு செய்யும் முதலாம் கட்ட நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதுடன், எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 8ஆம் திகதி வரை இரண்டாம் கட்ட திருத்தும் பணிகள் இடம்பெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ற)

## கட்டளை

இரகசியமாக வைக்கப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது.

இந்தத் தகவல்களை கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

இந்த விசாரணை அறிக்கையிலிருந்து கசிந்த தகவல்களின் அடிப்படையில் அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இந்த விசாரணை அறிக்கையில், இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த அறிக்கையில் எந்த அரசியல்வாதிகளினதோ அல்லது போரில் பங்கெடுத்தவர்களினதோ பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

எங்கு மீறல்கள் இடம்பெற்றது என்ற பரப்பை வைத்து, கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் கட்டளைச் சங்கிலியை அடையாளம் கண்டு, அதில் தொடர்புடையவர்களை அடையாளம் காண்பது கடினமல்ல என்றும் கூறப்படுகிறது.

அத்துடன் போரால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு, திட்டமிட்ட அடிப்படையில் உணவு, மருந்துப் பொருள்களை வழங்க மறுத்ததாக முன்னைய அரசு மீது கடுமையான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையால் 3 லட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் பாதிக் கப்பட்டுள்ளனர் என்ற முல்லைத் தீவு அரச அதிபரின் அறிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ற,வ–5)

## பிரதமர்

தலைமையிலான குழுவினருக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நாளைக் காலை புதுடில்லியில் உள்ள ஹைதராபாத் ஹவுசில் பேச்சு நடைபெறவுள்ளது.

அதன் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குழுவினருக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மதியபோசன விருந்து அளிக்கவுள்ளார்.

இந்தப் பேச்சின் போது பல்வேறு இருதரப்பு உடன்பாடுகளும் கையெழுத்திடப்படும். பிரதமர், இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியையும் சந்தித்துப் பேசுவார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, புதுடில்லியில் அவர் தங்கியிருக்கும் விடுதியில், இந்தியாவின் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி, புகையிரத அமைச்சர் சுரேஸ் பிரபு, எதிர்க்கட்சித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் என்றும் புதுடில்லி தகவல்கள் தெரிவித்தன. (ற–வ)

## இந்திய

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுவதும், இந்திய கடற்பரப்பில் இலங்கை மீனவர்கள் கைதுசெய்யப்படுவதும் தொடர்கதையாகவுள்ள நிலையில் கடந்த காலங்களில் இது குறித்து நடத்தப்பட்ட பேச்சு அனைத்தும் நிரந்தர தீர்வின்றியே முடிவடைந்தன.

இந்நிலையில் இன்று இந்தியா செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் பேச்சு நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## ஐ.நா. மனித

போதும், இலங்கை குறித்த விடயங்களை மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் செயிட் அல் ஹுசைன் முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், இலங்கை சார்பில் இந்த அமர்வில் கலந்துகொள்ளவுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இன்று விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார். இதன் போது இலங்கையின் உள்நாட்டு பொறிமுறை தொடர்பான முழுமையான விளக்கமளிப்பை அவர் முன்வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக, விசேட விசாரணை அறிக்கை இந்த அமர்வின் போது சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதனால் இலங்கைக்கு முக்கியமான அமர்வாக அமைகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் தயார்படுத்தப்பட்டுள்ள இந்த விசேட விசா ரணை அறிக்கையின் இரண்டு பிரதிகள் இலங்கை அரசிடம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் குறித்த அறிக்கைக்கு இலங்கை அரசு பதில் அறிக்கையை வழங்குவதற்கு தயார்படுத்தி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த அறிக்கை எதிர்வரும் 30ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனை அடுத்து ஏற்கனவே அமெரிக்க உதவி ராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வால் அறிவித்ததன்படி, இலங்கையின் உள்நாட்டு விசாரணைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான அமெரிக்காவின் பிரேரணை ஒன்று முன்வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்றுள்ள நிலையில், தற்போது இந்தியாவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, எதிர்வரும் நாள்களில் ஜெனிவா சென்று அவர்களுடன் இணைந்து கொள்ளவுள்ளார்.அவர்களுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் சட்டத்தரணிகள் குழு ஒன்று சென்றுள்ளது என்று கூறப்படுகிறது.

இதேவேளை ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் அமர்வு, ஆர்வம்மிக்கதொன்றாக அமையும் என்று ஐ.நா மனித உரிமைகள் சபையின் தலைவர் ஜோகிம் ரூக்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபையின் தலைவராக நியமிக்கப்பட்ட, முன்னாள் ஜேர்மனிய இராஜதந்திரியான ஜோகிம் ரூக்கர் இந்திய ஊடகமான 'பிரிஜ'க்கு வழங்கியுள்ள செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பாக தனது அலுவலகம் மேற்கொண்ட விசாரணையின் கண்டறிவுகளை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன், சபைக்குச் சமர்ப்பிக்கவுள்ளார்.மீண்டும் ஒரு முறை, இது ஆர்வம்மிக்க ஒரு அமர்வாக இருக்கும்.

நாடுகள் தொடர்பாக, குறிப்பாக, கொங்கோ ஜனநாயக குடியரசு, இலங்கை ஆகியன குறித்து பேசப்படவுள்ளது. உக்ரேன் மற்றும் சிரியா குறித்தும் மீண்டும் ஒரு முறை பேசுவோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற–வ)

## ஜெனிவாவில் மங்கள

அவை மேலும் குறிப்பிட்டன.

இதேவேளை ஐநா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் செயிட் அல் ஹுசைனை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான இலங்கைக் குழுவினர் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்த சந்திப்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ் ரின் பெர்னாண்டோ , ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. எனினும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ள விசாரணை அறிக்கைக்கு எழுத்து மூல பதில் இந்த வாரம் ஒப்படைக்கப்படும் என்று இலங்கைக் குழு தெரிவித்துள்ளது என அறிய முடிகின்றது.

அத்துடன் அமெரிக்காவால் கொண்டு வரப்படவுள்ள இலங்கை அரசின் உள்ளக விசாரணைக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்துக்கு அமைய குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் அதனை நிறைவேற்ற தாம் தயாராக இருக்கின்றோம் என்றும் இலங்கைக்குழு மனித உரிமைகள் ஆணையாளரிடம் எடுத்துரைத்தது என்று ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற–வ)

## சர்வதேச

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

போர்க்குற்ற விசாரணை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு, இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவும் வகையில் இருக்காது என்பது நேற்றுமுன்தினம் தெளிவாகியுள்ளது.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளருக்கு அனுப்புவதற்கான கடிதம் ஒன்றை வரையும் பணியில் நேற்றுமுன்தினம் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

அந்தக் கடிதத்தில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரை ஜெனிவாவில் சந்திப்பதற்கான விருப்பத்தை வெளியிடவுள்ளார். சர்வதேச விசாரணைக்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் ஆதரவைப் பெற வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. (ற–வ)

## ஜெனிவாவில்

மேற்கொள்ளப்பட்ட இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பிலான விசாரணை அறிக்கை அடுத்த வரும் நாள்களில் மனித உரிமைகள் சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த விசாரணை அறிக்கையில், இலங்கையில் போரில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளும் அரச படைகளும் பெரியளவில் போர் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்ற கடும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய கடமை இலங்கை அரசுக்கு உள்ளது. அதனால் அடுத்து வரும் தினங்களில் ஜெனிவாவில் இலங்கை அரசு பெரும் சவால்களை எதிர்கொள்ளும் என இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதிலிருந்து தப்பித்துக் கொள் வதற்கு இலங்கை அரசு இரு முனைகளில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் ஜெனிவாவுக்கு வந்துள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினர், மனித உரிமை சபையின் உறுப்பு நாடுகளிடம் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் மறுமுனையில் புதுடில்லிக்கு செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்காவால் இலங்கை அரசுக்கு ஆதரவாகக் கொண்டுவரப்படும் தீர்மானத்துக்கு இந்தியாவின் ஒத்துழைப்பைக் கோரவுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டிலிருந்து அமெரிக்கா, இந்தியாவின் ஆதரவுடன் இலங்கை தப்பித்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளது என்று இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ற–வ)

## மஹிந்த

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிடு கையிலேயே கட்சியின் பரப்புரைச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவை எண்ணிக்கை அதிகரிப்பு தொடர்பாக பலகோணங்களில் பேசப்பட்டுவருகிறது. அமைச்சரவை எண்ணிக்கை 30ஆக வரையறுக்கப்படும் என்றும், புத்தி ஜீவிகளே அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதித் தேர்தலின்போது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்திரு ந்தார் என்று குறிப்பிட்ட விஜித ஹேரத், தற்போது அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் நாட்டில் குடும்ப ஆட்சி இருந்தது. தற்போது அது கூட்டாட்சியாக மாறியுள்ளது. அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு அதன் சுமைகள் மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ளன.– என்றும் அங்கு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

உலகிலேயே பெரிய அமைச்சரவையை நியமித்துள்ளார் என்பது தான் கடந்தகாலங்களில் மகிந்த ஆட்சிக்கு இருந்த முக்கிய விமர்சனம். அமைச்சரவை எண்ணிக்கை 106ஆக இருந்தது. இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காகவே ராஜபக்ச ஆட்சியை மக்கள் தோற்கடித்தனர். எனினும், ராஜபக்ச ஆட்சியை விஞ்சுமளவுக்கு அமைச்சர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் 93 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். 22 மாவட்ட அமைச்சர்களை நியமிப்பதற்கும் அரசு உத்தேசித்துள்ளது. இதன்படி அமைச்சர்களின் எண்ணிக்கை 115 ஆக உள்ளது. இதுவா நல்லாட்சி?– என்றார். (ற)

## ஐ.நா. அறிக்கை

அத்துடன் இந்த அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் நேற்று விவாதித்துள்ளனர். இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பங்கேற்றார் என அவை தெரிவித்தன.

ஐ.நா. விசாரணை அறிக்கை தொடர்பில் மகிந்த சமரசிங்க தலைமையிலான நிபுணர்கள் குழு ஆராய்ந்து வருவதாகவும் கொழும்பு செய்திகள் மேலும் தெரிவித்தன. (ற–வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியடைந்த வேட்பாளருக்கு தேசியப் பட்டியலில் சந்தர்ப்பம்

## தவறில்லை என்கிறார் அமைச்சர் துமிந்த

கொழும்பு, செப்.14
பொது தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு தேசிய பட்டியலில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை தவறில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொது செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.
கண்டியில் நேற்று அஸ்கிரி மல்வத்த மகாநாயக்கர்களை சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். இதன் போது அவர் தெரிவித்துள்ளதாவது:-
இதில் எந்தவிதமான தவறும் இல்லை. தேர்தல் சட்டவிதிகளுக்கு அமைய, தேர்தலில் போட்டியிட்ட அல்லது தேசிய பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்க முடியும் என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.
தேவையான சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்காகவே சட்டமுறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
இது எங்களது கட்சி மாத்திரமல்ல ஜே.வி.பியும் இது போன்ற செயலை மேற்கொண்டுள்ளது.
எனினும் எமது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. களவு, மோசடி, ஊழல் என்பவற்றை நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. பிரதான இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டை நிர்வகிப்பது தொடர்பில் மகாநாயக்கர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதாக வும் அமைச்சர் துமிந்த திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ந-வ)

# துணை ஆயுதக்குழுவுக்கு 1000 ரி-56 துப்பாக்கிகள்

## மகிந்த ஆட்சியில் வழங்கப்பட்டதை துருவிப் பிடித்தது குற்றப்புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, செப்.14
மகிந்த அரசினால், ஆயிரம் ரி-56 துப்பாக்கிகள் துணை ஆயுதக் குழுவொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதாக, குற்றப்புலனாய்வுப் பிரிவு நடத்திய விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
முன்னர் துணை ஆயுதக் குழுவொன்றின் தலைவராக இருந்து, பின்னர் அரசியலுக்கு வந்த ஒருவரிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்திய விசாரணைகளில் பெருமளவு ஆயுதங்கள் கைமாறப்பட்டது பற்றிய விவரங்கள் கண்ட றியப்பட்டுள்ளதாக, குற்றப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.
முன்னைய அரசின் உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரிலேயே, ஆயிரம் வரையான ரி- 56 துப்பாக்கிகளும், மேலதிகமாக கைத்துப்பாக்கிகளும் இந்த துணை ஆயுதக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன.
இந்த ஆயுதங்கள் துணை ஆயுதக் குழுவினருக்கு ஏன் வழங்கப்பட்டன, இவற்றை அவர்கள் எதற்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்ற விவரங்களைக் கண்டறியும் விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.
மேலும், இந்த ஆயுதங்கள், பாதாள உலக குழுக்களிடம் சென்றதா என்பது பற்றிய தகவல்களையும் அவர்கள் திரட்டி வருகின்றனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-வ)

# அரச சொத்து துஷ்பிரயோகம் குறித்த முறைப்பாடுகள் கோரப்படுகின்றன

கொழும்பு, செப்.14
அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை குறித்த முறைப்பாடுகள் இருப்பின், அவற்றை முன்வைக்குமாறு பெரியளவிலான ஊழல் மற்றும் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு பொது மக்களிடம் கோரியுள்ளது.
அதன் செயலாளர் லெசில் டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை குறித்து, பொது மக்களால் வழங்கப்படுகின்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை தொடர ஆணைக்குழு தயாராக இருக்கின்றது.
கடந்த ஐந்து மாதங்களில், முன்னாள் அரசினால் மேற்கொள்ளப்பட்ட அரச சொத்துக்களின் துஷ்பிரயோகம் குறித்த 900க்கும் அதிகமான முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் 250 முறைபாடுகள் குறித்த விசாரணைகள் தற்போதும் இடம் பெற்று வருவதாக அவர் கூறியுள்ளார். (ந-வ)

# டெங்கு நுளம்புகள் அபாயமுள்ள பகுதிகளுக்கு சிவப்பு அறிவித்தல்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, செப்.14
டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயமுள்ள பகுதிகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கும் புதிய திட்டமொன்றை, ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் ஹசித திசேரா கூறுயுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாட்டில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயமுள்ள 7500 பகுதிகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு இனங்காணப்பட்ட பகுதிகளை சுத்தப்படுத்துவதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தில், இதுவரையான காலப்பகுதியில் 1700 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
அத்துடன் நுளம்புகள் பரவக்கூடிய வகையிலான 52 ஆயிரம் இடங்கள் இனங்காணப்பட்டுள்ள துடன், 6200 பகுதிகளில் நுளம்புக் குடம்பிகள் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(ந-வ)

# கட்டுநாயக்காவில் பிரிட்டன் பிரசை கைது

கொழும்பு, செப்.14
மதுபோதையில் அநாகரிமான முறையில் செயற்பட்ட பிரிட்டன் பிரசை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிச்செல்லும் பகுதியில், நேற்றுமுன்தினம் மாலை இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட 55 வயதுடைய குறித்த பிரிட்டன் பிரசை பின்னர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இவர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-வ)




# ரயிலில் பயணம் செய்த போக்குவரத்து அமைச்சர்



போக்குவரத்து துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உடரட மெனிக்கே ரயிலில் கொழும்பில் இருந்து பதுளைக்கு கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின் இடையில் ஹற்றன் ரயில் நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள போக்குவரத்து அமைச்சர்- இந்த ரயிலில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு சிறந்த சேவையை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தற்போது காணப்படுகின்ற-குறைநிறைகளை அறிந்து கொள்வதற்காக குறித்த ரயிலில் நான் பயணம் செய்கின்றேன்.
பின்தங்கிய நிலையில் காணப்படும் ரயில் சேவையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
தற்போது கிடைத்திருக்கும் போக்குவரத்துத்துறை அமைச்சு எனக்கு சவால் இல்லை. இதற்கு முன்னர் பதவி வகித்த அமைச்சுக்களை சரிவர நிர்வகித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ந-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவஜீவன்ஸ், இளைஞர் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றன

கரணவாய், செப். 14
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**நவஜீவன்ஸ் எதிர் மைக்கல்**
முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலிசந்தி மைக்கல்விளையாட்டுக்கழகமும்மோதின. ஆரம்பம் முதல் ஆட்டத்தை தமது ஆதிக்கத்தில் வைத்திருந்த நவஜீவன்ஸ் அணி 5:0 என்ற கோல்



கணக்கில் இலகுவெற்றிபெற்றது. நவஜீவன்ஸ்சார்பாகஉசானந், பொபிநாதன் இருவரும் தலா 2 கோல்களையும், சுரேஸ் ஓர் கோலையும் பதிவு செய்தனர்.

***இளைஞர் எதிர் சிவகுமரன்***
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆரம்பத்தில் இரு அணியினரின் ஆட்டத்தில் எந்தவிதமான மாற்றங்களும் இருக்கவில்லை. ஆயினும் நேரம் செல்லச்செல்ல இளைஞர் அணியின் ஆதிக்கம் மேலோங்க ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் இளைஞர் அணியின் ஆதிக்கத்தை மட்டுமே ஆட்டத்தில் காணமுடிந்தது. முடிவில் அந்த அணி 6:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. இளைஞர் அணி சார்பில் அகிலதீபன் 4 கோல்களையும் பிரகலாதன், அரிகரன் மற்றும் சயந்தன் ஆகியோர் தலா ஓர் கோலையும் பதிவுசெய்தனர். சிவகுமரன் அணிசார்பாக ஓர் கோலைப் பதிவுசெய்தார்.
(ம-108)

## இன்றைய மோதல்கள்

**உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தொடர்**
யாழ்ப்பாணம், செப். 14
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பாஷையூர்சென்அன்ரனிஸ்அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது.

**பண்டாரவன்னியன் கிண்ணத் தொடர்**
வவுனியா லீக்கின் முதற்தர அணிகளுக்கு இடையிலான பண்டாரவன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.
(ம-23)

**நியூட்டன் வி.கழகத் தொடர்**
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும்முதலாவது ஆட்டத்தில்தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.
(ம-108)

## பிரிவு இரண்டுக்குள் சென்.மேரிஸ்



யாழ்ப்பாணம், செப். 14
இலங்கை உதபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரிவு மூன்றில் இருந்து பிரிவு இரண்டுக்கு முன்னேறும் அணித்தெரிவின் குழுநிலை இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்று பிரிவு இரண்டுக்கு முன்னேறியுள்ளது.
திருகோணமலையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் திருகோணமலை சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம்சமநிலையில்முடிவடைந்தது. வெற்றி-தோல்வி காண்பதற்காக மேலதிகமாக 10 நிமிடங்கள் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இரண்டு அணியினராலும் கோல்கள் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இரண்டாவதாக வழங்கப்பட்ட வாய்ப்பில் சென். மேரிஸ் அணி மேலதிகமாக ஒரு கோலைப் பதிவுசெய்து 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது பிரிவுக்கு முன்னேறியது. (ம-23)

## அண்ணா வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 14
நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகத்தின் 36ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகம் மற்றும் அண்ணா சனசமூகநிலையம் என்பன இணைந்து தீவக ரீதியில் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நயினாதீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு: – நயினாதீவு அண்ணா 'பி' அணிக்கும் புங்குடுதீவு பாரதி 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி 'பி' அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
புங்குடுதீவு ஐங்கரன் அணிக்கும் புங்குடுதீவு நண்பர்கள் 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எந்தவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் புங்குடுதீவு ஐங்கரன் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
புங்குடுதீவு ஐங்கரன் 'ஏ' அணிக்கும் புங்குடுதீவு பாரதி 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி 'ஏ' அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மெலிஞ்சிமுனை இருதயராஜா அணிக்கும் புங்குடுதீவு நசேரத் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
மெலிஞ்சிமுனை இருதயராஜா 'பி' அணிக்கும் புங்குடுதீவு சென்.சேவியர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலை யில் முடிவுடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் புங்குடுதீவு சென்.சேவியர் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## அரையிறுதியைத் தவறவிட்டது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், செப். 14
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட போட்டிகளின் ஒரு கட்டமான ஆண்களுக்கான ஹொக்கித் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பு ஹொக்கி மைதானத்தில் ஆரம்பமானது. இந்தத் தொடரில் சென்.ஜோன்ஸ் கல்லூரி காலிறுதி வரை முன்னேறி அரையிறுதி வாய்ப்பை இழந்தது.
காலிறுதிக்கு தகுதி பெறும் ஆட்டத்தில் புத்த ஜெயந்தி மத்திய மகா வித்தியாலய அணியை 7:0 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்றஜொனியன்ஸ் காலிறுதியில் நீர் கொழும்பு ஜோசவாஸ் கல்லூரி அணியுடன் மோதிக்கொண்டது. இதில் நீர் கொழும்பு ஜோசவாஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## தவறியது அரையிறுதி

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நேற்று வரை வியாங்கொடை சியன தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்தத் தொடரில் 15வயதுப்பிரிவில் அராலி சரஸ்வதி வித்தியாலயமும், 17 வயதுப்பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிஅணியும் காலிறுதிவரை முன்னேறி அரையிறுதி வாய்ப்பை இழந்தன.

**15 வயதுப்பிரிவு அணி**
15வயதுப் பரிவினருக்கான காலிறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி அணியை எதிர்த்து குருநாகல் பரிசுத்த பெண்கள் பாடசாலை அணி மோதியது. ஆட்டநேரமுடிவில் 18:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் அராலி சரஸ்வதி அணி தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

**17 வயதுப்பிரிவு அணி**
17வயது பெண்களுக்கான காலிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெஹிவளை பெண்கள் பாடசாலை அணி மோதியது. ஆட்டநேரமுடிவில் 24:14 என்று சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியும் அரையிறுதிவாய்ப்பை இழந்தது. (ம-23-422)

## வடக்கு பாடசாலை அணிகள் அரையிறுதிக்கு முன்னேற்றம்

*தேசிய மட்ட கபடிப் போட்டிகளில்*

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கபடிப் போட்டியில் வடமாகாண பாடசாலை அணிகள் அரையிறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.
அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 2015ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட ஆண் பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா தவுவித் மைதானத்தில் இடம்பெற்றது.
இதில் 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து பொதிகாவ வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி 54:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றதுடன் இன்று இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் மட்டக் களப்பு பளுகம கண்டுமணி வித்தியாலய அணியுடன் மோதவுள்ளது.
19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட சாலை அணியை எதிர்த்து தமுத் தேகம மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட சாலை 32:25என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்று அரையிறு தியாட்டத்திற்கு தகுதி பெற்று இன்று நடைபெறும் அரையிறுதியாட்டத் தில் அம்பாறை தேகித்த கண்டிய தேசிய பாடசாலை அணியுடன் மோதவுள்ளது.
15 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை அணியை எதிர்த்து கொறனை தக்ஸ்சிலா மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை அணி 50:32என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. இன்று திங்கட்கிழமை இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் செவனகல மகா வித்தியாலய அணியுடன் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை அணி மோதவுள்ளது.
15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கபடி போட்டித் தொடரின் காலிறுதியாட்டத்தில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க.பாடசாலை அணியை எதிர்த்து அனுராதபுர கோச்சிரத மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க.பாடசாலை அணி 50:32என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றதுடன் இன்று நடைபெறும் அரையிறுதியாட்டத்தில் மகாசேனன் தேசிய பாடசாலை அணியுடன் மோதவுள்ளது.
19வயதுப்பிரிவு ஆண்களுக்கான கபடி போட்டித் தொடரின் காலிறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்துகேகாலை சென் மரியா கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி 12:9 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. இன்று இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் கொறனை தக்ஸ்சிலா மகா வித்தியாலய அணியுடன் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (வ-23)

## செந்தாரகை கழகத்தின் உதைபந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், செப். 14
பூநகரி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழகம் நடத்த திட்டமிட்டிருந்த உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான குறித்த தொடரில் 32 அணிகள் பங்குபற்றுகின்றன என ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 | செப்ரெம்பர் 14 | திங்கட்கிழமை | உதயன்



## எந்த வரிசையிலும் களமிறங்கத் தயார்

இந்திய அணிக்காக எந்த வரிசையிலும் களமிறங்கி துடுப்பெடுத்தாடவும் தயாராக இருப்பதாக அந்த அணியின் நட்சத்திர வீரர் ரகானே தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரகானேயின் துடுப்பாட்ட வரிசை அடிக்கடி மாற்றப்பட்டது. இது தொடர்பாக ரகானே தெரிவித்ததாவது:- இலங்கையில் 3ஆவது இடத்தில் களமிறங்கி அனுபவித்து உற்சாகமாக விளையாடினேன். சதமும் அடித்தேன். வெற்றியும் கிடைத்தது. ஆனால் அணி நிர்வாகம் எந்த வரிசையில் விளையாட சொன்னாலும் அதை செய்ய தயாராக இருக்கிறேன். என்னை பொறுத்தவரை அனைத்து நிலையிலும் களமிறங்கி விளையாட விரும்புகிறேன். உண்மையில் அது தான் முன்னேற்றத்தையும், நம்பிக்கையும் எனக்கு அளிக்கிறது–என்றார். (ம)

# ஒலிம்பிக்கில் போல்டை வீழ்த்துவேன்

## சவாலாக வரும் காட்லின் சபதம்




அடுத்த வருடம் ரியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் நிச்சயம் போல்டை வீழ்த்துவேன் இவ்வாறு தெரிவித்துள்ளார் சமீபகாலமாக போல்ட்டுக்கு பெரும் சவாலாக விளங்கிவரும் காட்லின்.

100 மீற்றர், 200 மீற்றர், 4 பேர் கொண்ட 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் உசைன் போல்ட் தங்கம் வென்றார். இந்தத் தொடரில் அமெரிக்காவின் காட்லின், உசைன் போல்டை வீழ்த்துவார் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், உசைன் போல்ட் அவருக்கு எந்தவொரு இடமும் கொடுக்காமல் 3 தங்கத்தையும் தன் வசப்படுத்திக்கொண்டார்.

இந்நிலையில் அடுத்த வருடம் பிரேஸிலின் ரியோ நகரில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் தொடரில் உசைன் போல்டை வீழ்த்துவேன் என காட்லின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

போல்டை வீழ்த்துவது தொடர்பாக காட்லின் தெரிவிக்கையில்; ஓட்டத்தின் எல்லை மிக மிகச் சிறியது. நான் இன்னும் கொஞ்சம் முயற்சி செய்து என்னுடைய வேகத்தை அதிகரிக்க வேண்டும்.

ஆகவே, அடுத்த வருடம் நான் இதைவிடச் சிறப்பாகச் செயற்பட்டு, போல்ட்டை வீழ்த்துவேன்– என்றார். (ம)



## அறிவிக்கப்பட்டது நியூஸிலாந்து அணி ஆஸிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காக

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக ஓய்விலிருந்த நீஸ்கம் மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார்.

சமீபத்தில் முடிவடைந்த தென்னாபிரிக்க தொடரின்போது ஓய்வளிக்கப்பட்டிருந்த நியூஸியின் மக்கலம், வேகப்பந்து வீச்சாளர் சௌத்தி ஆகியோர் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளனர். காயத்திலிருந்து மீண்டுள்ள ரெய்லர், போல்ட், அண்டர்சன் ஆகியோரும் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

அணி விவரம் வருமாறு:- மக்கலம் (தலைவர்), அண்டர்சன், போல்ட், பிரேஸ்வெல், கிரைக், குப்தில், ஹென்றி, லாதம், நீஸ்கம், ரோஞ்சி, ருதர்போர்டு, சௌத்தி, ரெய்லர், வட்லிங், வில்லியம்சன். (ம)

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள ஜோகோவிக் மற்றும் இரண்டாவது இடத்திலுள்ள பெடரர்.

**ஜோகோவிக் எதிர் சிலிச்**

முதலாவது அரையிறுதியாட்டத்தில் செர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து அமெரிக்கன் ரென்னிஸின் நடப்புச் சம்பியனான குரோசியாவின் சிலிச் மோதினார்.

இதில் ஜோகோவிச் 6:0, 6:1, 6:2 என்ற நேர்செற் கணக்கில் சிலிச்சை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றார்.

**பெடரர் எதிர் வாவ்ரிங்கா**

இரண் டாவது அரையிறுதியாட்டத்தில் தரப்படுத்தலில் 2ஆம் நிலை வீரரும், 5 முறை சம்பியனுமான சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் ஐந்தாம் நிலை வீரரும், சக நாட்டைச் சேர்ந்வருமான வாவ்ரிங்காவை எதிர்கொண்டார்.

இதில் பெடரர் 6:4, 6:3, 6:1 என்ற நேர்செற் கணக்கில் எளிதில் வென்று பெற்றார். இறுதியாட்டத்துக்கு முன்னேறினார். (ம)



மீண்டும் மீண்டும் அதே முகங்கள்



## கிண்ணம் வென்றது பயஸ் - கிங்கிஸ் இணை

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரின் கலப்பு இரட்டையர் பிரிவில் பயஸ் – கிங்கிஸ் இணை கிண்ணம் வென்றுள்ளது.

இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் சாம் கியூரே, பெதானி இணையை எதிர்த்து லியாண்டர் பயஸ் (இந்தியா) – மார்ட்டீனா கிங்கிஸ் (சுவிற்ஸர்லாந்து) இணை மோதியது. இதில் பயஸ்– கிங்கிஸ் இணை 6:4, 3:6, 10:7 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்று அசத்தியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.
உடன் அழைத்து பதிவை உறுதிப்படுத்துக...
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

ஆங்கிலம்
மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் தொழில்புரிவோர், இளைஞர், யுவதிகளுக்கானது.
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் : 19.09.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00
யாழ்நகர் 021 320 3313
தெல்லிப்பழை 021 3200 607
SAAMSON
Experts in English Training
077 621 4567
021 320 3313

CA | aat SRI LANKA | CMA | IBSL
உங்களது இலட்சியங்கள் நனவாக திறமையும் தகமையும் வாய்ந்த பிரபல பட்டயக் கணக்காளர் விரிவுரையாளர்களுடன் இன்றே இணையுங்கள்
- உயர் கல்வி, பல்கலைக்கழகத் தெரிவிற்கான வழிகாட்டல்கள்
- தொழில் வாய்ப்புக்கள் மற்றும் Training வழிகாட்டல்கள் மற்றும் உதவிகள்
- தொழில்சார் திறன் விருத்தி மற்றும் ஏனைய வழிகாட்டல்கள்
- அனுபவமும் திறமையும் கொண்ட தன்னிகரற்ற விரிவுரையாளர்கள்
- சிநேகபூர்வமான வகுப்பறைகள் மற்றும் கற்றல் வசதிகள்
- தொழில்சார் அமைப்புக்களுடன் இணைந்த மாணவர் நல வசதிகள்

Chartered, AAT வகுப்புக்கள் ஆரம்பம் 19/09/2015
ஒப்பற்ற திறமையும் அனுபவமும் வாய்ந்த உயர்தொழிற் கற்கைகளின் விரிவுரையாளர்களுடனான யாழ் மண்ணின் முன்னணி தொழில்சார் கல்விச் சேவை நிறுவனம்
INSTITUTE OF BUSINESS MANAGEMENT
No. 01, 2nd Lane, Power House Road, Jaffna (Near Jaffna Bus Stand)
Phone: 021 222 4111 | Hot Line : 0777 83 66 53

# தேசிய மட்ட அரைமரதன் ஓட்டம்

## ஒட்டுசுட்டான் ம.வி. மாணவன் 5ஆம் இடம்

மாங்குளம் செப். 14

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் தேசிய மட்ட போட்டிகளின் ஒருகட்டமான ஆண்களுக்கான அரைமரதன் ஓட்டத்தில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவன் பி.ஜனார்த்தனன் 5ஆம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

27 கிலோ மீற்றர் தூரம்கொண்ட இந்தப் போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம் சுவர்ணபாலய மகளிர் கல்லூரியிலிருந்து காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகியது. இதில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பி.ஜனார்த்தனன் ஒரு மணித்தியாலம் 26நிமிடங்கள் ஒரு செக்கனில் ஓடிமுடித்து 5ஆம் இடத்துக்கான சான்றிதழைப் பெற்றுள்ளார். (ம-422)



# தலைமையில் டோனிக்கு நிகரானவர் கோக்லி

தலைமைத்துவத்தில் டோனிக்கு நிகரானவர் கோக்லி. இந்திய அணியின் தலைமைத்துவப் பொறுப்பை கோக்லியிடம் வழங்குவதற்கு இதுவே சரியாண தருணம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் கலிஸ்.

டெஸ்ட்டில் டோனியின் ஓய்வையடுத்து இளம் வீரரான



கோக்லிக்கு டெஸ்ட் அணித் தலைவர் பதவி வழங்கப்பட்டது. சமீபத்தில் இலங்கை சென்ற இந்திய அணி இவர் தலைமையில் டெஸ்ட் தொடரை 2–1 என்ற கணக்கில் கைப்பற்றி சாதனை படைத்தது. இதனையடுத்து அனைத்துவித தொடர்களின் தலைவர் பதவியையும் கோக்லிக்கு வழங்க அணித் தெரிவாளர்கள் ஆலோசனை நடத்துவதாக தகவல் வெளியாகியது.

இது தொடர்பாக முன்னாள் வீரர் கலிஸ் தெரிவித்ததாவது– கோக்லிக்கு நெருக்கடியான காலகட்டத்தில் எப்படி செயல்பட வேண்டும் எனத் தெரிகிறது. இவருக்கு இந்திய அணியை மூன்று விதமான தொடரிலும் வழி நடத்தும் திறமை உள்ளது. இதனால், டோனியிடம் உள்ள தலைவர் பதவியை இவருக்கு தர வேண்டும். கோக்லி நிச்சயம் சாதிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல உலகில் பலருக்கும் தாராளமாகவே உள்ளது–என்றார். (ம)

Sky Computers (Pvt) Ltd
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 16-09-2015
* Dip.in Ms Office 2013 - 3 Months
* Dip.in DTP - 3 Months
* Dip.in Web Design - 4 Months
* Dip.in Hardware - 2 Months
* Dip.in Com-Accounting - 3 Months
* Dip.in Software Development- 6 Months
* Dip in Graphic Design - 3 Months
* Internet & E-mail - 1 Month
* Computer Type Setting - 2 Months
* Kids Program (சிறுவர்களிற்கானது)
உங்களிற்கு விருப்பமான நேரத்தைத் தெரிவுசெய்து கற்க முடியும்
மிகக் குறைந்த கட்டணம் | அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
தொ.பே: 021-222-1417
89,கண்டி றோட், யாழ்ப்பாணம்

VACANCY
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய இடங்களில் பிராந்திய காரியாலயங்களைக் கொண்ட கணினி பயிற்சி நிலையம் ஒன்றுக்கு கணினி பயிற்றுவிப்பாளர் மற்றும் வரவேற்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பதாரிகள் 20-25 வயதுக்குட்பட்டவர்களாகவும், கணினி பாவனையில் தேர்ச்சிபெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- முன்னனுபவமுள்ளவர்களுக்கும், பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.
- அந்தந்த பிராந்திய விண்ணப்பதாரிகளே கருத்தில் எடுக்கப்படுவர்.
மேற்படி தகுதியுடையவர்கள் தங்களது சுயவிவரக் கோவையை 19.09.2015 இற்கு முன்னதாக jaffnavacancy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
விளம்பர இலக்கம் 5076
C/o:உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/18673)(10.17)

"இளையோர்களின் எதிர்காலத்துக்கான உத்தரவாதம்..."
O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்கல்வி பட்டப்படிப்பு கற்கை நெறிகள் ஆரம்பம்.
SRI LANKA UGC APPROVED CERTIFICATE
*Bsc. in Computer Science
*Top Up Program (1 Year)
*Post Graduate Diploma in Computer Science
*Msc in Computer Science
*MBA
*DBA
North Lanka IIT,
Top Floor, People's Bank Building,
Stanley Road, Jaffna.
Telephone : 0777592666,0214927088

After A/L?
IIS உடன் இணைந்து உங்கள் வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
BTEC HND in Computing and Systems Development
Bsc. Information Technology
Hotline 071 777 5666
New Batch Starts on 28.09.2015
IIS CITY CAMPUS
200, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும்
After AL What Next?
உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு
Spoken English with Grammar 1½ Months
100% பயிற்சி | 100% வெற்றி
Diploma In English 2½ Months
Excellent Teachers' Panel & Individual Attention
Spoken English with Grammar: Rs.10'000 Rs.7'500
Diploma in English: Rs.14'000 Rs.9'500
Batches Start On
16.09.2015 @ 9.00 am | 19.09.2015 @ 9.00 am | 21.09.2015 @ 2.00 pm | 23.09.2015 @ 9.00 am | 26.09.2015 @ 9.00 am
BCHS
No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
...24550, 0777222422, 0776555677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.